REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்

40.00



# சமஷ்டி: முன்பு முயற்சித்துப் பார்த்து பின்பு கைவிட்ட விவகாரம்

# பேச்சு என்றால் யாருடன் பேச்சு?

## மாவீரர் உரை, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி அடுத்த மாதத்தில் வரும் முக்கிய விடயங்கள்

யாழவன்

சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் சமாதானமா, போரா அடுத்த இலக்கு என சகல மட்டங்களிலும் எதிர்பார்க்கப்படும் நிலையில் -

மீண்டும் பேச்சு பேச்சு என்ற கோஷம் சர்வதேச மட்டத்தில் மட்டுமல்லாது, தெற்கிலும் தினமும் செய்தியாகிக் கொண்டிருக்கின்றது.

இனமோதல்களில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பு, மறுதரப்பை பயங்கரவாதிகள் என்று வர்ணித்து பயங்கரவாதத்துக்கு எதிரான போரை முன்னெடுக்கின்றோம் என்று அறிவித்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் -

மறுதரப்பு சமாதானத்தில் நாட்டம் கொண்டவர்களாகத் தெரிவித்து அமைதியாகவும் - மௌனமாகவும் - இருக்கையில் -

பேச்சு என்ற கோஷம் சர்வதேசத்தில் மட்டுமல்லாது, தெற்கிலும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இனிப் பேச்சு என்றால் இந்த அரசாங்கத்துடன் இல்லை என சர்வதேசத்துக்கு மோதலில் சம்பந்தப்பட்ட ஒரு தரப்பான விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்ட நிலையில் -

இலங்கை அரசு யாருடன் பேசப் போகின்றது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி மக்களின் ஆணைக்காக சில கோரிக்கைகளை முன்வைத்தது.

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதற்கும் -

தமிழ் மக்களின் உத்தியோகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடனேயே பேசவேண்டும் என்பதற்கும் - ஆணை வழங்குமாறு கோரி தமிழரசுக் கட்சி போட்டியிட்டது.

அத்தேர்தல் மூலம் 23 நாடாளுமன்ற உறுப்பினர்களை வடக்கு - கிழக்குத் தாயகப்பகுதியில் இருந்து தமிழ் மக்கள் தெரிவு செய்து அந்த ஆணையை வழங்கியிருந்தனர்.

தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றை நோக்கி விடுதலைப் புலிகள் தமது உரிமைப் போராட்டத்தை - விடுதலைப் போராட்டத்தை - முன்னெடுத்து வருகிறார்கள்.

அந்த மக்களின் பாதுகாப்புக்காக தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றை உருவாக்கி அவற்றை விஸ்தரித்தும் வருகின்றனர்.

அந்த மக்களின் ஆட்சி நிர்வாகத்துக்காக, நீதித்துறை, காவல்துறை, நிர்வாகத் துறை, நிதித்துறை, திட்டமிடல்துறை, கல்வித்துறை எனப் பல்வேறு நிர்வாகத் துறைகளை உருவாக்கி நிழல் ஆட்சி ஒன்றையும் ஸ்தாபித்து செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

புத்திஜீவிகளை உருவாக்குவதற்காகத் தனியான பல்கலைக்கழகம், தனியான சட்டக்கல்லூரி, தனியான மருத்துவக் கல்லூரி, தனியான ஊடகக் கல்லூரி என பல்வேறு கட்டமைப்புக்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் தமது தாயகப்பகுதியில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்ற நீண்டதூரக் கனவுடன் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அவை செயலுருப் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பாகவும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் தெற்குத் தலைமைகள் குற்றஞ்சாட்டி அந்த அமைப்பை அழிப்பதற்காகச் சர்வதேசத்தின் ஆதரவைக் கோரி நிற்கின்றன.

தெற்குத் தலைமைகளால் பயங்கரவாத அமைப்பாக இன்று கருதப்படும் அந்த அமைப்பை தமிழ்மக்களின் பிரதிநிதியாக - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக - சமபடை வலுவுள்ள தரப்பாக ஏற்றுத்தான் சர்வதேசத்தின் பிரசன்னத்தில் பேச்சுகளை தெற்குத் தலைமைகள் நடத்தின.

அந்த அமைப்பை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுத்தான் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - இன்று ஆறுவருடத்தை நெருங்கி - நடைமுறையில் இருக்கின்ற - போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.



இரு தரப்பையும் சமதரப்புக்களாகக் கருதியே இன்னமும் அனுசரணையாளர்களான நோர்வேயும் கண்காணிப்பாளர்களான நோர்டிக் நாடுகளும் களத்தில் இருக்கின்றன.

அனுசரணையாளர்களான நோர்வே சரி, கண்காணிப்பாளர்களான நோர்டிக் நாடுகள் சரி, இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் சரி, ஐ.நா.போன்ற சபைகள் சரி, ஏன் தெற்கில் உள்ள தலைவர்கள், ஊடகவியலாளர்கள், ராஜதந்திரிகள் எல்லோரும் சிங்கள மக்களின் தரப்பாக ஆட்சியாளர்களையும் தமிழ் மக்களின் தரப்பாக விடுதலைப் புலிகளையும்தான் கணிக்கிறார்கள். அவர்கள் வெளியிடும் கருத்துக்களும் அந்த வகையிலேயே அமைகின்றன.

நடந்து முடிந்த - ஐ.தே.கட்சியுடனான ஆறு சுற்றுப் பேச்சுகளிலும், மஹிந்த அரசுடன் நடந்த இரண்டு சுற்றுப்பேச்சுகளிலும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டங்களிலும் தமிழர் தரப்பாக விடுதலைப் புலிகளே ஏற்கப்பட்டிருந்தனர்; பங்கு பற்றியிருந்தனர்.

இலங்கைக்கு அபிவிருத்திக்கான நிதி உதவி வழங்கும் டோக்கியோ பிரகடனத்திலும் சரி -

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறு வாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பிலும் சரி - இரு தரப்புகளும் சமமாகக் கணிக்கப்பட்டன.

இரு தரப்புகளும் இணங்கும் பட்சத்தில் மட்டுமே நிதி உதவிகள் வழங்கப்படும் என்றும் சர்வதேசம் தெரிவித்தது.

இரு தரப்புகளும் இணங்காத காரணத்தால் அபிவிருத்திக்கான - ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கான - கோடிக்கணக்கான நிதியை இழக்க நேரிட்டது. அந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படாமல் வேறு நாடுகளுக்கு திருப்பப்பட்ட வரலாறுகள் எல்லாம் பதிவில் உள்ளன.

எதிர்காலத்தில் இலங்கைக்கு உதவி வழங்குவதாக இருந்தால் நாட்டில் சமாதான சூழல் இருக்க வேண்டும் என்று சர்வதேசம் நிபந்தனை விதிக்கின்றது.

அந்த சமாதான சூழல் உருவாக வேண்டுமானால், ஒரு தரப்பான தெற்குத் தலைமையால் மட்டும் ஏற்படுத்த முடியாது. மறுதரப்பான தமிழர் தரப்பின் பங்களிப்பும் சம்மதமும் இணக்கமும் அதற்குத் தேவை.

அந்த வகையில், இரு தரப்புகளும் இணைந்து பேச்சுகள் மூலம் தீர்வைக் கண்டு, சமாதான சூழலை உருவாக்குங்கள் என்று சர்வதேசம் வலியுறுத்தி நிற்கின்றது.

இந்நிலையில், கடந்தகால வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்ப்பது நல்லது.

'சமாதானம் என்றால் சமாதானம்', 'போர் என்றால் போர்' என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, இந்தியாவின் உதவியுடன் தமிழர் தரப்புடன் அதாவது விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்துடன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்தார். அதன் தொடராக வடக்கு - கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு - ஆட்சி நிர்வாகம் உருவாக்கப்பட்டு - தமிழர் தரப்பிடம் வழங்கப்பட்டது.

அந்த நிர்வாகம் தொடரும் நிலையில், விடுதலைப் புலிகளை முழுமையாக ஒழிக்க இந்தியா முனைந்து செயற்பட்டதன் பின்னணியில் அப்போது ஜனாதிபதியாக வந்த ஆர்.பிரேமதாஸ விடுத்த அழைப்பை ஏற்று பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் முன்வந்த நிலையில், இந்தியா வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

அந்தப் பேச்சுகளும் தோல்வியில் முடிய, 90 ஆம் ஆண்டு வெடித்த மோதல், 95ஆம் ஆண்டு சந்திரிகா 'போர் ஒரு புறமும் சமாதானம் ஒருபுறமும்' என்ற கோஷத்துடன் வந்தபோது முடிவுக்கு வந்தது.

அவரது ஆட்சிக் காலத்தில் ஆறு மாத காலம் அமைதி நிலவியது. பின்னர் தொடர்ந்த மோதல்களில், பல இடங்களை அரசு பிடித்தது. அவற்றில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் மீண்டும் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தன.

சந்திரிகாவின் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் நிலையில் 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு வந்தவுடனேயே நோர்வேயின் பிரசன்னத்தில் ஒப்பந்தங்கள், பேச்சுகள் என சமாதான முயற்சியைத் தொடர்ந்தது.

ஆட்சியில் ரணில் இருந்தபோதும் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்காவின் அதிரடி நடவடிக்கையால் கவிழ்ந்துபோன ரணில் ஆட்சியுடன் சமாதான முயற்சிக்கும் முடிவு கட்டப்பட்டது.

ரணிலின் ஆட்சி கவிழ்ந்து சந்திரிகாவின் ஆட்சி தொடர்ந்தபோதும் சமாதான முயற்சிகள் மெதுமெதுவாக நகர்ந்தன.

நேரடிப் பேச்சை எங்கு நடத்துவது என்று நீடித்த இழுபறியால் பேச்சுக்கான வாய்ப்பு ஏற்பாடாத நிலையில் சந்திரிகாவின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

தெற்குப் பேரினவாதிகளின் ஆதரவுடன் மஹிந்த ஆட்சிக்கு வந்தபோதும் அந்தச் சக்திகளை சமாளித்து தமிழர் தரப்பான விடுதலைப் புலிகளுடன் இரண்டு கட்டப் பேச்சுகளை நடத்தினார்.

முதலாம் கட்டப் பேச்சில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் நிறைவேற்றப்படாத நிலையில் இரண்டாம் கட்டப் பேச்சுகள் நடந்தபோதும், அப்பேச்சுகள் தோல்வியில் முடிந்தன.

அதைத் தொடர்ந்து ஆரம்பமான வன்முறைகள் படிப்படியாகக் கிழக்கை மீட்டு இன்று வடக்கை மீட்கும் போரில் வந்து நிற்கின்றன.

பயங்கரவாதத்தை ஒழிப்போம், பயங்கரவாதிகளைப் பூண்டோடு ஒழிப்போம் என்ற கோஷத்துடன் வடக்கின் நுழைவாயிலில் போர் வந்து நிற்கின்றது.

கிழக்கைப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டது போல வடக்கையும் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்டு அந்தப் பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களுக்கு ஜனநாயக உரிமை வழங்கப் போகின்றோம் என்று அரசுத் தலைமை கூறிவருகின்றது.

"இந்நிலையில் இராணுவத் தீர்வில் எனக்கு நம்பிக்கை இல்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே விரும்புகிறேன்" என்று இந்தியாவில் வைத்து சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த ஜனாதிபதி -

"நிலையான தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு எனது அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவே உள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துவோர் அமைதி வழியில் ஜனநாயக ரீதியான தீர்வைக் காண்பதில் உண்மையாகவே - விசுவாசத்துடன் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்தால் அரசாங்கமும் அதற்குத் தயார்" என்று அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துவோர் என விழித்து விடுதலைப் புலிகளுக்கு நேசகரம் நீட்டியுள்ளார்.

ஒருபுறம் பயங்கரவாதிகள் என விழித்து பயங்கரவாதத்தை ஒழிக்கப்போவதாக அறிவிப்பதும் -

மறுபுறத்தில் ஆயுதப்போராட்டம் நடத்துவோர் என விழித்து, பேச்சுக்கு நேசகரம் நீட்டுவதும் - இரு முரண்பட்ட நிலைப்பாடுகள் என்று கருத்துக் கூறுகின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

அரசின் இரட்டைப் போக்கு அணுகுமுறை எதுவாக இருந்தாலும் பேச்சு என்று வந்தால் அது விடுதலைப் புலிகளுடன்தான் அமையவேண்டும் என்று கூறுகிறார்கள் அந்த விமர்சகர்கள்.

அரசியலில் எதுவும் நடக்கலாம் அவற்றை எதிர்வு கூற முடியாது என்கிறார்கள் நோக்கர்கள்.

அடுத்த மாதம் வரப்போகும் வரவு - செலவுத் திட்டத்தின்போது ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாக ஐ.தே.கட்சி தலைமை கூறுகிறது.

மறுபுறத்தில் அந்த மாதத்தில் விடுதலைப் புலிகளின் வருடாவருடம் வரும் கொள்கை விளக்கம், மாவீரர் தின உரையில் வெளிவரப் போகின்றது.

ஆகவே, இரு முக்கிய சம்பவங்கள் அடுத்த மாதம் நடக்கப்போகின்றன.

இந்தநிலையில் பேச்சுத் தொடங்குமா? பேச்சு என்றால் யாருடன் பேச்சு இடம்பெறப்போகின்றது? பேச்சு நடக்குமா அல்லது யுத்தம் வெடிக்குமா? இவற்றுக்கான பதில்கள் வரும் வரை பொறுத்திருப்போம்.

# Tomorrow's Leaders




## ஒன்றிணைந்து நாம் உலகை வெல்வோம்

நாளைய தலைவர்களுக்கு முடிசூட்டும், செலிங்கோ பிரணாம புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இச்சந்தர்ப்பம் திறமை மிக்க செலிங்கோ காப்புறுதிதாரர்களின் பிள்ளைகளுக்கானது. உங்கள் பிள்ளை கல்வி, விளையாட்டு, கலை மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் போன்ற துறைகளில் திறமையுடையவர்களாயின் இதற்கு விண்ணப்பிக்க அவர்கள் முழு தகுதி உடையவர்களாவார்கள். உங்கள் செலிங்கோ பிரணாம விண்ணப்பப்படிவங்களை அருகில் இருக்கும் செலிங்கோ லை∴ப் கிளையில் அல்லது 011 2 461 461 என்ற இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் இன்றே பெற்றுக்கொள்ளலாம்.

2007 செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது.

- ஆண்டு 5 - 2006 மற்றும் 2007 - ஒவ்வொன்றும் ரூ. 60,000/- பெறுமதியுடைய 50 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (சாதாரண தரம்) - 2006 - ஒவ்வொன்றும் ரூ. 36,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
- க.பொ.த (உயர் தரம்) - 2007 - ஒவ்வொன்றும் ரூ. 72,000/- பெறுமதியுடைய 25 புலமைப்பரிசில்கள்
  - ஒவ்வொன்றும் ரூ. 10,000/- பெறுமதியுடைய 75 புலமைப்பரிசில்கள்
- தேசிய திறமை விருதுகள் - 2006/2007 - ஒவ்வொன்றும் ரூ. 25,000/- பெறுமதியுடைய 10 புலமைப்பரிசில்கள்

நாளைய தலைவர்களுக்கு செலிங்கோ பிரணாம புலமைப்பரிசில்

விண்ணப்பங்கள் 2007 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**செலிங்கோ லை∴ப்**

செலிங்கோ இன்சூரன்ஸ்

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

இல. 134, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே: (011) 2 461 461 வெப்தளம்: www.ceylincolife.com

இந்தியாவின் மத்திய அரசை கவிழ்க்கும் என எதிர்பார்க்கப்பட்ட இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் கிடப்பில் போடப்படும் அறிகுறிகள் தெரியத் தொடங்கியுள்ளன. இந்த ஒப்பந்தம் இந்தியதேசத்தின் அணுசக்தி நலன்களை அடகுவைப்பதாக இடதுசாரிகள் தூக்கிய போர்க்கொடியே இதற்கு காரணம்.

இடதுசாரிகள்,அரசின் கூட்டாளிகளாக இருப்பதால் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அவர்களது நிர்ப்பந்தத்துக்கு பணியும் சமிக்ஞைகளை காட்டியுள்ளது. பிரதமர் யுள்ளார். அணுசக்தி ஒப்பந்தம் இல்லாவிட்டால் வாழ்க்கையே முடிந்ததாக அர்த்தமில்லை என பிரதமர் சமீபத்தில் பகிரங்கமாக கூறியது சிக்கலுக்கு ஒரு முற்றுப் புள்ளியே என கருதப்படுகிறது. அதாவது கம்யூனிஸ்ட்டுகளின் கோரிக்கைக்கு சோனியா இணங்குவதை பிரதமரும் ஏற்றுக் கொண்டுவிட்டார். ஆகவே அரசு கவிழும் அபாயம் நீங்கிவிட்டது.

அப்படியானால் இந்த ஒப்பந்தத்தின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஒப்பந்தம் தூசுதட்டப்பட்டு நிறைவேற்றப்படும். காரணம் காங்கிரஸை காட்டிலும் பி.ஜே.பி.யே அமெரிக்காவுக்கு இணக்கமான கட்சி ஆகும். வாஜ்பாய் அரசு அமெரிக்காவுடன் நெருக்கமான உறவை பேணியது இதற்கு சான்று. எனவே பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால் வெகு சுலபமாக ஒப்பந்தம் நிறைவேற்றப்படும். அப்படியானால் பி.ஜே.பி. யானது இடதுசாரிகளுடன் சேர்ந்து ஒப்பந்தத்தை எதிர்த்தது ஏன்? பதவி சுகம் என்பதே பதில். ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கியது பி.ஜே.பி.க்கு பெருத்த ஏமாற்றம் ஆகும். மூன்று மாதங்களாக நாட்டில் நிச்சயமற்ற நிலையை தந்த பிரதமர் மன்மோகனும் சோனியாவும் தமது நிலைப்பாட்டை மாற்றியது குறித்து மக்களுக்கு விளக்களிக்க வேண்டும் என அத்வானி புலம்பியுள்ளார். அதாவது காங்கிரஸ் ஒப்பந்தத்தை உறுதியாக செயற்படுத்தி இடதுசாரிகளுடன் மோதி ஆட்சி கவிழ்வதைத்தான் அவர் எதிர்பார்த்திருந்தார். அது நிறைவேறாத

# அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து பின்வாங்கினார் சோனியா!



## தப்பிப் பிழைத்தது மன்மோகன் அரசு

ஆதங்கம் புலம்பலில் முடிந்துள்ளது. ஆட்சி கவிழும், தேர்தல் வரும் என பி.ஜே.பி. பெரும் ஆரவாரமாக பல மாநிலங்களிலும் பிரசாரம் செய்து வந்தது எல்லாமே புஸ்வாணமாகிவிட்டது. காங்கிரஸின் இந்த குத்துக்கரணத்துக்கும் பதவிதான் காரணம். இன்னும் ஒன்றரை வருடம் பதவி சுகத்தை அனுபவிக்க முடியும். அப்படியிருக்க ஏன் இழக்க வேண்டும் என்பது பல காங்கிரஸ் எம்.பிக்களின் வாதம். அத்துடன் கூட்டணிக் கட்சிகளும் தேர்தலை விரும்பவில்லை. எனவே சோனியா காந்திக்கு வேறு தெரிவுகள் கிடையாது. ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டால் இந்தியா, அனுமின் மற்றும் உற்பத்தித் துறைகளில் பெரும் பாய்ச்சலை எதிர் கொண்டிருக்கும். ஆனால் அற்ப அரசியலாய் இது கைக்கெட்டாமல் போயுள்ளது.

இடதுசாரிகளின் கண்மூடித்தனமான அமெரிக்க எதிர்ப்பு ஆரோக்கியமானதல்ல என்பதை பல இந்தியர்கள் உணர் கின்றனர். புதிய உலக அரசியல் ஒழுங் கில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைவது தவிர்க்க முடியாதது என்பது கம்யூனிஸ்டுகளுக்கு புரியாதது தேசத்தின் துரதிஷ்டமே. இந்த ஒப்பந்தம்

மன்மோகன் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற பெருவிருப்புடன் இருந்தார். எனினும் சோனியா காந்தி இடதுசாரி களின் நெருக்குதலுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராகவே இருந்தார். ஒரு கட்டத்தில் இடதுசாரிகளுக்கு சோனியா காந்தி பணிந்தால் பதவியைத் துறப்பேன் என்று கூட மன்மோகன் சிங் கூறியதாக தகவல்.

இருப்பினும் அவரையும் இடதுசாரிகளையும் ஒருங்கே வெல்லும் சாணக்கியத்தை சோனியா காந்தி வெளிப்படுத்தி

இன்னும் ஒன்றரை வருடத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி முடிவடைகிறது.

**என். சிரேந்திரஜித்**

அனேகமாக பி.ஜே.பி. ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புகள் அதிகம். அப்பொழுது விஷயம் சுலபமாக முடிந்துவிடும்.

அதாவது பி.ஜே.பி. அரசின் கீழ் இதே ஆட்சியை கவிழ்த்துவிட துடியாய் துடிக்கும் பி.ஜே.பி.க்கு துருப்புச் சீட்டானது இந்த ஒப்பந்தம். இடதுசாரிகள் எதிர்ப்பதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஆட்சியை கவிழ்ப்பதுதான் பி.ஜே.பி.யின் திட்டம். ஆட்சி கவிழ்ந்து தேர்தல் வந்தால் தாம் வெல்ல முடியும் என்று அக்கட்சி கருதுகிறது. மன்மோகன் ஆட்சியை வீழ்த்த ஆடும் நாடகமே பி.ஜே.பி.யின் ஒப்பந்த எதிர்ப்பு. காங்கிரஸ் கட்சி நிறைவேற இனி குறைந்தது ஒன்றரை வருடமாவது காத்திருக்க நேரும்.



## கல்விச் சுடர்

தரம்-04 மாணவர்களுக்காக கடந்தவார சுடர்ஒளி வாரமலரில் வெளிவந்த படிமுறைப்பரீட்சை மாதிரிவினாத்தாள்-05 இற்கான விடைக்குறிப்புக்கள்.

ஆக்கம்- திரு.து.திலீப்குமார்(ஆசிரியர், கொ விவேகானந்தாக் கல்லூரி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | 1) மீன் | 2) கெட்ட | 3) வடிவு | 4) நீர் | |
| 02. | 1) வருகின்றேன் | 2) இன்றைக்கு | 3) சவர்க்காரம் | 4) குரைத்தது | |
| 03. | 1) கர்வம் | 2) சந்திரன்,புத்தி | 3) கோபம் | 4) மகளிர், பெண்கள் | |
| 04. | 1) வெறுப்பு | 2) குழி | 3) பரகசியம் | 4) வீரம் | |
| 05. | 1) தன்மை | 2) படர்க்கை | 3) முன்னிலை | | |
| 06. | 1) துளையிடுவதற்காக | | 2) வெட்டுவதற்காக | | |
| 07. | 1) கத்தரிக்கோல் | 2) சீப்பு | 3) கத்தி | | |
| 08. | 1) கற்பித்தல் தொழில் | | 2) மீனவத் தொழில் | | |
| 09. | 1) 1 | 2) 3 | 3) 2 | 4) 2 | 5) 1 |
| 10. | 1) கூம்பு | 2) 10cm,6cm | 3) ரு19.50 | 4) 6, 12 | 5) |
| | 6) 8 | 7) 1.75 l | | | |
| 11. | 1) 5 | 2) 8 | | | |
| 12. | 1) 2 | 2) 4 | 3) 4 | | |
| 13. | 1) a | 2) c | | | |
| | 1) தமிழ்-சிங்கம் ஆங்கிலம்-Lion | 2) தமிழ்-மைனா ஆங்கிலம்-Mynah | 3) பார ஊர்தி ஆங்கிலம்-Lorry | | |
| 14. | 1) Good Morning | 2) Pilot | | | |
| 15. | 1) படுக்கையறை | 2) கால்கள் | | | |
| 16. | 1) புத்தகம் | 2) இடியப்பம் | | | |
| 17. | பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள். | | | | |

# ஜப்பான் எங்கே போகிறது?



பதவி விலகிய பிரதமர் அபே

மாவீரன் நெப்போலியன் ஒருமுறை 'ஒரு தலைவன் என்பவன் நம்பிக்கைகளுடன் தொடர்புடையவன்' என்று சொன்னான். இதை வைத்துப் பார்த்தால், ஜப்பான் சுத்தமாக நம்பிக்கையற்ற நாடாகப் போய் விட்டது. ஜப்பானிய பிரதமர் அபே ராஜினாமா செய்துவிட்டார். இதைத் தொடர்ந்து அந்நாட்டில் எழுந்திருக்கும் நிலையற்ற தன்மை, அவருடைய சுய தோல்வியை மட்டுமல்லாமல் அந்நாட்டில் இரும்புமனம் படைத்த தலைவர்கள் இல்லாததையும் உணர்த்துகிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் படைத்த நாடாக இருந்தாலும், சர்வதேச பூகோள அமைப்பில் அரசியல் ரீதியாக எந்தச் சக்தியும் இல்லாமல் ஜப்பான் இருக்கிறது. இதற்குக் காரணம் அது மிகவும் தேவையான மாற்றங்களை தனது பொருளாதார அமைப்பில் செய்யாமல் இருப் பதுதான்.

தொண்ணூறுகளின் இறுதியில் ஏற்பட்ட மாபெரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னும் அது மீளவில்லை. இதனால், அதன் பொதுக்கடன் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 176சதவீதம் என்னும் அதிகமான அளவில் இருக்கிறது. இதனால், மாபெரும் சீர்திருத்தங்கள் அந்நாட்டுக்குத் தேவைப்படுகின்றன.

ஷின்ஸோ அபே, வயது குறைந்தவராக, சீரிய நோக்கம் உடையவராகத் தோன்றியதால் இப்பணிக்குப் பொருத்தமானவராகத் தோன்றினார். ஆனால், உள்நாட்டில் எழுந்த எதிர்ப்பைச் சமாளிக்கமுடியாமல் இவர் விலகிவிட்டார். இதனால், வரப்போகும் அடுத்த அரசு, சற்றுக் கடினமான - அரசியல் ரீதியாகப் பலனளிக்காத - பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்யத் தயங்கும்.

ஜப்பானின் உள்நாட்டுச் சிக்கல்களால் அமெரிக்கா அதற்கு முக்கியத்துவத்தைக் குறைத்து சீனா, இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு சர்வதேச பிரச்சினைகளில் முக்கியத்துவம் கொடுக்கும் நிலை இனி உருவாகலாம்.

# சமஷ்டி: முன்பு முயற்சித்துப் பார்த்து பின்பு கைவிட்ட விவகாரம்

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர்-IV

2002 டிசெம்பர், 4ஆம் திகதி அரசு - புலிகள் மூன்றாம் சுற்றுப் பேச்சின் கடைசி நாளுக்கு முந்திய தினம். 'சமஷ்டி தீர்வுக்குப் புலிகள் இணங்கினார்கள்' என்ற 'ஸ்கூப்' செய்தியை அடிப்படையாக தொலைபேசித் தொடர்பு தேடி ஓடிய என்னை மீள அழைத்த மதியுரைஞர் பாலசிங்கம் அச்செய்தியை 'சமஷ்டிக்கு புலிகள் இணங்கினார்கள்' என்று பிரசுரிக்காமல் வேறு வார்த்தைகளில் தமது பேட்டியை பிரசுரிக்கலாம் எனத் தெரிவித்து, விசேட செவ்வி ஒன்றை அளித்தார் எனக் குறிப்பிட்டேன் அல்லவா?

அடுத்த நாள் அதாவது 05- 12- 2002 அன்று எனது பத்திரிகைகளான யாழ்ப்பாணத்தில் இருந்து வரும்' உதயன்' நாளிதழிலும், கொழும்பிலிருந்து வரும் 'சுடர் ஒளி' யிலும் அது எவ்வாறு பிரசுரமாகியிருந்தது என்பதை வாசகர்களுக்குக் கோடி காட்டுவதற்காக அவற்றின் முற்பக்க நிழல்படப் பிரதிகளை இப்பகுதியிலேயே சுருக்கிக் காட்டியுள்ளேன்.



சுடர் ஒளி
THE SUDAR OLI

உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் சுயாட்சியே பிரச்சினைக்குத் தீர்வு

05.12.2002

ஒற்றையாட்சிக்குப் பதில் சமஷ்டி என்பதில் இணக்கம்

06.12.2002

உதயன்

உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்

சுயாட்சி முறை தீர்வுத் திட்டம்

05.12.2002

சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் தமிழருக்கு உள்ளீடான சுயாட்சி!

அரசு - புலிகள் இணக்கம்

06.12.2002

சமஷ்டித் தீர்வுக்குப் புலிகள் இணங்கிய விவரத்தை 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் சுயாட்சி முறை தீர்வுத் திட்டம்; அடிப்படை வடிவமைப்பை உருவாக்க ஒஸ்லோவில் அரசு- புலிகள் இணக்கம்' என்று 'உதயன்' நாளிதழிலும்-

'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் சுயாட்சியே பிரச்சினைக்குத்தீர்வு; ஒஸ்லோ பேச்சில் அரசு - புலிகள் தரப்பினர் அடிப் படை வடிவமைப்பை உருவாக்க இணக் கம்'- என்று 'சுடர் ஒளி' நாளிதழிலும் -

தலைப்பிட்டு, அந்தப் பேட்டியை நாம் பிரசுரித்தோம். அந்தப் பேட்டி மூலம் நாங்கள் (எமது பத்திரிகைகள்) வெளியிட்ட அந்தச் செய்தி விவரம் அன்றைய தினத்தில் விசேட - பிரத்தியேக - செய்திகள்தாம் என்றாலும், சமஷ்டிக் கட்டமைப்பு மூலமான தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து ஆராயப் புலிகள் அரசுடன் இணக்கம் கண்டனர் என்ற தகவல் தெரிந்திருந்தும், அந்தத் தகவலை தந்த செய்தி மூலத்துடன் (மதியுரைஞர் பாலசிங்கத்துடன்) குழம்பாமல் இருப்பதற்காக அச்செய்தியை நசுக்கி, அமுக்க வேண்டியதாயிற்றே என்று எனது மனதுக்குள் குமைச்சல். எனினும் ஒன்றும் செய்ய முடியாமல் பொறுத்துக் கொண்டேன். ஒரு செய்தியாளனுக்கு செய்திக்கு முதல் செய்தி மூலத்துடனான அந்தரங்கத் தொடர்பாடலை கனகச்சிதமாக பேணிக் கொள்வதே முக்கியம் என்பதால், அடுத்த நாளே ஏனையோருக்குத் தெரிய வரக் கூடிய செய்தியை முதல் நாளே அறிந்திருந்தும் அதனை அமுக்கி, விழுங்கிக் கொள்ளும் இக்கட்டை உள்வாங்கிக் கொள்ள வேண்டியவனானேன்.

அன்று பாலசிங்கம் எனக்கு அளித்த விசேட செவ்வி தமிழருக்கான தீர்வுத் திட்டம் தன்னாட்சி (Self Government) மற்றும் பிரதேச சுயாட்சி (Regional Autonomy) குறித்துப் பேசுவதாகவே இருந்ததே தவிர, சமஷ்டி (Federal) குறித்து மூச்சுவிடுவதாக இருக்கவேயில்லை.

சமஷ்டிமுறைத் தீர்வு குறித்து அரசுடன் பேசுவதற்கு இணங்கியமை பாலசிங்கம், அந்தச் செய்தியை உடன் வெளியிடாமல் ஏன் தடுத்தார் என்பதற்கான காரணத்தை ஆராய முன்னர் அந்தப் பேட்டியின் பகுதிகளை வாசகர்களின் கவனத்துக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். அந்தச் செய்தியின் விவரம் இதுதான்:-

*இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையப் போகும் அரசியல் தீர்வுத்திட்டத்தின் அடிப்படை வடிவமைப்பை (Frame work) உருவாக்குவதில் அரசுத்தரப்பும் புலிகள் தரப்பும் இணக்கம் கண்டுள்ளன.*

*அது பெரும்பாலும் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி முறை என்ற வடிவமைப்பில் இருக்கும்.*

*இதுபற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று (டிசம்பர் 5 ஆம் திகதி) வெளியிடப் படவிருக்கின்றது.*

*நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும். சமாதானப் பேச்சுகளின் போது இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.*

*நேற்று ஒஸ்லோ நேரப்படி நண்பகல் 12 மணிக்கு - இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு - மூன்றாம்நாள் காலை பேச்சுகளின் அமர்வு முடிவுற்ற பின்னர் புலிகள் தரப்புக் குழுவின் தலைவர் அன்டன் பாலசிங்கம் 'சுடர் ஒளிக்கு' விசேட பேட்டியளித்தார்.*

*தீர்வுத்திட்டத்தின் அடிப்படை வடிவமைப்புக் குறித்து ஆராயப்பட்டது பற்றியும் அப்போது அவர் தகவல் வெளியிட்டார். அவர் கூறியவை வருமாறு:-*

*விடுதலைப் புலிகள் குறித்து இலங்கை மக்களுக்கு - குறிப்பாக சிங்களமக்களுக்கு - தவறான கருத்துகள் கூறப்பட்டு வந்தன.*

*புலிகள் அமைதிப் பேச்சுக்கு வரமாட்டார் கள் என்றார்கள். புலிகள் ஆயுதமோதலை*

**- வித்தி -**

*நிறுத்தமாட்டார்கள் என்றார்கள். புலிகள் அரசியல் தீர்வு குறித்துப்பேச வரமாட்டார் கள் என்றார்கள்.*

*புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை தவிர்த்து ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண முன்வரமாட்டார்கள் என்றார்கள்.*

*இவற்றையெல்லாம் பொய்யாக்கி அமைதி வழியில் சமாதானத் தீர்வு காண்பதில் புலிகள் அதீத ஈடுபாடு கொண்டுள்ளார்கள் என்பதை நாம் எமது நடவடிக்கைகள், செயற்பாடுகள் மூலம் நிரூபித்து வருகின்றோம்.*

*இப்போது அரசியல் தீர்வுக்கான வழிமுறைகள் குறித்துப் பேசும் நிலைக்கு முன்னேறிவிட்டோம். அந்தப் பேச்சைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வசதியாக ஓர் அடிப்படைக் கட்டமைப்பை (Frame work) நாம் அடையாளம் காணவேண்டும்.*

*அதுகுறித்தே இன்று புதன்கிழமை காலை நடைபெற்ற பேச்சுகளில் விரிவாக ஆராய்ந்தோம். இதற்கான முன்மொழிவை தலைவர் பிரபாகரன் ஏற்கனவே தமது மாவீரர் தின உரையில் தெளிவாக வெளிப் படுத்திவிட்டார்.*

*அது உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி அடிப்படையிலானது. அதை அடிப்படைக் கட்டமைப்பாகக் கொள்ளும் இணக்கநிலை காலைப் பேச்சுகளில் ஏற்பட்டுள்ளது.*

*எனினும் தொடர்ந்து மாலையும் அது குறித்து விரிவாக ஆராய்வோம். உத்தியோக பூர்வமான - உறுதியான - அறிவிப்பு நாளை (அதாவது இன்று வியாழக்கிழமை) வெளி யிடப்படும் என நீங்கள் எதிர்பார்க்கலாம்.*

*அரசியல் தீர்வுக்கான அடிப்படைக் கட்டமைப்பை நாம் வகுத்துக்கொண்டாலும் அந்த வழியில் தொடர்ந்து பேச்சு நடத்தி இறுதித் தீர்வு ஒன்றை நாம் எட்டுவதற்கு நீண்டகாலம் பிடிக்கலாம்.*

*அதுமட்டுமல்ல, அத்தகைய தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கு அரசமைப்பை மாற்றவேண்டியிருக்கும். அரசமைப்பை மாற்றுவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கினரின் ஆதரவு அவசியம். ஆனால், அத்தகைய அரசியல் அதிகாரத் தோடு இந்த அரசு இல்லை. இதனால் எட்டப் படும் தீர்வை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பு கேள்விக்குள்ளாவதைத் தவிர்க்கமுடியாது.*

*அரசமைப்பை மாற்றுவதற்குத் தேவை யான அரசியல் அதிகாரத்தைக் கொண்டிராத ரணிலின் அரசு, இப்போது புதிய சவாலை யும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருக் கின்றது.*

*டிசம்பர் 5 ஆம் திகதியான இன்றுமுதல் தற்போதைய அரசை எந்தநேரத்திலும் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி குமாரதுங்க பெறுகின்றார்.*

*சந்திரிகா குமாரதுங்க எப்படி நடந்து கொள்வார் என்பதை யாரும் முன்கூட்டியே எதிர்பார்க்க முடியாது. அவர் எந்த நேரத் திலும் எதையும் செய்யக்கூடியவர். எனவே, ரணிலின் அரசு பாதுகாப்பற்ற, ஸ்திரமற்ற நிலைக்குத் (Insecure) தள்ளப்பட்டுள்ளது. இதனால், அமைதி முயற்சிகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு - என்றார் பாலசிங்கம்.*

*ரணிலின் அரசு ஸ்திரமற்ற நிலைக்குள் பிரவேசித்திருப்பது குறித்து நீங்கள் கவலை கொள்கின்றீர்களா? (Are you concerned about that) என்று அவரிடம் கேட்கப்பட்டது.*

*அதுகுறித்துக் கருத்துக்கூற விரும்ப வில்லை என்று பதிலளித்தார் பாலசிங்கம்.*

- இதுவே அச்செய்தியின் விவரம்.

இனி அடுத்து விடயத்துக்கு வருவோம்.

***

அடுத்த நாள் அதாவது - ஒஸ்லோவில் மூன்றாவது சுற்று அமைதிப் பேச்சு முடிவடைந்த கடைசி நாளான டிசம்பர் 5 ஆம் திகதி - இடம்பெற்ற விடயங்கள் பற்றிய செய்திகளை அதற்கு அடுத்தநாள் 6ஆம் திகதி காலை 'உதயன்', 'சுடர்ஒளி' உட்பட அனைத்துப் பத்திரிகைகளுமே பிரசுரித்தன. அவை தொடர்பான 'உதயன்', 'சுடர்ஒளி'யின் முற்பக்க நிழற்படப்பிரதிகளை வாசகர்களின் கவனத்துக்காக இங்கு இணைத்துள்ளேன்.

'சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் தமிழருக்கு உள்ளீடான சுயாட்சி! அரசு - புலிகள் இணக் கம்' என்று 'உதயனும்' -

'அரசியல் தீர்வுக்கான அடிப்படை தயார்; ஒற்றையாட்சிக்குப் பதில் சமஷ்டி என்பதில் இணக்கம்; இதில் இரு தரப்பிலும் நிலைமாற் றம் என்று சுட்டிக்காட்டுகின்றார் பாலா' என்று 'சுடர்ஒளி'யும் -

அன்று செய்தி வெளியிட்டிருந்தன.

அந்தச் செய்திகளில் -

''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்டபடி வடக்கு - கிழக்கில் தமிழர் பாரம்பரிய பிரதேசத்துக்கு சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் உள்ளீடான சுயாட்சி வழங்கும் ஓர் ஏற்பாட்டை அடிப்படை கட்டமைப்பாகக் கொள்வதற்கு - அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புகளும் இணங்கியுள் ளன. ஒஸ்லோவில் நடைபெற்ற மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுகளின் பின்னர் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளின் தத்துவாசிரியர் அன்டன் பாலசிங் கம் இதனை அறிவித்தார்'' - என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்த இரண்டு நாள்களிலும் அடுத்தடுத்து வந்த செய்திகளை ஆழமாக ஊன் றிக் கவனிக்கும் வாசகர்களுக்கு ஒரு விடயம் நன்கு - தெட்டத் தெளிவாக - தெரியும், புரியும் என்பது நிச்சயம்.

அது -

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து உடல், உயிர், உடைமைகளை இழந்து, தமிழர் தாயகத்தில் பெரும் போராட் டத்தை முன்னெடுத்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திடுதிப்பென தனது தனித்தாயகக் கோட்பாட்டைக் கைவிட்டு சமஷ்டித் தீர்வுக்கு இறங்கிவந்து விட்டது என்று காட்டிக்கொள்ளக் கூடாது என்பதில் மதியுரைஞர் மிக அவதான மாகவும் சிரத்தையாகவும் இருந்தார் என் பதே அது. அதனை இக்கட்டுரைத் தொட ரின் அடுத்து வரும் அங்கங்களில் பாலா

(22ஆம் பக்கம் பார்க்க)

சுடர் ஒளி

ஒக்.21 - ஒக்.27. 2007

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் : 011 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஈழத் தமிழருக்கு பெரும் பின்னடைவு

இந்தியாவில் மத்திய அரசைக் கவிழ்க்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் கிடப்பில் போடப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த ஒப்பந்தம் இந்தியாவின் அணுசக்தி நலன்களை அடகுவைக்கக்கூடியது என்று கூறி, ஒப்பந்தத்துக்கு இந்திய இடதுசாரிக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவந்தன.

இந்த விவகாரத்தை ஒரு தன்மானப் பிரச்சினையாகக் கருதி, ஒப்பந்தத்தை எப்படியும் அமுல்படுத்தியே தீருவேன் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியாகத் தெரிவித்து வந்தார்.

தற்போது மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளில் இடதுசாரிக்கட்சிகளுக்கு பிரதான பங்கு உண்டு. இடதுசாரிக்கட்சிகள் மன்மோகன்சிங் அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டால் ஒருநிமிடம் கூட அந்த அரசினால் நிலைத்து நிற்கமுடியாது. ஆதனால்தான் அரசு கவிழப் போகிறது என்று பல தரப்புகளில் இருந்தும் ஊகம் தெரிவிக்கப்பட்டு வந்தது. இடது சாரிக் கட்சிகள் தமது எதிர்ப்பில் உறுதியாக இருந்ததுதான் இதற்குக் காரணம்.

இடதுசாரிகளின் இந்த எதிர்ப்புக் காரணமாக தற்பொழுது பிரதமர் மன்மோகன் சிங்கின் சுருதி மாற ஆரம்பித்துள்ளது. "அணுசக்தி ஒப்பந்தம் இல்லாவிட்டால் வாழ்க்கையே முடிந்ததாக அர்த்தம் இல்லை" என்று மன் மோகன் சிங் கூறிஇருப்பதன் மூலம் இந்த ஒப் பந்தம் கிடப் பில் போடப்படும் அறிகுறிகள் தென்படுகின் றன.

ஆனால், இந்திய இடதுசாரிக்கட்சிகளிடம் உள்ள உறுதி இந்திய மத்திய அரசில் பிரதான பங்காளியாக இருக்கும் இன்னொரு கட்சியான தி.மு.கவிடம் இல்லாததுதான் வேதனை அளிக்கிறது.

இந்திய மக்களவையான லோக் சபையில் தி.மு.கவுக்கு கணிசமான அளவு எம்.பிக்கள் உள்ளனர். தி.மு.க தனது ஆதரவை வாபஸ் பெற்றுக்கொண்டாலும் மத்திய அரசு விழுந்து விடும். ஆனால், மத்திய அரசின் தாளத்துக்கு தி.மு.க. ஆடுகிறது.

பொதுவாக இலங்கை இனப்பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு எந்த விதமான கொள்கையும் கிடையாது. அரசியல் சுயநலத்தைத்தான் முன்னிலைப்படுத்தி வருகிறார்.

இலங்கை அரசுக்கு குறும் தூர ஏவுகணைகளை இந்தியா வழங்கியிருப்பதாக 'ரைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. மேலும் ராடர்கருவிகள், எதிர்ப்பு ஆயுதங்கள், ஆட்லெறி சுடுகுழல்கள், லேசர் கருவிகளால் இயங்கும் பி.ஜி.எம். போன்ற ஆயுதங்களையும் இலங்கைக்கு இந்தியா வழங்க இருப்பதாக அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசு பதவியேற்றபோது, இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கப்போவ தில்லை என்றும் மனோபல ரீதியான ஒத்துழைப்பு மட்டுமே வழங்கும் என்றும் தெரிவித்து வந்தது. ஆனால், கருணாநிதியின் போக்கை அனுசரித்துக் கொண்டு தனது நிலைப்பாட்டில் அது மாற்றம் செய்ய ஆரம்பித்தது.

பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்று வருட முற்பகுதியில இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் இலங்கையை வெளிப்படையாகக் கேட்டுக்கொண்டார். தற்போது ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கை அரசு, தமிழ்மக்களுக்கு சமஷ்டி ஆட்சிமுறை கொடுக்கமுடியாது, மாவட்ட சபைகள் போதும், வன்னி மீது படையெடுத்து, முழுப்பகுதியையும் கைப்பற்றிய பின்பே தீர்வுயோசனையை சமர்ப்பிப்போம் என்று கூறிவரும் வேளையில், இந்திய மத்திய அரசின் நடவடிக்கையும் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதியின் மௌனமும்இலங்கை அரசின் நடவடிக்கைகளுக்கு மேலும் ஊக்கம் அளிப்பவையாகவே இருக்கின்றன.

கருணாநிதி தொடர்ந்து மௌனம் சாதிப்பது அவரின் அரசியல் சுயநலத்தையே புட்டுக் காட்டுகிறது. இடதுசாரிகளிடம் உள்ள நேர்மையும் உறுதிப்பாடும் கருணாநிதியிடம் இல்லாதது ஈழத்தமிழ்மக்களுக்கு பெரும் பின்னடைவு ஆகும்.

# பூட்டிய கதவுகளினூடாகக் கைநீட்டி கதறியழுதார்கள் யாழ்ப்பாண மக்கள் ஐ.நா.அம்மையாரும் கண்ணீர்விட்டார்!

## மனித உரிமைகள் எப்படியென்று அம்மையாருக்கு அப்போது புரிந்தது


**-வில்லவன்-**

இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நேரில் ஆராய்வதற்கென ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் கடந்தவாரம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அவரது விஜயத்தின் ஓர் அங்கமாக குடாநாட்டு விஜயமும் அமைந்தது. கடந்த 12 ஆம் திகதி அவர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அங்கு அவர் யாழ் ஆயர் இல்லத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் ஆகியோர் உட்படப் பல சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், ஐ. நா அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

எனினும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களை அவர் நேரடியாக - ஆறுதலாகச் சந்தித்துப் பேச முடியாமல் போனமை மிகவும் வேதனைக்குரியது. பாதிக்கப்பட்டவர்கள் லூயிஸ் அம்மையாரைச் சந்திப்பதற்கான அனைத்து முயற்சிகளும் நன்கு திட்டமிட்ட முறையில் தடுக்கப்பட்டமை பலரையும் விசனத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இந்தத் திட்டமிட்ட முயற்சியில் குடாநாட்டில் உள்ள பாதுகாப்புத் தரப்பினர் முதல் ஐ.நா.அதிகாரிகள்வரை ஈடுபட்டமை இப்போது வெளிச்சத்துக்கு வருகிறது.



மனித உரிமை மீறல்கள் பற்றி அறிய வந்த அம்மையாரைச் சந்திக்க முடியாமல் பாதிக்கப்பட்ட மக்கள் தடுக்கப்பட்டமை மிகப் பெரியதொரு மனித உரிமை மீறலாகும்.

இந்த மக்கள் அம்மையாரை சந்திக்க முடியாமல் போனதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் இங்குள்ள ஐ. நா.அலுவலகங்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரே.

குடாநாட்டில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், காணாமற்போதல், உயிர் அச்சுறுத்தலால் சரணடைதல் போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதனால் யாழ்ப்பாண மக்களின் அன்றாட வாழ்க்கை ஒரு மரணப் பொறிக்குள் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தக் கொடூர சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது உள்ளக்கிடக்கைகளை லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் கொட்டித் தீர்ப்பதற்கு முயன்றும் முடியாமல் போனது குறித்துப் பல தரப்பும் விசனம் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் அம்மையாரைச் சந்திப்பதற்கு எந்த விதமான ஏற்பாடுகளும் எந்தத் தரப்பாலும் செய்யப்படவில்லை.

காணமற்போனோர், கடத்தப்பட்டோர், கொலை செய்யப்பட்டோர் ஆகியோரின் உறவினர்களை ஐ.நாவின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், அம்மையாரின் யாழ். விஜயத்திற்கு முதல் நாளே அறிக்கை விட்டு விட்டார். அது வெறும் அறிக்கை மட்டும்தான். அவ்வாறான ஏற்பாடுகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட வில்லை.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேச்சு மூச்சின்றி ஒதுங்கிக் கொண்டமை குறித்து பல ரும் அதிர்ச்சி தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் சார்பில் நாடாளுமன்ற உறுப் பினர்களாக இருந்து கொண்டு ஓர் ஐ.நா.அதிகாரியின் விஜயத்தின்போது சந்திப்புகளை ஏற்பாடு செய்யக்கூடிய திறமை அவர்களுக்கு இல்லையா? அல்லது தென்னிலங்கை அரசியல் வாதிகள் போன்று அவர்களும் தமது அரசியல் இலாபங்களைக் கருத்தில் கொள்கிறார்களா? அதுதான் தெரியவில்லை.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.நா அலுவலர்களும் இந்தப் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக எந்தவிதமான அக்கறையும் காட்டவில்லை. பெரும் எண்ணிக்கையான மக்கள் லூயிஸ் அம்மையாரின் வருகையை எதிர்பார்த்து ஐ.நா. அலுவலகங்களின் முன்னால் திரண்டிருந்த போதிலும் அதுபற்றி அந்த அலுவலகங்களில் இருந்தோர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட மக்களால் வழங்கப்பட்ட மகஜர்களைக் கூட ஐ.நா. அலுவலகங்களின் வாசலில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களே பெற்றுக் கொண்டுள்ளனர். அந்தளவிற்கு பாதிக்கப்பட்டோர் விடயத்தில் அலட்சியப்போக்குக் காட்டப் பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சமூக அமைப்புகள் பலவும் பாதிக்கப்பட்ட மக்கள் லூயிஸ் அம்மையாரைச் சந்திப்பது தொடர்பில் அக்கறை காட்டாமல், தாம் அவரைச் சந்திப்பதில் குறியாய் இருந்தமை தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்கான அம்மையாரின் விஜயம் என்பது மனிதக் கொலைகள், கடத்தல்கள், காணாமல்போதல் போன்றன சம்பந்தமாக உண்மை நிலமையை நேரில் கண்டறிவதே ஆகும். அதற்குப் பல்வேறு தடைகள் இருந்த போதும் அம்மையார் தமது கடமையை இயன்ற வரை திறம்படச் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

லூயிஸ் அம்மையார் பூட்டிய வாகனத்தில் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் தனது விஜயத்தை மேற்கொண்டாலும் மக்களுடைய அவலத்தையும் பாதுகாப்பற்ற தன்மையையும் புரிந்து கொள்ளத் தவறவில்லை. யாழ். ஆயர் இல்ல தெற்குப்புற வாசலில் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்த்து அவர் விட்ட கண்ணீர் அதனை நீரூபித்தது.

யாழ். ஆயர் இல்லத்துக்கு சென்ற அம்மையார் அங்கு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவைச் சந்தித்து விட்டு ஆயர் இல்ல தெற்குப்புற வாசலில் கண்ணீர் விட்டுக் கதறிய மக்களை பூட்டிய கதவின் பின்னால் நின்று சந்தித்தார்.

அந்த நேரத்தில் அம்மையாரும் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டமை உண்மையில் தமிழ் மக்களுடைய - குறிப்பாக யாழ். குடா நாட்டு மக்களுடைய அவலத்தை அவர் முழுமையாகப் புரிந்து கொண்டார் என்புதேயாகும்.

படைத்தரப்பினரின் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது தம்மைச்சந்திப்பதற்காக யாழ். கோவில் வீதியிலும் அகதிகளுக்கான ஐ.நா. தூதுவராலயத்தின் முன்பாகவும் பல மணி நேரம் கத்திருந்த மக்களை அம்மையார் சந்திக்காவிட்டாலும் அவர்களது நிலை பற்றி நன்கு புரிந்துகொண்டிருப்பார்.

அத்துடன் யாழ். மக்களின் நிலை தொடர்பாக யாழ். ஆயர் மற்றும் நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் தலைமையிலான மக்கள் குழு பிரதிநிதிகள், யாழ். அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோருடனான சந்திப்பின் போது கூறப்பட்ட விடயங்களை வைத்து அம்மையார் உணர்ந்திருப்பார். படைத்தரப்பினர் மற்றும் அரச தரப்புப் பிரதிநிதிகள் கூறிய கருத்துக்களை யும் வைத்து அனைத்தை யும் ஒப்பிட்டுப் பார்த்திருப்பார்.

இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு அம்மையார் தனது விஜயத்தின் முடிவில் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்து அவரின் விஜயத்தின் உண்மைத் தன்மையை நிரூபித்ததுடன் இலங்கை அரசுக்கு அது பேரிடியாக விழுந்தது. இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்க ஐ.நா. கண்காணிப்பு மையம் நிறுவப் படவேண்டும் என்பதே அவரது கருத்து.

இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு அம்மையார் இந்தக் கருத்தைச் சொன்னதால் அது இலங்கை அரசுக்கு பெரும் அவமானமாக அமைந்தது.

அந்த ஊடகவியளாளர் மாநாட்டில் அம்மையார் குறிப்பிட்ட கருத்தை கூறியது பொருத்தமானது.

"எனதுவிஜயத்தின்அடிப்படையில் விசாரணைக்குழுக்கள், ஆணைக்குழுக்கள் போன்றவற்றால் மட்டும் இத்தகைய மனித உரிமை மீறல்களைத் தடுத்துவிடமுடியாது. ஐ.நாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற ஏதேனும் சர்வதேச அமைப்புக்களின் பிரசன்னமே மனித உரிமை மீறல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்" - என்றார் அம்மையார்.

நீதியான வழக்கு விசாரணைகள் எதுவும் இடம் பெறாமல், குற்றவாளிகள் தண்டனை பெறாமல் உள்ள சந்தர்ப்பத்தில் மனித உரிமை மீறல்கள் முடிவுக்கு வரும் என நாம் எப்படி நம்புவது எனவும் அம்மையார் கேள்வி எழுப்பினார்.

அம்மையாரின் இந்தக் கருத்துக்கள் மனித உரிமைகள் விடயத்தில் - சர்வதேச மட்டத்தில் இலங்கையின் முகத்திரையை மீண்டும் ஒரு முறை கிழித்திருக்கின்றது.

எனவே மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசின் எதிர்கால செயற்பாடுகள் அனைத்தும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவானவாக அமைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்தம் தந்த நேபாளத்தின் புரிந்துணர்வு இலங்கையிலும் ஏற்படுமோ?



சர்வதேச அரங்கில் ஒரே ஒரு இந்து சாம்ராஜ்ஜியம் எனத் திகழ்ந்த நேபாளம் இன்று அதன் தனித்துவத்தை இழந்துவிட்டது. அங்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பிரதான அரசியல்கட்சிகள் ஆறும், தீவிரவாத இயக்கமான மாவோயிஸ்ட் அமைப்பும் இணைந்து செய்துகொண்ட 12அம்ச உடன் படிக்கையின் பின்னர் ஒரே இரவில் நேபாள இந்து சாம்ராஜ்ஜியம் தவிடுபொடியானது. மதச் சார்புகள் அற்ற நாடாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. அதேவேகத்தில் அரசமைப்பிலும் இந்த மாற்றம் உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது.

ஆனால், அங்கு எண்பது வீதமாக வாழும் இந்துக்கள் இதைப்பற்றி அலட்டிக்கொள்ளவே இல்லை.

ஒருமதத்தை அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சிகளோ காப்பாற்றவேண்டிய அவசியமே இல்லை. எந்த ஒரு மதத்தையும் உண்மையாக நேசிப்பவர்களும் நம்பிக்கையுடன் பின்பற்றுபவர்களும் பாதுகாப்பார்களேயானால், அந்த ஆண்டவன் நம்மைக் காப்பாற்றுவார். மதத்தில் பற்று இருக்கவேண்டும். ஆனால், மதம்பிடித்துவிடக் கூடாது. இது எல்லாவற்றையுமே நாசமாக்கிவிடும் என்று உறுதிபடக் கூறுகின்றார் நேபாள காங்கிரஸ் கட்சியின் பதில் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுஷில் கொய்ராலா (Shushil Koierela). இவர் ஒரு பிராமணர். தீவிர இந்து.

மன்னர் காலம் முதல் இப்பொழுதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடனும் செல்வாக்குடனும் இருப்பது நேபாள காங்கிரஸ் கட்சி. பிரதமரும் இக்கட்சியைச் சேர்ந்தவரே. அவரும்கூட இந்துதான்.

எண்பது வீதமான இந்துக்கள், ஏனைய மதங்களும் பாதுகாக்கப்படவேண்டும். அனைவருக்கும் மதச் சுதந்திரம் அங்கீகரிக்கப்படவேண்டும். மதரீதியாகவோ, மொழிரீதியாகவோ பெரும்பான்மை மதமோ, இனமோ சிறுபான்மை இனத்தையோ அவர்களது மதத்தையோ ஆக்கிரமிக்கவோ அல்லது அடிமைப்படுத்தவோ கூடாது என்கின்றனர்.

அரசியல்வாதிகளிடம் மட்டுமன்றி, அங்கு வாழும் சாதாரண மக்களிடமும் இந்தப் பக்குவநிலை காணப்படுகின்றது. அண்மையில் நாம் நேபாளம் சென்றபோது இதனைக் கண்கூடாகவே கண்டறியமுடிந்தது. தேசிய சமாதானப் பேரவையினால் அழைத்துச் செல்லப்பட்ட நமது பத்திரிகையாளர்களை இது பிரமிப்புக்குள்ளாக்கிவிட்டது. எங்களுடைய குழுவில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதங்களைச் சார்ந்த அனைவரும் இடம்பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பல தசாப்தங்களாக இந்து சாம்ராச்சியமாக இருந்தநாடு ஒரே இரவில் அந்தச் சிறப்பை இழந்துவிட்டது. 80சதவீதமாக வாழும் இந்துக்கள் மிகவும் சாதாரணமாக சீரணித்துக் கொண்டு பெருந்தன்மையுடன் வாழ்கின்றனர்.

ஏனைய மதத்தவர்களுடன் காலம் காலமாகப் பழகிவந்ததுபோலவே இன்றும் அன்பாகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் பழகுகின்றனர்.

இதனைக் காணும்போது எமது நாட்டின் நிலைமை எம்மை வேதனையடையச் செய்கின் றது. ஏதாவது ஒரு சம்பவம் இடம்பெற்றுவிட்டால் சிறுபான்மையினர் தாக்கப்படுகின்றனர், அவர்களின் உடைமைகள் தீவைத்து கொளுத்தப்படு கின்றன, ஆலயங்கள் அடித்து உடைத்து நொருக்கப்படுகின்றன.

வாழ்வில் சாந்தியும் சமாதானமும்தான் ஒரு மனிதனை மனிதனாக்கும் நிறைவான வாழ்வைத் தரும் எனப் போதித்த புத்தபெருமானின் போதனைகளைப் பின்பற்றும் பௌத்தர்கள் அப்புனித மகானின் சிலைகளையே மாயக்கற்களாக நட்டு நில ஆக்கிரமிப்புச் செய்து அந்தப் புனிதரையே அவமானப்படுத்துகின்றனர். இவர்கள் எப்பொழுது மனம்திருந்துவார்கள். புத்தன் பிறந்த நேபாள மண்ணின் மைந்தர்களை நம்மவர்கள் முன்மாதிரியாகக் கொண்டால் பாரிய திருப்பம் ஏற்பட இடமுண்டு.

இன்றைய சமகால அரசியலை எடுத்துக் கொண்டால் நம் நாட்டின் அரசியல் நிகழ்வுகளும் காய்நகர்த்தல்களும் கூட நம்மவர்கள் அவதானிக்கக்கூடியவையாகவே காணப்படுகின்றன.

ஒருலட்சத்து 47ஆயிரம் கிலோ மீற்றர் பரப்பளவைக்கொண்ட நேபாளத்தில் சுமார் இரண்டரைக் கோடி பல்லின மக்கள் வாழ்கின்றனர்.

இந்த நிலப்பரப்பில் 72சதவீதமான இடங்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

நேபாளத்தில் மக்கள் ஆட்சியை உருவாக்கவேண்டும், தனி ஒரு மனிதரிடம் அதிகாரங்கள் குவிந்திருக்கக்கூடாது, ஒரே குடும்பத்தினரின் ஆதிக்கம், அடக்குமுறை ஒழிக்கப்படவேண்டும் எனக்கோரி 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 இல் அங்கு மாவோயிஸ்ட் இயக்கம் உருவாக்கப்பட்டது. ஆயுதக் கிளர்ச்சி ஆரம்பமானது.

**இரா.புத்திரசிகாமணி**

இந்த இயக்கத்தில் ஓர் இனத்தையோ, ஒரு மதத்தையோ அல்லது ஓர் அமைப்பையோ சேர்ந்தவர்கள் மட்டுமல்ல புத்திஜீவிகள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், டாக்டர்கள், இளைஞர், யுவதிகள், விவசாயிகள், வர்த்தகர்கள் எனப் பல மட்டத்தினரும் தீவிர பங்காளிகளாக இருக்கின்றனர்.

பலமிக்க நன்கு பயிற்றப்பட்ட 30 ஆயிரம் பேர் மக்கள் விடுதலை இராணுவப் படையணி இவர்களிடமிருக்கின்றது. இதில் 40சதவீதமானவர்கள் பெண்கள்.

கடந்த 12 வருடங்களுக்கு மேல் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்திய மாவோயிஸ்டுகளில் 15ஆயிரத்துக்குப் மேலானோர் மன்னரின் இராணுவத்துடனான நேரடி யுத்தத்தின்போது உயிர் இழந்துள்ளனர். 1200 பேர் காணாமல் போய் உள்ளனர். பல ஆயிரம் பேர் புலம் பெயர்ந்துள்ளனர். பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்திகள் அனைத்தும் தடைப்பட்டன. இக்காலகட்டத்தில் அரச படையின ரால் மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான மனித உரிமை மீறல்கள், கொலைகள், கற்பழிப்புகள் கணக்கிடப்படமுடியாதவை. இதனாலேயே நாம் மாவோயிஸ்ட் இயக்கத்தில் இணைந்தோம் என்று அந்த இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் கூறுகின்றனர்.

இக்காலகட்டத்தில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகளும் இடைக்கால இணக்கப்பாடுகளும் இடைநடுவில் முறிந்துபோயின. அப்பொழுது மீண்டும் வெடிச்சத்தங்கள், மரண ஓலங்கள்; இடம்பெயர்வுகள்.

இவை அனைத்தும் கடந்த முப்பது வருடங்களாக இலங்கை அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்றுவரும் மோதல்களையும் அரச படையினரின் ஆக்கிரமிப்பையும் வான்தாக்குதல்களையும் எமது மக்கள்அனுபவித்துவரும் சொல்லொணா துன்பங்களையும் நமது கண்முன் நிறுத்துகின்றன. தோல்வியடைந்த சமாதான முன்னெடுப்புகள், முடக்கப்பட்ட ஒப்பந்தங்கள், கிடப்பில் கிடக்கும் உறுதிமொழிகள் எத்தனை, எத்தனை? இரத்தக்களரியும், வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்த நிலையில் இந்தியா அங்கே மூக்கை நுழைத்தது. காரணம் நேபாளத்தில் எண்பது சதவீதம் வர்த்தகத்துறையில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் இந்தியர்களே. அதிமுக்கிய வர்த்தகம் அனைத்தும் இந்தியர்களின் கைகளிலேயே.

நேபாளத்தில் அமைதியை ஏற்படுத்தும் கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டது. இதனால், நேபாளத்தில் இயங்கும் ஏழு அரசியல்கட்சிகளையும் தீவிரவாத மாவோயிஸ்ட் இயக்கத்தையும் புதுடில்லிக்கு அழைத்து சமாதானப்பேச்சுகளை நடத்தியது. அப்போது மாவோயிஸ்டுகள் இந்தியாவின் செல்லப்பிள்ளையாக இருந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

பலசுற்றுப் பேச்சுகளின் பின் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி 12 அம்ச இணக்கப்பாடுகளை உள்ளடக்கிய சமாதான உடன்படிக்கை புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது. யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்தது.

மாவோயிஸ்ட் இயக்கத்தினர் 12 வருடங்களாக நடத்திய ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டனர். நாடாளுமன்றத்திலும் 83 உறுப் பினர்களையும் 4 அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொண்டனர்.

இந்த உடன்படிக்கையின்படி அரச இராணுவம் முகாம்களில் முடக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களுடன் பொது இடங்களில் திரிய முடியாது.

(22ஆம் பக்கம் பார்க்க)


**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபகமறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்ப மன நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (ஆண்மைச் சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும்நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம். நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**டாக்டர் ஆறுமுகம்**
அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**
2007 நவம்பர் 03, 04, 05 வரை
Vanni Inn,
2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

**கொழும்பில்...**
2007 ஒக்ரோபர் 21 முதல் 28 வரை
New Ahmed Tourist Inn,
BangBang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
Hot Line: 0777 569205

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்**

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால் மூலம் (தயவு செய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய முறையில் ஓடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 2224019,
Hot Line: 0777 569205.

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.

# தோட்டத் தொழிலாளரின் உழைப்பை உறிஞ்சும் கம்பெனிகளுக்கு மலையக அரசியல்வாதிகள் சேவகம்



பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் 'கொழுத்த, கம்பனிகளுக்கே இன்றைய மலையக அரசியல்வாதிகள் சேவகம் செய்கிறார்கள். வாக்களித்த தொழிலாளர், அவர் தம் குடும்பங்கள், மக்கள் ஆகியோரின் தேவைகள், பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு சமூகமட்டத்திலும் அரசியல்மட்டத்திலும் பரிகாரம் காண முனைவதில்லை-முயல்வதில்லை.

அதேவேளை, தோட்டமட்டத் தலைவர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் தொழிற்குல மேம்பாட்டுக்குப் பாடுபட்டு அளப்பெரும் சேவைகள் செய்துவருகிறார்கள். இவர்களின் கூட்டுப் பகீரதப்பிரயத்தனங்களால் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறைகள் நீக்கப்பட்டுள்ளன. சலுகைகள் ஈட்டப்பட்டுள்ளன. தோட்டமட்ட உரிமைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஒருகாலத்தில் பெருந்தோட்டங்கள் ஆங்கிலேயக் கம்பெனிகளின் கீழ் இயங்கின. பின்னர் அரசுடைமைகளாக் கப்பட்டன. அடுத்து கூட்டுத்தாபனங்களின் கீழ் கொண்டுவரப்பட்டு, இன்று 23 முகாமைத்துவக் கம்பெனிகளால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. எனினும் இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத் தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ஆகியவற் றின் கீழ் 40ஆயிரம் தோட்டக்காணிகள் உள்ளன.

அன்று தோட்டக் கம்பனிகளாலும் கூட்டுத்தாபனங்களாலும் தோட்டப் பராமரிப்புக்கென நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டது. இந்தநிதி மூலமாக தோட்ட வாகனப்பாதைகள் திறக்கப்பட்ட பதவியாளரின் தனி மனைகளும் தொழிலாளரின் கிளைமனைகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு கூரைத் தகடுகள் மாற்றப்பட்டன. பாலங்கள் அமைக்கப்பட்டு புதுக்கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இதனைச் செய்வது தோட்டக் கம்பனி

## மலையகக் கண்ணோட்டம்



வரைவளவன்

களினதும் கூட்டுத்தாபனங்களினதும் தலையாய - தவிர்க்கமுடியாத கடமைகள் பொறுப்பு.

நிர்வாகிகள் மூலமாக தோட்டமட்டத் தலைவர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் சாதனைகள் புரிந்துள்ளார்கள். மக்களின் வேதனைகளை நீக்கியிருக்கிறார்கள். இந்நிர்வாகிகள் கம்பனிகளாலும் கூட்டுத் தாபனங்களாலும் அவற்றின் தோட்டங்களை நிர்வகிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள். தோட்டமட்டத் தலைவர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் இந்நிர்வாகிகளின் கவனத்தை தொழிலாளரின் நலன்கள் பால் திசைதிருப்பி, அரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள்.

தோட்டமட்டத் தலைவர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தோட்ட நிர்வாகிகள் ஆகிய முத்தரப்பினரின் கூட்டு முயற்சிகளால் தொழிலாளரின் நிரைமனைப் பகுதிகளுக்கு ஒற்றையடிப் பாதைகள் அமைக்கப்பட்டு, விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோவில் மைதானங்கள் விசாலப்படுத்தப்பட்டுள்ளன. செடிகொடிகள் மண்டிய காலங்களில் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளில் நிர்வாகிகளால் தோட்டத்தொழிலாளரே ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தோட்டப் பணிகளில் இப்பணிகளும் உள்ளடக்கப்பட்டன.

மேட்டில் ஏறி மடுவில் இறங்கும் ஒற்றையடிப் பாதைகளில் படிகள் கட்டப்பட் டு, சிற்றாறுகளுக்கு மேலாகப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணிகளில் தோட்டமேசன்மார்களே ஈடுபடுத்தப்பட்டுள் ளார்கள். அதேவேளை, பிரதிநிதிகளினதும் தோட்டமட்டத் தலைவர்களினதும் கூட்டு முயற்சிகளால் விளையாட்டுக்குழுக்களுக்கு தோட்ட நிர்வாகிகளால் பந்துகள், வலைகள், விளையாட்டுப் பொருள்கள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்குடியிருப்பு மனைகளுக்கு வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. இல்லையேல் வெள்ளை அடிப்புக்கான சுண்ணாம்பு பக்கெற்றுகளும் தூரிகைகளும் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளன. தோட்டமட்டத் தலைவர்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் தொழிலாளருக்கு தோட்டமக்களுக்கு இவ்வாறு ஆற்றிவந்த சேவைகளை மலையக அரசியல் சுனாமிகளால் ஆற்றமுடியவில்லை. அதற்கான திராணி கிடையாது. பிரச்சினைகளையும் தேவைகளையும் ஊடுருவி நோக்குவதற்கான மதிநுட்பம் கிடையாது. ஆனால், அபாரமான வாய்வீச்சு மூலம் அவர்கள் தம்மை வல்லவர்களாக காட்டக் கூடியவர்கள்.

தோட்டத் தொழிலாளரை அடிமைகளாக சூசை பிரகிருதிகளாக கணிப்பீடு செய்யும் நிர்வாகிகளும் இருக்கிறார்கள். இவர்களின் நிர்வாகங்கள் தொழிலாளரைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கியுள்ளன, வீண்கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து உள்ளன. தொழிலாளரின் கோரிக்கைகளைத் தட்டிக்கழித்துள்ளன. தோட்டமட்ட உரிமைகளையும் சலுகைகளையும் நிராகரித்துள்ளன. கால்நடை வளர்ப்போர் நம்பிவந்த புல்வெளிகளைப் பாழ்படுத்தியுள்ளன. கிருமிநாசனி தெளித்துள்ளன. இடைக்கிடையே மரக்கன்றுகளை நட்டுள்ளன.

இந்த அடாவடித்தனங்களுக்கு எதிராகத் தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். தோட்டமட்டத் தலைவர்களாலும் சங்கப் பிரதிநிதிகளாலும் போராட்டங்கள்முடுக்கிவிடப்பட்டு, நிர்வாகிகளின் கொட்டங்கள் அடக்கப்பட்டு

(10ஆம் பக்கம் பார்க்க)




பி.சபேசன்,
முல்லைத்தீவு.

**கேள்வி: பித்தன் அவர்களே! மூன்றாம் உலகப்போர் வந்தால் என்ன ஆகும்?**

பதில்: வரலாற்றுப் பாடத்தில் இன்னும் நிறைய படிக்கவேண்டியிருக்கும்.

எம்.சிந்துஜா,
சாவகச்சேரி.

**கேள்வி: பித்தா! சிலர் தங்களை தாங்களே புகழ்ந்து பேசுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்:
''பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து''

சறோஜினி,
கல்கிசை.

**கேள்வி: பித்து! ஆண்கள் ஏன் பெண்களைத் துரத்துகிறார்கள். என்ன காரணமாக இருக்கும்?**

பதில்: காரை எப்படியும் ஓட்டமுடியாது என்று தெரிந்தும் நாய்கள் துரத்திக்கொண்டு ஓடுவதில்லையா?



க.கமால்தீன்,
சாய்ந்தமருது.

**கேள்வி: ஒருவன் ஒரு கழுதையை அடிப்பதைப் பார்த்து அவனை நான் தடுக்கிறேன். இந்த நல்ல குணத்தின் பெயரென்ன பித்தா?**

பதில்: சகோதர பாசம்.

எம்.பயாஸ்,
வெல்லம்பிட்டிய.

**கேள்வி: முட்டாள்கள் சபையில் கேள்விகேட்டால் எப்படி இருக்கும் பித்தா?**

பதில்: இப்படி இருக்கும்.



✱ இருபத்தியொரு வயசாகும் உங்கள் கடைசிப் பையனுக்கு என்ன வயதிருக்கும்?

✱ போரில் இறந்தது நீயா, உன் தம்பியா?

✱ இரண்டு வான்கள் இடித்துக்கொண்ட போது இந்த வான்கள் இரண்டுக்குமிடையில் எவ்வளவு இடைவெளி இருக்கும்?

✱ நீ எத்தனை முறை இதுவரை தற்கொலை செய்திருக்கிறாய்?

கார்த்திகேசு தயாளினி,
வவுனியா.

**கேள்வி: டியர் பித்து! நான் வெளிநாடு செல்வதாக உள்ளேன். துணைக்கு வருகின்றீர்களா?**

பதில்: துணைக்கு வாறதா, துணையாக வாறதா? துணையாக வாறதெண்டால் பித்து மாமியை கேளுங்கோ!



எம்.சிவநேசன்,
வெள்ளவத்தை.

கேள்வி: *'பித்து மாம்ஸ்'! காதலியுடன் சினிமாவுக்குப் போய்வந்துவிட்டு, நண்பனுடன் படம் பார்த்தேன் என்று மனைவியிடம் 'முழுப்பொய்' சொல்லலாமா?*

பதில்: இது எப்படிங்கோ முழுப்பொய் ஆகும். சினிமா பார்த்தது உண்மைதானே! யாருடன் பார்த்தது என்பது மட்டுந்தான்-பொய்! ஆகவே அரைப் பொய்தானே!

ஆர்.மணி,
நுவரெலியா.

**கேள்வி: மனிதன் உருவாக்கிய முதல் கலைப்படைப்பு எது பித்தா?**

பதில்: குழந்தை! அடுத்தது இலைகளால் உருவாக்கப்பட்ட ஆடை.

எஸ். இம்றாஸ்,
தெ.கி.பல்கலைக்கழகம்.

**கேள்வி: வாழ்க்கை எப்போது முழுமை அடையும் பித்தா?**

பதில்: வாழ்க்கை என்பது என்ன என்று நாம் தெரிந்துகொள்வதற்குள் வாழ்க்கையில் பாதியைத் தொலைத்துவிடுகிறோம். அப்படியிருக்க எப்படி முழுமை அடையும்.

அஜீபா அன்சார்,
பட்டியடிப்பிட்டி.

**கேள்வி: ஆண்களைவிட பெண்களுக்குத்தான் 'ஈகோ' அதிகம் என்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

பதில்: பெண்களின் ஈகோ கெட்டியாகக் காணப்படும் ஐஸ்கிறீம் மாதிரி...ஊதினாலோ உருகிவிடும். ஆண்களின் ஈகோ இறுகிப்போன களிமண் உருண்டை. உடைக்கவேண்டி வரும்.

க.கோமதி,
இலுப்படிச்சேனை,
கன்னன்குடா.

**கேள்வி: கணவனுக்கு ஏற்ற பெண்ணாக இருக்கவேண்டும் என்கிறார்களே அப்படியென்றால் என்ன பித்தா?**

பதில்: சாடிக்கேற்ற மூடிபோல, கதவுக்கேற்ற திறப்புப் போல, உரலும் உலக்கையும் போல இருக்கவேண்டும் என்று அர்த்தம்.

கே. உமாபதிசிவம்,
மட்டக்குளி.



**கேள்வி: பித்து! என் காதலிக்கு எதிலுமே 'இஷ்டம்' இல்லை என்ன செய்வது?**

பதில்: மனைவி ஆக்கிக்கொள்ளுங்கள்! மறுக்கமுடியாது.

கார்த்திகேசு தயாளினி,
வவுனியா.

**கேள்வி: சீதாப்பிராட்டியாரை தீக்குளிக்கச் செய்த இராமன் சந்தேகரா?**

பதில்: இராமர் அவ்வாறு சொல்லியிருக்காவிட்டால் இற்றை வரையும் சீதை மீது ஏற்பட்ட களங்கம் நீங்கியிருக்காது. உலகம் அவரை பத்தினியாகவும் பார்த்திருக்காது.

பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான். அனுப்ப வேண்டிய முகவரி:

'பித்தன் பதில்கள்'
சுடர் ஒளி (வாரஇதழ்)
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

MANUFACTURED IN JAPAN

# உங்கள் எல்லா கனவுகளும் ஈடேற இடமுண்டு. மேலும்...

உட்புற சௌகரியத்தில் அபூர்வமான தரங்கள், வியப்பூட்டும் விசாலமான கால்வைப்புப்பகுதி, அபூர்வமான கூரைப்பகுதி ஆகியவை குறித்து நீங்கள் சுதந்திரமாக கனவு காணலாம். லியனா இதனை நிறைவேற்றும். உறுதியான தயாரிப்பு. முன்கூட்டிய பாதுகாப்பு. இவற்றை லியனா கருத்தில் கொள்கிறது. மீள்நினைக்க நீங்கள் விரும்பினால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. வாழ்க்கையில் உங்கள் எதிர்பார்ப்பை அடையலாம்.




- எல்லாப் பயணிகளுக்குமான விசாலமான, உயரமான கெபின், போதிய அளவிலான கால்வைப்பு கூடம், கூரைப்பகுதி.
- தரமான இயந்திரம் பொருத்தப்பட்டது. வடிவமைக்கப்பட்ட கட்டுப்பாட்டு விதிகளோடு எவ்வகையிலும் ஓட்டக்கூடிய வசதி.
- ஒவ்வொருவரும் சௌகரியமாகவும், நேர்த்தியாகவும் பயணிக்கத்தக்க வகையில் ஆசனங்கள் வடிவமைக்கப்பட்டவை. உயர்தரத் தயாரிப்பு, சோர்வை நீக்குபவை.
- கால்வைப்புக்கு வியக்கவைக்கும் இடவசதி, சௌகரியமாக ஏறி அமரத்தக்கவகையில் தாராளமாகத் திறக்கக்கூடியவை.
- முன்கூட்டியே பாதுகாப்புத்தரும் அம்சங்கள். மனதுக்கு அமைதியும் இதமும் அளிக்கும் பாதுகாப்புச் சாதனங்கள்.

1300சிசி & 1600 சிசி நவீன தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட இயந்திரம் பொருத்தப்பட்டது.

2 ஆண்டுகள் / **50,000km உத்தரவாதம்**

விலை ஆரம்பம் **Rs. 2, 270,833** + வரி

கையிருப்பு நிலையிலிருந்து புத்தம் புதிய லீனா கொள்வனவு செய்ய இதுவே உங்களுக்கு கடைசி சந்தர்ப்பம்

**TEST DRIVE! BE CONVINCED**

SUZUKI

Way of Life!

AMW

**ASSOCIATED MOTORWAYS PLC** (Co. Reg. No. PQ 10)

**Suzuki Maruti Showroom**

445, Bauddhaloka Mawatha, Colombo 08.

**Divan** - 077 3124368, **Dhanika** - 077 3502857.

**Shiran** - 077 3435627, **Samith** - 071 3120175.

**www.suzuki.lk**

www.cpm.lk

## பேனா நண்பர்கள்



பெயர் :ம.சுகிந்தன்
வயது: 23
முகவரி: 'மதிவதனம்',
அல்வாய் வடக்கு,அல்வாய்.
பொழுதுபோக்கு: பத்திரிகை,வானொலி.



பெயர் : வை.நவாஷ்
வயது : 18
முகவரி: இல.83/10, பழைய சந்தைவீதி,
ஏறாவூர்- 03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர் : ந.ஜீவன்
வயது: 25
முகவரி: வயல் அல்வாய் வடக்கு,
அல்வாய்.
பொழுதுபோக்கு: பத்திரிகை,வானொலி.



பெயர் : எச்.எப்.ரிஸ்னா
வயது : 19
முகவரி: 16/7,மீதொட்டமுல்லை லேன்,
வெல்லம்பிட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கவிதை,
இணையம்.



பெயர் : ரெ.முகேந்திரன்
வயது : 18
முகவரி: பானேம் தோட்டம்,
புவக்பிட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.
தொலைக்காட்சி.

## பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டு கோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டை யின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.
கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

## தோட்டத் தொழிலாளரின்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளார்கள். பதவிகளிலிருந்து இறக்கப்பட்டுள்ளார்கள். இந்தச் சாதனைகள் மறுப்பதற்கில்லை.

தோட்டங்களிலுள்ள வாகனப்பாதைகள் அனைத்தும் 'தார்' போட்பட்டவை அல்ல பிரதான பாதைகளுக்கு மாத்திரம் 'தார்' போடப்பட்டிருக்கும். ஏனையவை 'கிறவல்' போடப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டவை. தோட்டப்புற வாகனப் பாதைகளில் தோட்ட வாகனங்களின் ஓட்டங்களே இடம்பெறும். விடுமுறை நாட்களிலும் இராக்காலத்திலும் முக்கிய பாதைகள் மூடப்பட்டு தனியார் வாகனங்கள் உட்புகுதல் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் சில தோட்டங்களில் கெடுபிடிகளும் வரி வசூலிப்புகளும் இடம்பெறுவதுண்டு.

வாடகை வாகனங்களிலும் மக்கள் தோட்டப்புறங்களுக்கு வருவர். அவர்கள் அத்தோட் டத்தில் வசிப்பவர்களாகவும் இருப்பார்கள். இல்லையேல் உறவினர்களாக வும் இருப்பார்கள். அவ்வாகனங்களுக்கும் அதோ கதிதான். ஒரே நியதி. 'கேட்' அடியில் இறக்கிவிட்டு விட்டு வாகனம் பறந்துவிடும். இறங்கியவர்கள் இல்லை இறக்கிவிடப்பட்டவர்கள் பிள்ளை குட்டிகள், பொதிகள் ஆகியவை சகிதம் நடைபோடுவார்கள். மைல்களைக் கடக்க வேண்டியவர்களாகவும் இருப்பார்கள். கும்மிருட்டா? அடைமழையா? அந்தோ அவர்கள் பாடு அந்தரம்தான்.

மலையகத்தில் தனித்துவமான அரசியல் கட்சி கிடையாது. ஒவ்வொரு தொழிற் சங்கத்திலும் ஓர் அரசியல்பிரிவு. பிரதேச சபை, மாகாணசபை, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் வந்தால்போதும் ஒவ்வொரு பிரிவிலும் அரசியல் உயிர்பெற்று தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்கும். தேர்தல்களுக்குப் பின்னர் அரசியல் பிரிவுகளின் சப்த நாடிகள் ஒடுங்கிவிடும். 'மூச்சுப்போனால் பேச்சு ஏது'?

மலையக பிரதேச சபைகள், மாகாண சபைகள், தேர்தல் தொகுதிகள் ஆகியவற்றில் எம்மவர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோரும் உள் ளார்கள். இவர்களில் சிலரை அணுகியிருக்கிறேன். பங்கு, பணிகள் குறித்து வினவியுள்ளேன். அரசுடன் ஒட்டிநிற்பது, பின்னர் வெட்டிக்கொண்டுஎட்டிநிற்பது ஆகிய சித்து விளையாட்டுகள் இவர்களுக்குக் கைவந்த கலைகள்.

''எவருடனும் கூட்டுச்சேர்வோம். மலையக மக்களுக்கு உழைப்பதே எம் குறிக்கோள்'' என்பதே அவர்களின் அரசியல் சித்தாந்தம், தாரகமந்திரம். ஆனால், தோட்டத்தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டிக்கொழுக்கும் கம்பனிகளுக்கே சேவகம். அரசால் ஒதுக்கப்படும் நிதியில் கம்பனிகளுக்கு அரும்பெரும் தொண்டுபுரிவதும் தொழிற்சங்கக் கோட்பாடுகளுக்கும் அரசியல் சித்தாந்தங்களுக்குமிடையே மண்டிக்கிடக்கும் அந்தகாரத்துக்குள் நொண்டியடிக்கும் மேதைகள்.

பங்குபணிகள் குறித்து வினாக்கள் தொடுத்தால் கிடைக்கும் விடைகள், ''அந்தத் தோட்டத்துப் பாதைக்கு தார் போட்டிருக்கிறேன் இந்தத் தோட்டத்துக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுத்திருக்கிறேன், விளையாட்டுக் குழுவுக்கு வலை, பந்து கொடுத்திருக்கிறேன், ஒற்றையடிப் பாதைகள், படிகள் அமைத்துக் கொடுத்துள்ளேன்'' என்கிறார்கள்.

மலையக அரசியல் எங்கே தரித்து நிற்கின்றது பாருங்கள்!

இவர்களால் 'தார்' போட்ப்பட்ட கம்பனி தோட்டப் பாதைகள் கரும்சாரைகளைப் போல நீண்டு நெளிந்து ஓடுகின்றன. சின்னத்துரைமார் மோட்டார் சைக்கிள்களில் சவாரி செய்கிறார்கள். முன்னைய குலுக்கல்கள் இல்லை. சுகமான சவாரி. தோட்டத் தேயிலை ட்ரக்குகள் ஓடுகின்றன. ஓட்டத்தில் துரிதம். ஆட்டங்கள் இல்லை. தோட்ட முகாமையாளர்களின் கார்கள் பறக்கின்றன. தடுமாற்றமில்லை. தோட்டக்கொழுந்து லொறிகள் ஓடுகின்றன. முன்னைய தயக்கமில்லை. தடங்கல்கள் கிடையாது.

தோட்ட வாகனங்கள் பராமரிப்புக்கு கம்பெனிகள் ஒதுக்கீடு செய்யும் தொகையில் வீழ்ச்சி. பாதைப் பராமரிப்புக்கென ஒதுக்கீடு செய்யும் நிதியில் வீழ்ச்சி. மலையக அரசியல் மோதல்களின் சேவையால் கம்பெனிகள் உயர்ச்சி. தொழில்குலத்துக்கு என்றும் தாழ்ச்சி.

சுடர்ஒளி நாளிதழில் வெளியான 'பதுளைப் பகுதி அபிவிருத்திக்கு 32இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு' செய்தியில் சில பகுதிகள்.

சமூக அபிவிருத்தி மற்றும் சமூக அநீதி ஒழிப்பு அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரரின்அறிவுறுத்தலுக்கமைய, அமைச்சு பதுளைப் பகுதியிலுள்ள பெருந்தோட்டங்களின் அபிவிருத்தி மேம்பாடுகளுக்கென 32இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

நாவிலை தோட்டத்தொழிற்சாலைப்பிரிவு பாதை, விளையாட்டு மைதான சீரமைப்பு வேலைகளுக்கென இரண்டு இலட்சத்து 30ஆயிரம் ரூபா.

பிங்கராவை தோட்டப் படிக்கட்டுப் பாதை மற்றும் சிறுபாலமைப்புக்கென 4 இலட்சத்து 18 ஆயிரம் ரூபா. நியூபேக் தோட்டப் படிக்கட்டுப் பாதை, கொங்கிறீற்றிலான பிரதான பாதை ஆகியவற்றுக்கென 2 இலட்சத்து 36 ஆயிரம் ரூபா.

அம்பகாமம் தோட்டப்பாதை மற்றும் விளையாட்டு மைதான சீரமைப்பிற்கு ஓர் இலட்சத்து 75 ஆயிரம் ரூபா. பெத்தயராவ பாதை மற்றும் கொட்டகஸ்வத்தை படிக்கட்டுப் பாதைக்கென ஓர் இலட்சத்து 22ஆயிரம் ரூபா.

பத்திரிகைச் செய்தியை மேலே வாசித்தீர்கள். தொழில்கொள்ளுநருக்குரிய சட்டதிட்டங்கள், நடைமுறைகள் வேறு தொழில்செய்வோருக்கான சட்டதிட்டங்கள், நடைமுறைகள் வேறு. இவற்றை மலையக அரசியல் பிரகிருதிகள் புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, தாங்கள் கம்பெனிகளின் பிரதிநிதிகளா? என்பதை நிதானித்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் இதே குளறுபடிகள் நீடிக்க இடமுண்டு.



## ஒன்பதாவது பெண்

விஞ்ஞானச் சிறுகதை

இருபது குழந்தைகளும் அழகாக இருந்தார்கள். ஆரோக்கியமாக இருந்தார்கள். சரியாகப் பத்துப் பேர் ஆண்கள்; பத்துப் பெண்கள். எல்லோருக்கும் ஒரே வயது. ஒரே பிறந்த தினம். வகுப்பறைக்குள் பூக்களை இறைத்தது போல் உற்சாகமாகச் சிரித்துக்கொண்டு நுழைந்து, ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு வரிசையாக நின்று கண்மூடித் தியானத்தில் சில வினாடிகள் நின்றார்கள்.

''எங்களது அன்றாட வாழ்க்கையை அமைத்து, எங்களுக்கு எல்லாவிதமான பாக்கியங்களும் அளித்து வரும் கம்பியூட்டர் தாத்தாவுக்கு இன்றைய வந்தனங்கள்''

என்று முணுமுணுத்துவிட்டு,

''நித்யா, நீங்கள் சுகமா'' என்றார்கள் ஒரே குரலில்.

''சுகம் குழந்தைகளே ! வந்தனம்!''

''இன்று என்ன பாடம்?''

''நீங்கள் என்ன படிக்க விரும்புகிறீர்கள்?''

''இல்லை. அவர்கள் மனத்தினால் பிரித்திருந்தார்கள். மனிதனும் மனிதனும் வைரி என்று நினைத்திருந்தார்கள். வேறு வேறு பாஷை பேசினார்கள். வேறு வேறு சமூக நிலையில் இருந்தார்கள். இது பாடத்தின் பின் பகுதியில் புரியும் உனக்கு.''

மறுபடியும் பாடம் தொடர்ந்தது.

''சில தேசங்கள் மட்டும்தான் சந்தோஷம் என்பதின் ஆரம்பத்தை அடைந்திருந்தன. பெரும்பாலானவர்கள் ஆதாரத்தேவைகள் கூடப் பெறாமல் இருட்டிலும் அறியாமையிலும் வியாதியிலும் இருந்தார்கள்.''

ஒரு சாக்கடைத் தெருவின் அருகில் குப்பைக் கூளங்களுக்கு மத்தியில் நிர்வாணமாக சிறு குழந்தை நடப்பது திரையில் தெரிந்தது...

''இதுதான் இருபதாம் நூற்றாண்டுக் குழந்தை.''

வகுப்பே, தெளிவாகத் தெரிந்த அந்தப்



''சரித்திரம்.''

''சரி. உங்கள் சாதனங்களை அமைத்துக்கொள்ளுங்கள்.''

குழந்தைகள் தத்தம் மெத்தை நாற்காலிகளின் வளைந்த சுகத்தில் பதிந்து காதுகளில், இறகிலும் மெல்லிய ஒலிக்குழாய்களைப் பொருத்திக் கொண்டு எதிரே.திரையில் ஆவலுடன் பார்த்தார்கள்.

நித்யா மொனிட்டரில் உட்கார்ந்து 'சரித்திரம்' 'இருபதாம் நூற்றாண்டு' 'ஆறாம் வகுப்பு' என்று அடித்தாள். ' தயார்'என்கிற விளக்கு எரிந்தது. 'காட்டு' என்கிற பட்டனைத் தொட்டாள்.

சுவரில் விரவியிருந்த திரையில் பிம்பங்கள் பிரகாசமடைந்தன. மெலிதான சங்கீதம். மெலிதான வற்புறுத்தும் குரல் ஒன்று:

''இருபதாம் நூற்றாண்டில் மனிதர்கள் காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்தார்கள். எலெக்ட்ரோனிக்ஸ் யுகத்தின் ஆரம்பத்துக்கு அவர்கள் வித்திட்டாலும் சில தேசங்கள் மட்டும்தான்...''

குறுக்கீடு செய்யும் சிவப்பு விளக்கு எரியப் பாடம் நின்றது.

''சந்தேகம் யாருக்கு?'' என்றாள் நித்யா. அந்தப் பெண், ''தேசம் என்றால் என்ன நித்யா?'' என்றாள்.

''அப்போதெல்லாம் உலகத்தைப் பல தேசங்களாகப் பிரித்திருந்தார்கள்.''

''எப்படி? பள்ளம் வெட்டியா? சுவர் கட்டியா?''

பையனின்... ப் பார்த்து சிரித்தது.

''தங்கள் வாழ்வு நிலையை உயர்த்திக் கொள்ளாமல் அவர்கள் ஒருவருடன் ஒருவர் போராடி ஆகாய விமானம், பீரங்கி போன்ற காட்டு மிராண்டி ஆயுதங்கள் தயாரிப்பதில் தங்கள் சக்திகளையும் நேரத்தையும் விரயம் செய்தார்கள். ஒருவரை ஒருவர் வெறுத்தார்கள், போரிட்டார்கள், கொன்றார்கள்''.

திரையில் கடுமையான குண்டு வீச்சும் விமானத் தாக்குதலும் பாலங்கள் விண்டு உடைவதும், தூள் பறப்பதும் தெரியக் குழந்தைகள் கைகொட்டி ஆரவாரித்துச் சிரித்தார்கள்.

நித்யாவின் கவனம் மெதுவாக அலைந்தது. பத்து நிமிஷம் பாடம் நடந்தால் ஒரு நிமிஷம் குழந்தைகள் சந்தோஷமடைய வேண்டும் மறுபடியும் பத்து நிமிஷம் பாடம் அல்லது விளையாட்டு.

''காட்டுமிராண்டித்தனமாக ஒருவரை ஒருவர் கல்யாணம் செய்து கொண்டார்கள்...''

சிவப்பு விளக்கு மறுபடியும் எரிய, ''கல்யாணம் என்றால் என்ன நித்யா?''

''ஆணும் பெண்ணும் ஒன்று சேர்ந்து பிரியாமல் வாழ்வது... குழந்தைகளை உண்டாக்குவது... சண்டைபோட்டுக்கொள்வது... பிரிவது... அந்தக் காலத்து வழக்கம்.''

''புரியவில்லை. ஆணும் பெண்ணும் குழந்தை உண்..''

நித்யாவுக்கும் சரியாகப் புரியவில்லை...

(25ஆம் பக்கம் பாக்க)

கேள்வி: ஆண் வயது 25. எனது சொந்தக்காரர் ஒருவர் ஆயுள்வேத வைத்தியராக இருக்கிறார். எனக்கு இடுப்புவலி ஏற்பட்டு அவரிடம் காட்டியபோது நான் தினமும் நிறைய தண்ணீர் குடிக்காததால் தான் இடுப்பு வலி வந்தது என்றார். தினமும் குறைந்தது ஒன்றரை லீட்டர் நீர் பருகச் சொன்னார். இதன் பின்னர் எனது இடுப்புவலி போய்விட்டது. ஆனால்



# செயற்கை முறையில் கருத்தரிப்பது வாழ்க்கையில் மகிழ்ச்சியை உண்டுபண்ணுமா?

தினமும் இவ் வளவு நீர் பருகுவது கஷ்ட மாக இருக்கின்றது. சில வேளைகளில் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டியுள்ளது. இவ்வளவு நீர் தினமும் அருந்த வேண்டியது அவசியமா? நீருக்கு பதில் - காப்பி, தேநீர், குளிர்பானங்கள் அருந்துவது கூடாதா? விளக்கம் தரவும்?

பதில்: நமது இரத்தத்தில் 83 சதவீதம் நீர் உள்ளது. உணவு இல்லாமல் மாதக்கணக்கில் உயிர் வாழலாம். ஆனால், நீர் இல்லாமல் ஐந்து நாட்கள் கூட வாழ முடியாது. சாதாரண ஆரோக்கியமான மனிதனுக்கு தினமும் 1½ லீட்டர் தொடக்கம் 2 லீட்டர் வரை நீர் அவசியம். அதிகம் உடற்பயிற்சி செய்பவர்கள், வெப்பமான சூழ்நிலையில் தொழில் செய்பவர்கள், வாழ்பவர்கள் இன்னும் அதிகமான நீர் பருக வேண்டும். நிறைக்குத் தக்க அளவு- அதாவது 10கிலோநிறைக்கு 200மி.லீ. நீர் என்ற அளவில் உடலுக்கு நீர் தேவை. நமது உடலுக்குத் தேவையான நீர் கிடைக்காவிடில் மலச்சிக்கல், சிறுநீரக பிரச்சினை என்பவை ஏற்படும். சிறுநீர்தொற்று, சிறுநீரில் சிறியகற்கள் உருவாகுதல் என்பன குறைவாக நீர் உபயோகிப்பவர்களுக்கு எளிதில் ஏற்படக் கூடிய உபாதைகளாகும்.

உங்கள் வைத்தியர் கூறியப்படி உங்கள் இடுப்புவலி, சிறுநீர் சுரப்பு குறைவினால் - சிறுநீரக தொற்று - சிறுநீரில் கற்கள் என்பவற்றால் ஏற்பட்டிருக்கக்கூடும்.

நீர்அதிகம் அருந்தும் போது அடிக்கடி சிறுநீர் போவது சகஜம். ஆனால், ஆரம்ப காலத்தில் தான் இப்படி இருக்கும். நாளடைவில் குறைந்த தடவைகளில்- அதிக சிறுநீரை கழிக்க தன்னை சீராக்கிக்கொள்ளும்.

நீருக்கு பதில் காப்பி, தேநீர், குளிர் பானங்கள் அருந்தலாம். ஆனால் இவற்றில் உள்ள ( caffeine) மற்றும் சீனி என்பவற்றை அதிகளவில் உபயோகிக்கும்போது அவை உடலில் சேர்ந்து வேறு பிரச்சினை களை தரும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

கேள்வி: எனது மகன் வயது1½. போத்தலில்தான் பால் குடிப்பான். இரவில் தூங்கும் போது போத்தலை விடாமல் வாயில் வைத்துக் கொண்டே தூங்கி விடுவான். நான் போத்தலை வாயிலிருந்து எடுத்தால் தூக்கம் கலைந்து எழும்பி அடம்பிடித்து அழுவான். இதனால் நான் அவனை அப்படியே படுக்க விட்டு விடுவதுண்டு. இது பிற்காலத்தில் அல்லது இப்பொழுது வேறு பிரச்சினைகளை தருமா?

பதில்: நிச்சயம்- இந்த நிலையில் பாலுடன் போத்தலை வாயினுள் வைத்துக் கொண்டு தூங்குவது- பிரச்சினைகள் பலவற்றைத் தரும்.

முதற்பிரச்சினை- முக்கியமான பிரச்சின்ன - வாயினுள் உள்ள பால்புட்டியிலிருந்து கசியும் பால்- ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் புரைக்கேறி சுவாசப்பையினுள் சென்றால் சுவாசப்பை அழற்சி (pnieumonia ) ஏற்படலாம். சில வேளைகளில் மரணம் கூட ஏற்படலாம்.

வாய்க்குள் பலமணிநேரம் பால் இருப்பதால் இந்த பால் முன்வாய்ப் பற்களில் படிந்து, பற்களில் கிருமித்தாக்குதலை உண்டாக்கும். இப்படி தொடர்ந்து நடந்தால், பற்கள் முழுமையாக கெட்டுப் போகும். இந்த பற்சொத்தை அனைத்துப் பற்களுக்கும் விரைவில் பரவி பற்கள் கறுப்பாகவும் சிதைந்தும்போகும். இந்தப் பழக்கம் தொடருமானால் பாற்பற்களிருக்கும் போதே - தாடையினுள் வெளியே வருவ தற்காக காத்துக்கொண்டிருக்கும். permanent tooth என்கிற நிரந்தர நிலையான பற்களுக்கும் தொற்று பரவி பிற்காலத்தில் பாதிப்பை உண்டாக்கும்.

கேள்வி :ஆண் வயது 34. எனது மனைவிக்கு வயது 29 . எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. கடந்த சில மாதங்களாக எனது மனைவிக்கு தாம்பத்திய உறவில் விருப்பமே இல்லை. நான் விரும்பிச் சென்றாலும் உடலுறவை தவிர்க்கவே விரும்புகின்றாள். காரணம் கேட்டால் மனம் இல்லை. mood இல்லை என்கிறாள் இது எதனால்?

பதில் :நவீன உலகில் அதிக உழைப்பு, மன அழுத்தம், அலைச்சல், பணப்பிரச்சினை என்று அநேக மன உளைச்சல்கள் ஆண், பெண் இருபாலாரையும் பாதிக்கின்றன. ஆனால் இத்தனை பிரச்சினைகளுக்கு ஆண் ஆளாக்கப்பட்டாலும் உடலுறவில் இன்பத்தை பெற ஆண் சோர்வடைவதில்லை. அன்றாட வாழ்வின் மன உளைச்சல்களுக்கு உடலுறவு சிறந்த வடிகால் என்று மனோவியல் நிபுணர்கள் கூறுகின்றார்கள். ஆனால், பெண்கள் விஷயத்தில் மன உளைச்சலை ஒதுக்கி வைத்து உடலுறவுக்கு சம்மதிக்க அவர்களது மனோ பாவம் இடம்கொடுப்பதில்லை. மனோயியல் நிபுணர்கள், பெண்கள் உடலுறவைத் தடுப்பதற்கு சில காரணங்களை கூறுகின்றார்கள்.

பெண்கள் உபயோகிக்கும் கருத்தடை மருந்துக்கள்- பாலுணர்வை சிலருக்கு குறைகின்றன. வேறு பிரச்சினைகளுக்கு, உதாரணமாக அதி உயர் இரத்த அழுத்தம் , நீரிழிவு என்பவற்றிற்கு உபயோகிக்கப்படும் மருந்துகளும் உடலுறவில் ஈடுபாட்டை மட்டுப்படுத்துகின்றன. குழந்தைக்கு பாலூட்டும் தாய்மார்களுக்கு அந்த பாலூட்டும் கால கட்டத்தில் உடலுறவில் விருப்பம் முற்றாக குறைந்துவிடுகின்றது.

சரியான தூக்கம் இல்லாவிடிலும் சில ஹோர்மோன் பிரச்சினைகளாலும் உடலுறவில் ஈடுபாடு குறைகின்றது.

கணவன் மனைவிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகள், மன வேறுபாடுகள் உடலுறவு பற்றிய பயம், உடலுறவில் ஏற்படும் அருவருப்பு என்பவை கூட தாம்பத்திய உறவை பாதிக்கின்றன.

சில பெண்கள் தாயாகிய பின்னர் தமது உடல் அமைப்பு - அவலட்சணமாகி விட்டது என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டு - தனது உடம்பைக் காட்ட வெட்கப்பட்டு பாலுறவை தவிர்ப்பதும் உண்டு. எனவே நீங்கள் உங்கள் மனைவியுடன் தனியே மனம் விட்டு பேசிக் காரணத்தை அறிந்து - அதற்கேற்றவாறு பரிகாரம் தேடவும்.

கேள்வி: பெண் வயது 29. திருமணமாகி ஒன்பது வருடங்கள் குழந்தைகள் இல்லை. எத்தனையோ சிகிச்சைகள் செய்தும் பலனில்லை. எனக்கோ, கணவருக்கோ எதுவித பிரச்சினையுமில்லை என்று சகல மருத்துவர்களும் சொல்லிவிட்டார் கள். இந்தநிலையில் செயற்கை முறையில் கருத்தரித்து ஒரு வாரிசு பெற இருவரும் சம்மதித்துள்ளோம். செயற்கை முறைக் கருத்தரித்தல் என்றால் என்ன? இதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் என்ன என்பதை விளக்க முடியுமா?

பதில்: செயற்கை முறை கருத்தரித்தல் என்ற விஷயத்தில் கிட்டத்தட்ட ஐந்துவழிகள் உண்டு. கணவன், மனைவி இருவரினதும் குழந்தை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினைக்கு ஏற்றவாறு எந்தவித செயற்கை முறைகருத்தரித்தல் என்பதை முடிவுசெய்ய வேண்டும். அவை:

1.கணவனின் விந்தணுக்களில் பிரச்சினை இருந்தால் - இன்னொருவருடைய விந்தணுவை கணவன் மனைவி இருவரின் சம்மதத்துடன் பயன்படுத்தல்.

2.கணவரின் விந்து சரியாக இருந்தாலும் மனைவியின் கருப்பை கருவை சுமக்க கூடிய சக்தி இல்லாமல், பலவீனமாக இருந் தால்- கணவரின் விந்தணுக்களையும் மனைவியின் முட்டைகளையும் வெளியே இணைத்து பின்னர் மனைவியின் கருப்பை யில் பக்குவமாக வைத்து வளர்த்தல்.

3. மனைவியின் கருப்பைக்கு கருவை சுமக்கும் செயற்திறன் குறைந்தால் மேற் கூறியவாறு வெளியே உருவாக்கிய கருவை இன்னொரு ஆரோக்கியமான பெண்ணின் கருப்பைக்குள் வளர்த்தல். இந்தப் பெண் surrogate mother என்று அழைக்கப்படுவாள்.

4.சூலகம் செயல்திறன் அற்றதாகவோ சரியாக வளர்ச்சியடையாமலோ அல்லது ஹோர்மோன்களை உபயோகித்தும் முட்டைகள் வெளிவராமல் செயல்ரீதியான சுற்றுள்ளதாகவோ இருந்தால் வேறொரு பெண்ணின் முட்டையை சத்திர சிகிக்சை மூலம் பெற்று வெளியில் கருவை உருவாக்கி கருப்பையில் பதியம்வைத்தல்.

மேற்படி முறைகளில்தான் தற்பொழுது செயற்கைக் கர்ப்பம் தரித்தல் நடைபெறுகின்றது. இந்த முறைகளில் சத்திரசிகிச்சையினால் ஏற்படும் சிக்கல்களைவிட உளவியல், வாழ்வியல் ரீதியில் உள்ள சிக்கல்தான் பிரச்சினைகளை ஏற்படுத்தும். மனைவியின் கருவில் இன்னொருவரின் விந்து வைக்கப்படுகின்றது. இது யாருடையது என்று டாக்டர் சொல்லாவிடினும் தன்னுடையதல்ல என்பது கணவருக்கு தெரியும். இதனால் தனது குழந்தையிடம் அந்த தகப்பன் காட்டும் அன்பு பாதிக்கப்படலாம். மனைவிக்கும் குற்ற உணர்வு ஏற்படலாம். வாடகைத்தாய் எனப்படும் surrogate mother மூலம் பெறும் குழந்தை தங்களுடைய குழந்தை என்பது கணவனுக்கும் மனைவிக்கும் நன்குதெரிந்தா லும் தாழ்வு உணர்ச்சி இருவருக்கும் ஏற்படலாம். வாடகைத் தாய் மூலம் உணர்ச்சிபூர்வமான சிக்கல்கள் ஏற்படலாம். தமது குழந்தை - செயற்கை கர்ப்பமாக வெளியே கருத்தரித்து - வந்தது என்று தெரியவந்தால்- அதன் வளர்ச்சி, ஆரோக்கியம், புத்திசாலித்தனம் பற்றி பெற்றோருக்கு கலக்கம் ஏற்படலாம். இப்படியான சிக்கல்களை தம்பதியினர், டாக்டர் எல்லோரும் நன்கு கலந்தாலோசித்து ஏற்றுக்கொண்ட பின்னரே இத் தகைய கருத்தரித்தலுக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை,கொழும்பு-14.

கேள்வி: வயது 24 ஆண். இந்து சமயத்த வன். எனக்கு நிறைய இஸ்லாமிய நண் பர்கள் உண்டு. இவர்கள் தமது மத வழக் கப்படி 'சுன்னத்' என் கின்ற Circumcissi on சிகிச்சையை செய்துள்ளார் கள். இதனால் ஆண் உறுப்பில் புற்றுநோய் வராது, உடலுறவில் அதிக நேரம் அதிக இன்பம் கிடைக்கும் என்கிறார்கள். நான் திருமண்ம் முடிந்து எனது தாம்பத்திய உறவில் எது வித பிரச்சினையும் இல்லை. ஒரு வயது ஆண் குழந்தையும் உண்டு. நண்பர்களின் தூண்டுதலால் 'சுன்னத்' செய்யலாமோ என்று சிலவேளைகளில் எண்ணுகின்றேன். எனது மனைவிக்கு இதில் விருப்பமில்லை என்றாலும் மருத்துவ ஆலோசனை பெற்று சரியென்றுபட்டால் செய்யச் சொல்கின்றார். உங்கள் கருத்தை அறிய விரும்புகின்றேன்.

பதில்: ஒரு குறிப்பிட்ட மதத்தின் சடங்கு என்ற ரீதியில் தான் 'சுன்னத்' சிகிச்சை பிரபல்யமாகின்றது. ஆண் உறுப் பின் முனையை மூடியிருக் கும் தோல் பகுதியை (prepuce) முன் தோல் என்பார்கள். இதனை இழுத்து அளவாக - அழ காக- ஆண் உறுப்பின் கழுத்து பகுதிவரை Corona- சத்திர சிகிச்சை மூலம் அகற்றிவிடுவதுதான் சுன்னத் அல்ல Circumcission ஆகும். இஸ்லாமிய மதத்திலும், யூதர் இனத்தவர்களிடையேயும் பல நூற்றாண்டு காலமாக சுன்னத் ஒரு மதச் சடங்காக - சம்பிரதாயமாக நடந்துவருகின்றது. ஆரம்பத்தில் தோலை இழுத்து மத குருக்கள் கத்தரித்துவந்தார்கள். இப்பொழுது Local analgesia எனப்படும் தோலை மரத்துபோகச் செய்து வலி இல்லாமல் இந்த சிகிக்சை செய்யப்படுகின்றது.

தற்பொழுது - இந்த சிகிச்சையை பல வித சுகாதாரக் காரணங்களை கூறி இன,மத வித்தியாசமின்றி பலரும் செய்துவருகின்றார்கள். ஆண் உறுப்பின் முன் தோலின் அடிப்பகுதியில் உள்ள சுரப்பிகள் Smegma என்கின்ற வெண்மையான பசைத்தன்மையுள்ள ஒரு பொருளை சுரக்கின்றன. உண்மையில் இந்த சுரப்பு ஆணுக்கு உடலுறவின் போது முன் தோல் ஆண் உறுப்பின் மீது வழுக்கி செயல்பட உதவு கிறது. ஆனால் ஒருசில மருத்துவர்கள் இந்த Smegma, ஆண்குறி புற்றுநோய் மற்றும் உடலுறவின் போது பெண்களுக்கு கருப்பை வாசல் புற்றுநோய் ஆகியவற்றுக்கு அடிகோலுகின்றது என்று நம்புகின்றார்கள். எனவே தினமும் குளிக்கும்போது முன் தோலை பின்னால் இழுத்து ஆண்குறியை சுத்தம் செய்வது அவசியம் என்று அறிவுறுத்துகின்றார்கள். இதற்கு இன்றும் வசதியாக சுன்னத் செய்து கொள்வதால் இந்த சுரப்பு பொருள் தங்கும் நிலை தடைபடுகின்றது. இந்த கருத்து1965ஆம் ஆண்டளவில் பிரபலமாக பேசப்பட்டது. பலர் சுன்னத் சிகிச்சையை ஏற்றுக்கொண்டார்கள். சுன்னத் செய்த இஸ்லாமிய இனத்தவரிடமும் யூத இனத்தவரிடமும் ஆண்குறி புற்றுநோய் குறைவாக காணப்பட்டதாக புள்ளி விவரங்களும் தரப்பட்டன. ஆனால் சமீப காலத்தில் Smegma மூலம் புற்று நோய் ஏற்படும் என்பதை உறுதியாக சொல்வதற் கில்லை என்று புதிய கருத்துக்கள் பரவி வருகின் றன. அடுத்தது சுன்னத் செய்தவர்களுக்கு நீண்டநேரம் உடலுறவு கொள்ளலாம் என்ப தும் அதிக இன்பம் கிடைக்கின்றதென்பதும் பிரசாரப்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆனால் மாஸ்டார்ஸ் அன்ட் ஜோன்சன் Masters & Johnson என்ற உலக பிரசித்தி பெற்ற பாலியல் ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளின்படி இந்த கருத்தை தவறு என்று நிரூபித்துள்ளார்கள். எனவே மேற் கூறப்பட்ட புற்றுநோய் அபாயம், அதிகளவு இன்பம் என்ற அடிப்படையில் சுன்னத் அவசியம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் - ஒரு சிலருக்கு ஆண் உறுப்பின் முன் தோல் தலைப்பகுதியோடு ஒட்டிக்கொண்டிருந்தால் அல்லது முன் தோல் ஆண்குறி மேல் வழுக்கி நீண்டு செல்லும் தன்மை இல்லாதிருந்தால் உடலுறவு செய்வது கஷ்டமாயி ருக்கும். அது தவிர முன்தோலை பின் இழுத்து சுத்தம் செய்வது கஷ்ட மாக இருக்கும். இதனால் தொற்று ஏற்பட்டு Phimosis என்கின்ற முன்தோல் இறுக்கநிலை ஏற்படலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் மருத்துவர்கள் Cir cum cission செய்வதா அறிவுறுத்துகின் றார்கள்.

முடிவாக சுன்னத் செய்வதால் பிரச்சினைகள் ஏற்படாது. அவசியமிருந்தால் ஒழிய சுன்னத் செய்வது தேவையற்றது என்பதே அநேக மருத்துவர்களின் பொது வான கருத்து.




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் ஏழாவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாறு பரீட்சையையொட்டி, எப்பத்திரிகையிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல் முறையாக ஆரம்பித்து வெற்றிநடைபோடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றைய தினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்குமுன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள்களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடிதஉறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் (படிமுறைப் பரீட்சை-07 (Steping Exam - 07) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | |
|---|---|
| ஆசிரியர் | Editor |
| கல்விச்சுடர், | Education Sudar, |
| "சுடர் ஒளி", | Sudar Oli, |
| இல.85, | No.85, |
| ஜயந்தமல்லிமாராச்சிமாவத்த, | Jayantha mallimarachi mawatha, |
| கொழும்பு-14. | Colombo - 14. |

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

**மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!**

**எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.**

சம்மாந்துறை மாணவர்களுக்கு,

எமது கல்விச்சுடரின் இப் படிமுறைப் பரீட்சை ஜெயலியா வீதியில் அமைந்துள்ள ஸ்ரார் கல்வி நிலையத்தில் அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் அவர்களின் தலைமையில் வாராந்தம் இடம்பெற்றுவருகின்றது. விரும்புவோர் அக் கல்வி நிலையத்திற்குச் சென்று பரீட்சை எழுதலாம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- கல்விச்சுடர் ஆசிரியர்-

**தொடர்புகட்கு:- 0602676675**

## பாராட்டுப்பெறும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை - 05 இல் கூடிய புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



| M.ஆஷிக் | M.நுஹ்மான் | J.டினேஸ் பிரசாந்தன் | R.தர்மேஸ் |
|---|---|---|---|
| 184 (கம்பளை) | 178 (இப்பாகமுவ) | 159(கொட்டகல) | 143(மன்னார்) |

| | | |
|---|---|---|
| கே.பாக்கிஹா 187 (நிந்தாவூர்-13) | ரி.பாத்திமா றிஸ்வானா 184 (நிந்தவூர்-02) | எச்.பாத்திமா நுஹா 181 (நிந்தவூர்-01) |
| .பாத்திமா இம்னா 181 (நிந்தவூர்-13) | எச்.பாத்திமா சமீஹா 180 (நிந்தவூர்-14) | எஸ்.றிப்தாஸ் 178 (நிந்தவூர் -19) |
| கே.சஹ்ஹத் சஸ்னி 178 (நிந்தவூர்) | ஆர்.டன்ஸ்டன் 175 (கல்முனை-01) | எப்.நமீமா 171(நிந்தவூர்-02) |
| கே.ஷிபா மரியம் 168 (நிந்தவூர்) | எச்.ஹஸ்னா ஹமீட் 168 (நிந்தவூர் ) | எஸ்.தனுஷா 165 (நுவரஎலிய ) |
| எஸ்.றிஸ்பா 165 (நிந்தவூர் -01) | என்.பாத்திமா நுஸ்லா 165 (நிந்தவூர் ) | கே.யதுர்சன் 165 (பெல்மதுளை) |

**சுடர் சிந்தனை:- " பரீட்சைகள் உன்னைப் பலப்படுத்தும் "**

# படிமுறைப் பரீட்சை-07

நேரம்: 1 மணி

மாணவர் பெயர் : ..............................................

முகவரி : ..............................................

கற்கும் பாடசாலை/ கல்வி நிலையம் : ..............................................

..............................................

தொலைபேசி இலக்கம் : ..............................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் பாடலை வாசித்து 1-4 வரையான வினாக்களுக்கு விடை தருக.

அதோ பார் அதோ பார் அழகழகான பலூன்கள்
மூச்சடக்கி ஊதிவைத்த மொட்டைத்தலை பலூன்கள்
உச்சிவரை ஊதஊத உடல்வெடிக்கும் பலூன்கள்
அதோ பார் காற்றினிலே ஆடுகின்ற பலூன்கள்.

1) தரப்பட்டுள்ள பாடலடியில் அதிகதடவை இடம்பெற்றுள்ள சொல் யாது? ..............................................

2) இப்பாடலில் வந்துள்ள அடுக்குமொழிச்சொல் ஒன்றைக் குறிப்பிடுக.
..............................................

3) 'மூச்சடக்கி ' என்பதன் பொருள் யாது?
..............................................

4) பின்வரும் சொல்லைப் பிரித்து எழுதுக.
அழகழகான = ..............................................

02. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1) அடவி - ..............................................
2) ஈகை - ..............................................
3) ஔடதம் - ..............................................
4) கங்குல் - ..............................................

03. பின்வரும் சொற்களின் எதிர்கருத்துப் பதங்களைத் தருக.

1) ஆதி - ..............................................
2) கோடை - ..............................................
3) அண்மை - ..............................................
4) புகழ் - ..............................................


04. பின்வரும் உருக்களில் ஒன்று ஏதோ ஒரு வகையில் வேறுபட்டுள்ளது. அதனைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.

1)




(1) (2) (3) (4)

2)



(1) (2) (3) (4)

3)




(1) (2) (3) (4)

4)



(1) (2) (3) (4)

05. பின்வரும் படங்களை அவதானித்து அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.



.................... (1) .................... (2) .................... (3)




## விண்ணுக்குச் சென்ற 'சல்மொனெல்லா'

விண்வெளிப் பயணத்தின் போது அங்கு செல்லும் விண் வெளி வீரர்களுடன் செல்லும் நுண்ணுயிர்கள் மீண்டும் பூமிக்குத் திரும்புகையில் சக்தி கூடியவையாக மாறி வருவதுடன், இவை இலகுவில் இறக்காத தன்மைமையை கொண்டவையாகவும் காணப்படுகின்றன என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'சல்மொனெல்லா' (Salmonella)என்ற நுண்ணுயிர் மீது நடத்திய ஆய்வை அடுத்தே ஆய்வாளர்கள் இதனைக் கூறியுள்ளனர். உணவு கெடுவதற்கு முக்கிய காரணமான 'சல்மொனெல்லா' விண்வெளிக்குச் சென்று திரும்பும் போது பூமியில் வசிக்கும் உயிர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதாக மாறுகின்றது.

இந்த ஆய்வுக்காக 2006ஆம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்பட்ட 'STS 115' விண்கலத்தின் மூலமாக சென்ற நுண்ணுயிர்களை எலிகளுக்கு தாக்கம் செலுத்தவிட்டபோது விரைவில் நோயுற்ற எலிகள், உயிரிழந்தும் விட்டன.

மனிதர்கள் எங்கு சென்றாலும் அவர்களுடன் நுண்ணுயிர்களும் செல்கின்றன.

கடலுக்கு அடியிலாகட்டும், விண்வெளியிலாகட்டும் எங்கு சென்றாலும் நுண்ணுயிர்கள் அவர்களுடன் செல்லும் தன்மையுடையவை. இவ்வாறு மனிதனுடன் செல்லும் உயிர்கள் எவ்வாறு மாற்ற மடைகின்றன என்று அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தின் தொற்றுநோய் மற்றும் மருத்துவப் பிரிவு பேராசிரியர் செரில் நிகர்ஷன் தெரிவிக்கையில், ''பழக்கப்பட்ட மிதமான அதிகூடிய குளிரான காலநிலையில் வாழ்ந்து பழகிய நுண்ணுயிர்கள் விண்வெளிக்கு அல்லது கடலின் அடிக்குச் சென்ற பின்னர் வெகுவிரைவில் மாற்றமடைகின்றன.



'சல்மொனெல்லா' கிருமிகள் அடைக்கப்பட்ட கலனொன்று 'STS 115' விண்கலத்தினூடாக விண்ணுக்கு அனுப்பப்பட்டது. அதே போன்ற கலன் ஒன்று விண்வெளியில் காணக்கூடிய அதே வெப்பநிலையில் பூமியில் வைக்கப்பட்டது. பின்னர் 'STS 115'விண்கலம் பூமிக்குத் திரும்பிய பின்னர் ஒரே எண்ணிக்கையான எலிகளை இருகூடுகளுக்குள் அடைத்து இது கலன் களில் இருந்த கிருமிகளும் வெவ்வேறாக அக்கூடுகளுக்குள் திறந்துவிடப்பட்டன.

25 நாட்களின் பின்பு இருகூடுகளிலும் இருந்த எலிகளை பரிசோதித்தார்கள். விண்வெளிக்கு எடுத்துச்செல்லப்பட்ட கிருமிகள் அடைக்கப் பட்ட கலன் வைக்கப்பட்டிருந்த கூட்டிற்குள் இருந்த எலிகளில் 90சதவீத மானவை இறந் திருந்தன. விண்வெளிக்கு எடுத்துச்செல்லப்படாத கிருமிகள் அடைக்கப்பட்ட கலன் வைக்கப்பட்டிருந்த கூட்டுக்குள் இருந்த எலிகள் அத்தனையும் உயிரு டன் இருந்தன'' என்று அவர் கூறினார்.

விண்ணுக்கு சென்று வந்த 'சல்மொனெல்லா' நுண்ணுயிர்களில் 167 ஜீன் கள் மாற்றமடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## ஆயுளை வளர்க்கும் விட்டமின்D

ஒரு நாட்டுமக்களின் சராசரி ஆயுள் அதிகரிப்பது அந்நாட்டின் வளர்ச்சிக்கான குறியீடாக கருதப்படுகிறது.

எனவேதான் ஒவ்வொருநாட்டிலும் சராசரி ஆயுளை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சிகள் வெவ்வேறு கால கட்டங்களில் நடைபெறுகின்றன. சமீபத்தில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் மனிதரின் சராசரி ஆயுளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் விட்டமின்- D யில் உள்ளது எனக் கண்டறிந்துள்ளனர். நாள் ஒன்றுக்கு நமக்கு 0:12 மில்லி கிராம் விட்டமின்- D தேவைப்படுகின்றது.

முட்டையின் மஞ்சள் கரு, மீன் எண்ணெய் ஆகியவற்றில் விட்டமின்- D அதிகமாக உள்ளது. கல்சியம், பொஸ்பரஸ் போன்ற கனியுப்புக்களை முறையாகப் பயன்படுத்த விட்டமின் -D பயன்படுகிறது.

சர்ல்மன் போன்ற எண்ணெய் சத்து நிறைந்த மீன்களிலும், பாலிலும் விட்டமின் -D உள்ளது. இவற்றை அதிகளவில் சேர்த்துக் கொண்டால் சராசரி ஆயுள் கூடும் என ஐரோப்பிய விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.




## அஜந்தா குகை ஓவியங்கள்

உலகில் காணப்படும் புகழ்மிக்க புராதன ஓவியங்களில் அஜந்தா குகை ஓவியங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வரையப்பட்ட இந்த ஓவியங்கள், இந்திய ஓவியக்கலைகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.



பௌத்த கலா சாரத்தை ஒத்ததாகக் காணப்படும் இந்த ஓவியங்கள் நீண்ட தொடர்ச்சியான கற்குகைகளின் சுவர்களிலும் அவற்றின் கூரைகளிலும் தூண்களிலும் வரையப்பட்டுள்ளன. இவை பௌத்த மதத்தை தீவிரமாகப் பின்பற்றிய ஓவியக்கலைஞர்களினால் வரையப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் மஹாயான சங்கம் (பௌத்த துறவிகளின் சங்கங்களில் ஒன்று) மற்றும் குப்த ராஜ்யம் ஆகியவற்றின் பாதிப்புக்களின் காரணமாக அஜந்தா குகை ஓவியங்களில் பாரிய முன்னேற்றங்கள் காணப்படுகின்றன என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

இந்த ஓவியங்கள் பிறெஸ்ரோ எனப்படும் ஈரலிப்பான ஒருவகைக் கலவையைக் கொண்டும், டெம்பெரா எனப்படும் ஒருவகை காய்ந்த களி போன்ற கலை ஒன்றைப் பயன்படுத்தியும் உருவாக்கப்பட்டுள்ளன.

கறுப்பு, வெள்ளை, நீலம், கபில நிறம் மற்றும் சிவப்பு ஆகிய நிறங்களைப் பயன்படுத்தி வரையப் பட்டுள்ள இந்த ஓவியங்களில் பௌத்த சமயத்தில் கூறப் பட்டுள்ள புண்ணியகாரியங்கள், தியான முறைகள் என்பனவும் காணப்படுகின்றன.


இந்த ஓவியங்கள் நமது நாட்டிலுள்ள சிகிரியா ஓவியங்களை ஒத்ததாக காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.பாரத கலா சார, பாரம்பரியங்களின் பாதிப்பையும் இவற்றில் காணலாம். அஜந்தா குகை ஓவியங்கள் எமது முன்னோர் தந்த கலை பொக்கிஷமாகும்.

## மொளுஸ்கா

பூமியின் முதலாவது உயிரினம் கடலிலிருந்தே தோன்றியதாக நம்பப்படுகின்றது. இற்றைக்கு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் சமுத்திர நீரிலிருந்து அங்கியொன்று தோன்றியதாகவும், அதே அங்கி தரைக்கும் வந்து பரிணாம வளர்ச்சியடைந்ததையடுதது பலஉயிரினங்கள் உருவாகின என்று தெரிவிக்கப்படும் கருத்துக்கு ஆதாரம் இல்லாமலில்லை.பூமியில் வாழும் மனித இனத்தை விடவும், பரிணாம வளர்ச்சி கூடிய பல்லாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட உயிரினம் கடலில் அதிகளவில் உயிர் வாழ்கின்றமை மறுக்க முடியாத உண்மையாகும். அதுமட்டுமின்றி கடல்வாழ் உயிரினங்கள் நாம் வாழும் புவிக்குச் செய்யும் நன்மைகளும் எல்லையற்றவை. கடலில் வாழும் உயிரினங்களில் விசேட விதமான தாவரங்களும் விலங்குகளும் அடங்கும்.

தாவர இனங்களில் விசேட கற்பாசி வகைகள் காணப்படுகின்றன.அதே போன்று களப்புகள், முகத்துவாரங்களை அண்மித்த பகுதிகளில் பூக்கக் கூடிய விசேட புல்வகைகளும், கடல்களில் மட்டுமே வாழக்கூடிய முள்ளந்தண்டற்ற நத்தை, மீன்கள் இன்னும் பலவகையான உயிரினங்களும் காணப்படுகின்றன.கடலில் காணப்படும் முதுகெலும்பற்ற உயிரினமே 'மொளுஸ்கா' இனம் என்று அழைக்கப்படுகிறது. கண்ணைக் கவரும் பல வர்ணங்களிலும் அமைப்புக்களிலும் காணப்படுகின்றமையினால், கடல் வாழ் உயிரினங்கள் மத்தியில் இவை மிகவும் பிரபல்யமானவை. இவற்றுள் கடல் நத்தைகள், சிப்பிகள், சங்குகள், ஒக்டோபஸ் இனம், கணவாய் என்பன அடங்குகின்றன. இவற்றின் மேற்புறத்தில் ஓடுகள் காணப்படுகின்றபோதிலும் எலும்புகள் காணப்படுவதில்லை. எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்கு கறுப்பு நிற திரவமொன்றை பீச்சியடித்து தப்பித்துச் செல்லும் வல்லமை கணவாய்களுக்கும் ஒக்டோபஸ்களுக்கும் உண்டு.

இராட்சத கணவாய்களும் கடலில் காணப்படுகின்றன. இவை கடலில் வாழும் முதுகெலும்பற்ற உயிரினங்களிலேயே மிகப் பெரியவையாகும் இவை சராசரியாக 16 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியவை.




✱ மூளையில் சேமிக்கப்பட்ட நினைவுகள், தூங்கும் போது வெளிப்படுவதுதான் கனவுகள்.

✱ ஒவ்வொரு கோள்களும் குறிப்பிட்ட இடைவெளிவிட்டு தனித்தனி வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவற்றில் உள்வட்டத்திலிருப்பது புதன். அடுத்துவெள்ளி. ஒரே இடத்தில் இரண்டு கோள்கள் இருக்க முடியாது.

✱ நாலரை பில்லியன் ஆண்டுகளுக்கு முன், சூரியனைச் சுற்றிலும் தட்டுபோல் விரிந்திருந்த தூசிகள் திரண்டு பல கோள்கள் உருவாயின. அதில் ஒன்று பூமி.

✱ திரவ எரிபொருளை எடுத்து செல்லும் எண்ணெய் டாங்கிகளின் பின்னால் சங்கிலி ஒன்று நிலத்தை உரசியபடி தொங்க விடப் பட்டிருக்கும். இது அந்த வாகனத்தில் ஏற்படும் மின்கசிவை புவியீர்ப்பு ( ஏர்த்) செய்ய உதவுகிறது.





பத்மப்பிரியா

# மாதவன

தான் முதன் முதலாக த
மாக்க வேண்டும் என்ற
மொழியில் வெளிய
தின் ரீமேக் தான்
துள்ளார். படத்
உலகளாவிய
'லூக்கோஸ் பி
படத்தை உ
அதற்கான ஏ
ஒருவன்' குறி
நடித்த படங்
ஸ்ரீதர் வாசுதே
சேர்ந்த ஒருவ
கையாண்டுள்
நானே எழுதியு
பணியை மேற்கெ
நடித்திருக்கிறார்''-

# சத்தியராஜுக்கு விருது கிடைக்கும்

தான் எழுதிய 'ஒன்பது ரூபாய் நோட்டு' நாவலை அப்படியே திரைப்படமாக்கியிருக்கிறார் தங்கர்ப்பச்சான். 1972 தொடக்கம் 2004 வரை மூன்று காலகட்டத்தில் வாழ்ந்த மூன்று தலைமுறைகளைப் பற்றி இக்கதை அமைந்துள்ளது. அந்தக்கால கட்டங்களை கண்முன் நிறுத்தும் வகையில் இப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர அந்தக்கால கட்டங்களை பிரதிபலிக்குக்கும் வகையில் காட்சிகளுக்கான பின்புலமும், பின்னணி இசையும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, கதை நிகழும் மூன்று பருவ நிலைகளுக்குப் பொருத்தமான அதே பருவங்களில் மூன்று கட்டங்களாகப் படப்பிடிப்பு நடத்தப்பட்டிருக்கிறது. எழுத்து வடிவத்தை திரைப்பட வடிவத்தில் வார்த்தொடுப்பது என்பது ஒரு சவாலான விடயம். அந்தச் சவாலை மிக நேர்த்தியாக எதிர்கொண்டிருக்கிறார் இயக்குனர் தங்கர்ப்பச்சான். அவரது முயற்சிக்கு கலைஞர்களும், தொழில்நுட்ப வல்லுனர்களும் மிகச்சிறப்பான ஒத்துழைப்பை அளித்திருக்கின்றனர்.

இது பற்றி தங்கர்ப்பச்சான் கூறும்போது●:- ''கதை நாயகனான மாதவப்படையாட்சி வேடத்தை ஏற்றிருக்கும் சத்தியராஜுக்கு அவரது திரைவாழ்க்கையில் இது முக்கியமான படமாக இருக்கும். சத்தியராஜ் முதன்முறையாக கோவணம் கட்டி நடித்திருப்பதோடு, ஐந்துவிதமான தோற்றங்களில் நடித்திருக்கிறார். 'இப்படத்திற்காக சத்தியராஜுக்கு தேசியவிருது கிடைப்பது உறுதி.'' மூன்று முறை தேசிய விருது பெற்ற அர்ச்சனா, இப்படத்தில் மாதவப்படையாச்சியின் மனைவி வேலாயியாக வியத்தகு நடிப்பை வெளியிப்படுத்தியிருக்கிறார். முப்பது வயது தொடங்கி, அறுபத்தைந்து வயது வரையிலான தோற்றத்தில் முகம் காட்டும் அர்ச்சனாவுக்கும் தேசிய விருது கிடைத்தாலும் ஆச்சரியமில்லை. நாசாருக்கும் தேசியவிருது கிடைப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே இருக்கிறது. ஹாஜாபாய் என்ற கண்ணியமிக்க வேடத்தில் அவர் நடிக்கவில்லை. அவ் வேடத்தில் வாழ்ந்திருக்கிறார் இப்படியாக இப்படம் இதில் நடித்திருக்கும் பலருக்கு விருதைத் தேடிக்கொடுக்கவிருக்கிறது'' - என்றார்.



சத்தியராஜ் – அர்ச்சனா

# கிளாமர் தாரா

'ஐயா'வில் பக்கத்துத் தெரு பெண் மாதிரி நடித்
நயன்தாரா, அந்தப்படத்தின் பாடல் காட்சிகளில்
கிளாமராக நடிக்கமாட்டேன் என்றார். அதைத் தொ
வந்த படங்களில் அப்படியே நடித்துவந்தார். சிம்
நடித்த 'வல்லவன்' படத்தில் குடும்பப் பெண்
நயன்தாரா கிளாமருக்கு தாவிய நயன், அடுத்து ந
தெலுங்குப் படத்தில் படுகிளாமருக்குப் போய்வி
பத்தில் வெளியாகியிருக்கும் 'துளசி' என்ற தெலு
தில் அதிகமாக கிளாமர் காட்டியுள்ளாராம் நயன்.



நயந்தாரா

# ...வனின் முதல் தயாரிப்பு



ன் முதலாக தயாரித்துள்ள 'எவனோ ஒருவன்' படத்தை மிகப் பிரமாண்ட வெற்றிப்பட
வண்டும் என்ற ஆவலில், எதிர்பார்ப்பில் உள்ளார் மாதவன் செயற்படுகிறார். மராத்தி
யில் வெளியாகி பெரும் வெற்றியைப் பெற்ற 'டோம்பிவிலி பாஸ்ட்' என்ற படத்
ரீமேக் தான் 'எவனோ ஒருவன்'. இப்படத்தை மாதவனே சொந்தமாக தயாரித்
ள்ளார். படத்தின் முதல் காட்சியை பார்த்த மாதவன் அசந்து போய், படத்தின்
உலகளாவிய விநியோக உரிமையையும் வாங்கிவிட்டார். இதற்காக புதிதாக
'லூக்கோஸ் பிலிம்ஸ்' என்ற நிறுவனத்தையும் உருவாக்கியுள்ளார். தற்போது
படத்தை உலகம் முழுவதும் சிறப்பான முறையில் திரையிடத் தீர்மானித்து
அதற்கான ஏற்பாடுகளில் முழு ஆர்வத்துடன் இறங்கியுள்ளார். 'எவனோ
ஒருவன்' குறித்து மாதவன் கூறுகையில்:- ''என்னைப் பொறுத்தவரை நான்
நடித்த படங்களிலே இப்படம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இப்படத்தில்
ஸ்ரீதர் வாசுதேவன் என்ற வேடத்தில் நடித்துள்ளேன். சாதாரண குடும்பத்தை
சேர்ந்த ஒருவனாக இப்படத்தில் வருகிறேன். சஞ்சய் ஜாதவ் கமெராவைக்
கையாண்டுள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். வசனத்தை
னே எழுதியுள்ளேன். இயக்குநர் சீமான், இயக்க மேற்பார்வைப்
ளியை மேற்கொண்டுள்ளார். எனக்கு ஜோடியாக சங்கீதா
திருக்கிறார்''- என்றார்.

# வடிவேலு ஜோடியாகிறார் கவர்ச்சிக் குண்டு நமீதா

வைகைப்புயல் வடிவேலு மூன்றாவது முறையாக ஹீரோவாக நடிக்கப்போகிறார். அவர் நடிக்கும் அடுத்த படத்துக்கு 'வெடி குண்டு முருகேசன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' மூலம் நாயகனாக அவதாரம் எடுத்த வடிவேலு, அந்தப் படம் அபாரமாக வெற்றிபெற்றதால் அடுத்ததாக 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' என்ற புதிய படத்திலும் நாயகனாக நடித்துக்கொண்டிருக்கிறார். இந்த இரு படங்களும் நகைச்சுவையை பின்புலமாகக் கொண்டபடங்களாகும். ஆனால், 'வெடிகுண்டு முருகேசன்' சமூகக் கருத்துடன் கூடிய படமாகும். அதேசமயம் வடிவேலுவின் கொமடியும் படம் முழுவதும் இருக்குமாம். 'கருப்பசாமி குத்தகைக்காரர்' படத்தை இயக்கியவர்தான் இப்படத்தையும் இயக்கவுள்ளார். பசுபதி வித்தியாசமான வேடத்தில் இதில் நடிக்கிறார். இதைவிட முக்கியமான் விடயம், வடிவேலுவுக்கு ஜோடியாக கவர்ச்சிக்குண்டு நமீதா நடிக்கவிருக்கிறார். இதற்கு நமீதா முற்றாக சம்மதிப்பார் என நம்புகின்றனர். என்ன விலை கொடுத்தாவது நமீதாவை நடிக்கவைத்து விடுங்கள் என்று வடிவேலுவும் இயக்குநரிடம் வலியுறுத்தியுள்ளாராம். இது தவிர விஜயகாந்த்தின் 'அரசாங்கம்' படத்தில் நாயகியாக நடிக்கும் நவ்னீத் கௌரையும் நடிக்கவைக்க பேச்சு நடந்து வருகிறதாம்.விஜயகாந்த்தின் நாயகியையும் நடிக்கவைப்பதற்கு வடிவேலுதான் புத்தி கூறியுள்ளாராம். தற்போது 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' படத்தில் மும்முரமாக நடித்துக்கொண்டிருக்கும் வடிவேலு அதை அடுத்து வெடிகுண்டு முருகேசன் என்ற படத்தில் குதிக்கவுள்ளார்.

ன் மாதிரி நடித்திருந்த
ல் காட்சிகளில்கூட
ார். அதைத் தொடர்ந்து
ந்துவந்தார். சிம்புவுடன்
ம்பப் பெண்ணாக இருந்த
பன், அடுத்து நடித்த
ந்க்குப் போய்விட்டார். சமீ
சி' என்ற தெலுங்குப் படத்
ளாராம் நயன்.



நயன்தாரா



முமைத்கான்

# அம்மாவின் செல்லப்பிள்ளையா? மனைவியின் அன்புக் கணவனா?



திருமணம் என்பது ஓர் இனிமையான பந்தம். இதில் பலவித உரிமைகள், கடமைகள், விருப்பு - வெறுப்புகள் இணைந்துள்ளன. அனைவரும் ஒற்றுமையாக இருந்து, திருமண உறவில் இனிமை கொண்டுவர வேண்டும். குடும்ப மகிழ்ச்சிக்காக, மருமகள் தன் ஆசைகளை தியாகம் செய்யவேண்டிவரும். வீட்டிலுள்ள ஒவ்வொரு உறுப்பினர்களின் மனநிலைஅறிந்து, அதற்கேற்றால்போல நடந்துகொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இப்படி எல்லாம் இணக்கமாக, பார்த்துப் பார்த்து செய்தாலும், குறை சொல்லுகிற ஆட்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

'மாமியார் உடைத்தால் மண் குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்று நம்மிடம் ஒரு சொல் வழக்கு உண்டு. மருமகளை மட்டந் தட்டியே பேசுவது, எதற்கெடுத்தாலும் குறைகண்டு பிடிப்பது இதெல்லாம் மாமியார்களுக் குக் கைவந்த கலை. இந்த விஷயத்தில் தனக்கு ஆதரவாக, தனது மகனையும் வளைத்துக்கொள் கிறாள் மாமியார்.

ராதிகாவின் நிலைமையும் கிட்டத்தட்ட இதேதான். ராதிகாவின் மாமியார் ஒருநாளைக்கு ஒருமுறையாவது, பேச்சுக்கு நடுவே, "உனக்கு உன் மேலயும், சுதாகர் மேலயும் அக்கறையே இல்லை" என்பாள்.

"நீ அவனுக்கு ஒழுங்கா சாப்பாடு போடமாட்டேங்கிற...கல்யாணத்துக்கு முன் அவன் எவ்வளவு கிளீனா டிரெஸ் பண்ணுவான் தெரியுமா? அவன் அறையைப் பார்த்தால் கண்ணில் ஒத்திக்கலாம். இப்போ, அப்படியா இருக்கு? அவனுக்குப் பிடிக்காது என்று தெரிஞ்சும் இவ்வளவு காரமா சமைச்சிருக்கியே?" என்றெல்லாம் குற்றம் கண்டுபிடிப்பாள்.

இதையெல்லாம் தினமும் கேட்டுக் கேட்டு புளித்துப்போய்விட்டது ராதிகாவுக்கு. காலையில் எழுந்தது முதல் இரவுவரை ஏதாவது வேலை செய்தபடி இருப்பாள் ராதிகா. அப்படி இருந்தும் அவளது மாமியாரின் குறைசொல்லும் போக்கு மாறவே இல்லை. சுதாகர் என் புருஷன் தானே அவரை நான் கவனிக்காம வேற யார் கவனிக்கப்போறாங்க' என்று மனதுக்குள் மருகுவாள் ராதிகா. உண்மையில், ராதிகா மீது சுதாகருக்கு எந்த மனக்குறையும் இருக்க வில்லை. ஆனால், மாமி யாரோ, வீண்

**பெண்**

சண்டை போடு வதற்காகவே மகன் பெயரையும் பயன்படுத்திக் கொள்வாள். மாமியார் பேச்சைக்கேட்டு ராதிகா நடந்தால் சுதாகருக்கு கோபம்வரும் "எனக்குத் தேவையானதை நான் பாத்துக்கொள்கிறேன். உன் மாமியாருக்கு என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்..." என்று பூமிக்கும் வானத்துக் குமாய் குதிப் பான். இப்படி, மகன் மீதான அம்மாவின் அர்த்தமற்ற அன்பு காரண மாக தாம்பத்திய உறவில் கசப்புணர்வே மேலோங்கியது.

### அன்பின் பின்னணி

மகனுக்குத் திருமணம் செய்து வைத்த பிறகும், அவன் மீது அம்மாக் களுக்கு அன்பு பொங்கி வழிவது ஏன்? உண்மை யில் திருமணத் துக்குப் பிறகு, மகனது தேவை களை கவனித் துக் கொள்ளும் பொறுப்பு மரு மகளிடம் போய் விடுகிறது. இந்த நிலையில் அவளை மட்டம் தட்டிப்பேசி, தன்னுடைய ஆளுமையை நிரூபிக்க விரும்புவது மாமியார்களுக்கு எளிதாகிவிடுகிறது.

திருமணத்துக்குப் பிறகு அம்மாக்களி கடமை வெகுவாகக் குறைந்துவிடுகிறது. அதிக ஓய்வு நேரம் கிடைப்பதால் மகன்மீது அளவுக்கு அதிகமாக அன்புகாட்ட முடிகிறது. எத்தனையோ சந்தர்ப்பங்களில் அம்மாக்களின் இந்த மிதமிஞ்சிய பாசம், கணவன் - மனைவி உறவைப் பெரிதும்

(27ஆம் பக்கம் பார்க்க)

# பக்கிங் ஒரு கலை



ஒவ்வொரு குடும்பத்திலும் உறுப்பினர்கள் வெளியே போவதும் வருவதும் சகஜமான விடயம். ஆனால், ஒரு பயணத்துக்காக ஒட்டுமொத்த குடும்பமும் செல்வதாக இருந்தால், பக்கிங் (Packing) செய்வது பெரிய தலைவலியாகிவிடும். எதை எடுத்துப் போவது? எது தேவை இல்லாதது? என்பதைத் தீர்மானிப்பதில் குழப்பம் ஏற்படும். பொருட்களை எடுத்துவைத்த பிறகு மீண்டும் வெளியில் எடுக்கவேண்டி நேரிடும். பக்கிங் செய்யும்போது கூடுதல் கவனத்தோடு இருந்தால் பயணத்தின் இனிமையை இருமடங்காக்கிவிடலாம்.

✱ பயணத்தைத் தொடங்கும் முன்பு, துணிகள் மற்றும் பொருட்களைப் பட்டிய லிடுங்கள்.

✱ துணிகளைப் பயணத்துக்கு 3 நாட் கள் முன்பே துவைத்து இஸ்திரி போட்டு வைக்கவும்.

✱ எத்தனை இரவு - பகல் தங்கப்போகிறோம் என்பதை முடிவுசெய்யுங்கள்.

✱ கமெரா, பணம், கிரெடிட் - டெபிட் கார்டு, பெல்ட், செருப்பு, ஷூ - என்று எல்லாவற்றையும் பட்டியலிடுங்கள்.

✱ பட்டியலில் இடம்பெற்றுள்ளவற்றை கட்டில் மீது எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். எதுவும் விட்டுப்போக வில்லை என் பதை உறுதி செய்ய இது உதவும்.

### முக்கியமான விஷயங்கள்

✱ வெப்பமான பிரதேசங்களுக்கு வெளிர் நிற உடைகளும், குளிர் பிரதேசங்களுக்கு அடர்த்தியான நிற உடைகளும் கொண்டு செல்லுங்கள்.

✱ விரைவில் உலரக்கூடிய ஆடைகளைக் கொண்டு செல்லுங்கள்.

✱ இர்விலும் பகலிலும் வசதியாக அணிந்துகொள்ளும் விதமான காலணி களைக் கொண்டு செல்வது நல்லது.

✱ துணிகளில் கனமான மற்றும் விலை உயர்ந்த உடைகளை சூட்கேஸின் அடியில் வைக்கவும். அடிக்கடி பயன்படுத்தும் உடை களை மேலே வைக்கவும்.

✱ இரவுஉடைகளையும் சூட்கேஸின் மேலே வைக்கவும்.

✱ உடையக்கூடிய பொருட்களை துணியால் சுற்றி அதிக அழுத்தம் ஏற்படாத வகையில் துணிகளுக்கு நடுவில் வைக்கவும்.

### செல்வதற்கு முன் கவனியுங்கள்

✱ எந்த இடத்துக்குப் போகிறீர்களோ, அந்த இடம் பற்றிய முழுத்தகவல்களை வரைபடம் மற் றும் இன்ரநெற் மூலம் திரட்டிக்கொள்ளுங்கள்.

✱ ஹோட்டல்களை முன்பதிவு செய்துகொள் ளுங்கள்.

✱ சுற்றுலா செல்லுமிடத்தின் கலாசாரம் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்.

✱ அந்த இடத்தின் சட்டம், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை குறித்து முழுத்தகவல் களையும் திரட்டிக்கொள்ளுங்கள்.

✱ கூடுமானவரை பொருட்களின் எடை குறைவாக இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங் கள். சூட்கேஸில் சிறிதளவு வெற்றிடம் இருக்க வேண்டும். நீங்கள் ஷாப்பிங் செய்யும் பொருட் களை வைக்க அது உதவும்.

✱ ஒரு காகித உறையில் டிக்கெட், ஹோட் டல் புக்கிங் தொடர்பான ஆவணங்கள், பணம், கிரெடிட் கார்ட் மற்றும் சிறிய நோட்டுப்புத்த கம் ஆகியவற்றை வைத்துக் கொள்ளுங்கள்.

✱ காய்ச்சல், சளி, தலைவலி போன்ற வியாதி களுக்கு மருந்துகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

✱ கமெரா, பற்றரி, செல்போன் சார்ஜர் ஆகியவற்றை மறக்கவேண்டாம்.

✱ குறைந்தபட்சம் ஒரு செல்போனாவது (ரோமிங் வசதி) கொண்டு செல்லுங்கள்.

✱ பயணத்துக்கான ஏற்பாடுகளை திட்ட மிட்டுச் செய்யுங்கள். சில சமயங்களில் 'ஹொலிடே பேக்கேஜ்' செலவு குறைவானதாக இருக் கும்.

### இறுதி பக்கிங்

✱ வெற்றிடங்களை நிரப்ப பனியன் துணி களைப் பயன்படுத்தலாம்.

✱ ஷாம்பு பவுச்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

✱ பற்பசை, நெயில் பொலிஷ் ஆகியவற்றை நசுங்காத அல்லது உடையாத இடத்தில் வைக்கவும்

(27ஆம் பக்கம் பார்க்க)

# சமைப்போம் சுவைப்போம்

## பனீர் பைனாப்பிள் ஸ்டிக்ஸ்



**தேவையான பொருட்கள்**

தோல் சீவிய அன்னாசி - 2துண்டு
பனீர் - 100 கிராம்
திராட்சை - 12
டூத் பிக் - தேவையான அளவு

**செய்முறை:**

அன்னாசித் துண்டுகளை சிறிய அளவு சதுரங்களாக வெட்டவும். அதே அளவில் பனீரையும் துண்டுகளாக்கவும். இப்போது ஒரு டூத் பிக் எடுத்துக்கொண்டு அதில் திராட்சை பழத்தை செருகவும். பிறகு ஒரு அன்னாசித்துண்டு, அப்புறம் பனீர் துண்டு செருகவும். இதேபோல் மற்ற ஸ்டிக்குகளையும் தயார்செய்யவும்.

06. பின்வருவனவற்றில் அறிவித்தல்களை A எனவும், அறிவுறுத்தல்களை B எனவும் அடைப்புக்குள் எழுதுக.

1) எல்லோரும் அமைதியாக எழுந்து நில்லுங்கள். ( )
2) நாளை மறுதினம் கண்காட்சி நடைபெறும். ( )
3) எதிர்வரும் புதன்கிழமை பரீட்சை நடைபெறும். ( )
4) கண்டகண்ட இடங்களில் குப்பைகளைப் போடாதீர்கள். ( )

07. பின்வரும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.


1) இலங்கையின் தேசிய மலர்
 1. றோசா. 2. நீலோற்பலம். 3. கார்த்திகைப்பூ.
2) வித்து முளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி
 1. சூரியஒளி. 2. நீர். 3. வளி.
3) அணில் கீச்சிடும் என்பது போல வண்டு,
 1. பாடும். 2. ரீங்காரமிடும். 3. கத்தும்.
4) தென்னைகளின் கூட்டம் தோப்பு என்பது போல பூக்களின் கூட்டம்
 1. குவியல். 2. கற்றை. 3. மஞ்சரி.
5) மனிதனின் உட்சுவாச வளி
 1. நைதரசன். 2. ஒட்சிசன். 3. நியோன்.
6) இலங்கையில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை
 1. 20 2. 25 3. 9
7) பின்வருவனவற்றில் ஊர்வன அல்லாதது
 1. தவளை. 2. பாம்பு. 3. அட்டை.


08. பின்வருவனவற்றிற்குச் மிகச்சரியான விடை தருக.

1) தொளாயிரத்தைந்து என்பதை இலக்கங்களில் எழுதுக. .............
2) இறங்குவரிசைப்படுத்துக. 0.4, 0.6, 1.2, 0.9
 ..................................................
3) 5691 ஐ விரித்து எழுதுக. ...........+...........+...........+...........
4) இடைவெளி நிரப்புக. ............, 9099, ............
5) 5088 என்பதில் நூறாம் இடத்தில் உள்ள இலக்கம் எது? ..........

09. பின்வருவனவற்றிற்கு மிகச்சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.

1) நீளங்களின் அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.









 1. A, B, C 2. C, B, A 3. B, A, C

2) பின்வருவனவற்றில் வளைகோட்டினால் ஆக்கப்படாதது

1.  2.  3. 


3)  தரப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கை
 1. 8 2. 15 3. 11


4) அருகில் தரப்பட்டுள்ள போத்தலின் கொள்ளளவை மில்லிலீற்றரில் தருவது
 1. 1500ml 2. 15ml 3. 150ml





5) வயல் ஒன்றில் 17 மாடுகள் புல் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை
 1. 34 2. 17 3. 68
6) பின்வரும் நேர வித்தியாசங்களில் சமனற்றது
 1. 08.16 - 10.16 2. 13.15 - 15.15
 3. 12.45 - 17.15



10. எண்கோலங்களை நன்கு அவதானித்து வெற்றிடங்களைப் பூர்த்திசெய்க.

1)



2)



11. வெட்டி அகற்றப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

1)  
(1) (2) (3)

2)  
(1) (2) (3)

12. பின்வரும் உருக்களை அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தருக.

1) 
த : ....................................
ஆ: ....................................

2) 
த : ....................................
ஆ: ....................................

3) 
த : ....................................
ஆ: ....................................

4) 
த : ....................................
ஆ: ....................................

13. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) கண்காட்சி - ....................................
2) செய்தி - ....................................

14. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Bottle - ....................................
2) News Paper - ....................................

15. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில்எழுதுக.

1) ஆகம - ....................................
2) ஒரலோசுவ - ....................................

16. தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகள் அற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1) ..........................................................................
2) ..........................................................................
3) ..........................................................................
4) ..........................................................................
5) ..........................................................................

முற்றும்

தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

பாடிமுறைப் பரீட்சை 07 - 2007

ஆக்கம்:- திரு.யு.எல்.எம்.சாஜித்
(ஆசிரியர், கமு/அல் மன்ஸூர் பெண்கள் உயர்தரப் பாடசாலை)

தொடர் - 4

# மியாமி கரைதனில் சிதறிய சடலங்கள்



மியாமி ரெஸ்டோரண்ட்.

பத்திரிகையாளர் மாநாடு நடைபெறுகின்றது. பொலிஸ் கமிஷனரும், பிரதேச பொலிஸ் அதிகாரி மெக்டோனாலும் அமர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் முன்பாக பத்திரிகையாளர்கள். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் நிறைந்திருக்கிறார்கள்.

சேரிப்புற படுகொலைகள், சேரிமக்கள் துன்புறுத்தப்பட்டமை, கூட்டமாக இழுத்துக்கொண்டு வரப்பட்டு காவல்நிலையத்தில் கடூரமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டமை என்பவற்றுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. 'விசாரணைக் கமிஷன் நிறுவி உண்மைக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கு' என நகர் முழுவதும் சுவரொட்டிகள் இரத்த வர்ணத்தில் காட்சியளித்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆவேஷமுடன் சேரிப்புறத்தை பார்வையிட செல்லமுயன்றனர். அப்பிரதேசத்துக்கு செல்லமுடியாதவாறு பொலிஸின் அதிரடிப் பிரிவு துப்பாக்கிகள் சகிதம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது. அது பயங்கரவாதிகளின் பிரதேசம் என்று எவரும் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அன்றிரவு -

திடீரென பல குடிசைகள் தீப்பிடித்து எரிந்து கருகிச் சாம்பலாகின.

'யார் தீ வைத்தார்கள்?'

மனிதவுரிமை அமைப்புக்கள் ஒன்றுகூடி வீதியில் ஆர்ப்பாட்டம் செய்தன. 'பொலிஸே உன் அராஜகத்தை நிறுத்து' என்று கோஷமிட்டார்கள்.

'பயங்கரவாதிகள்' தான் இவற்றுக்கு காரணகர்த்தாக்கள் என்று மெக்டொனால் அறிக்கைவிட்டான்.

'சேரி மக்கள் ஒன்பது பேரை வெட்டிக்கொன்றது யார்?'

'பயங்கரவாதிகள்'

'அரசியல்வாதி மெண்டோசாவையும் அவன் மகள், மனைவியையும் வெட்டிக்கொன்றது யார்?'

'பயங்கரவாதிகள்'

அனைத்து தேவைகளுக்கும் ரெடிமேற் ஆடை என்பது போல இக்கேள்விகள் அனைத்துக்கும் பயங்கரவாதிகள் என்ற பதிலையே மெக்டோனால் கிளிப்பிள்ளையாகத் திரும்பத் திரும்பச் சொன்னான்.

இதனால், பொதுமக்களும் மனிதவுரிமை அமைப்புகளும், எதிர்க்கட்சியினரும், பத்திரிகையாளர்களும் ஆத்திரமடைந்தனர். சம்பவ இடங்களை பார்வையிடவேண்டும் என்று கோரிக்கைவிடுத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதன் காரணமாகவே பத்திரிகையாளர் மாநாடு மியாமியில் ஒழுங்குசெய்யப்பட்டது.

மாநாடு முடிந்ததும் பத்திரிகையாளர்களைப் பொலிஸார் படை சூழ ஓடைக் கரைக்கும் சேரிப்புறத்திற்கும் அழைத்துச் செல்வதற்கு இணக்கம் காணப்பட்டது. அழைத்துச்செல்ல மெக்டோனால் உறுதிமொழி அளித்திருந்தான்.

பத்திரிகையாளர் மத்தியில் ஜோன்சன் மிகவும் இளைஞனாகத் தோன்றினான். அவனும் ரீட்டாவும் காதலர்கள். இருவரும் துடிதுடிப்பானவர்கள்.

''ரீட்டா! எனக்கென்னவோ இந்த பொலிஸ் அதிகாரியின் மீது சந்தேகமாக இருக்கிறது. இவன் படுமோசமான ஓர் அதிகாரியாக எனக்குத் தோன்றுகிறான். பார் எதற்கெடுத்தாலும் பயங்கரவாதிகள் பயங்கரவாதிகள் என்றவாறு உடைந்த ரெக்கோர்ட் போன்று திரும்பத் திரும்ப அதையே சொல்கிறான். இவன் பலே கில்லாடி என்பதில் துளிகூட சந்தேகமில்லை''

ரீட்டா ஆமோதித்தாள்.

''ஆமாம் இப்ப என்ன செய்யலாம். இவர்கள் சொல்வதைத்தானே அப்படியே காப்பியடித்து பத்திரிகையில் போடவேண்டும்''

''ஆமாம்! அதுதான் தொழில். அதற்குத்தானே சம்பளம் கொடுக்கிறார்கள்''.

''இல்லை ஜோன். நாம் அதற்கும் அதிகமாகச் செய்யவேண்டும்''.

''என்ன சொல்கிறாய்?''

''உண்மைகளை கண்டுபிடிக்கவேண்டும்''

''என்ன புண்ணியம். குற்றவாளிகள் எங்களை கொன்றுபோடுவார்கள். அதுமட்டுமா எங்களுடைய பத்திரிகைக்காரர்கள் அவற்றைப் பிரசுரிப்பார்களா? சும்மா இரு வம்பை விலைகொடுத்து வாங்காதே''.

''ஜோன்சன்! என் தந்தை ஒரு ஜெர்னலிஸ்ட். அவர் வியட்நாமில் செய்தி சேகரித்து இருக்கிறார். என் தாத்தா, அவர்கூட ஒரு ஜோர்னலிஸ்ட், அங்கோலா, தென்னாபிரிக்கா, கொங்கோவில் எல்லாம் அவர் பணியாற்றியிருக்கிறார். பட்ரிக்ஸ் லுமும்பா படுகொலை செய்யப்பட்டது பற்றி அவர் எழுதியிருக்கிறார். அவை எல்லாம் உன்னதமான ஜேர்னலிஷம். மிகவும் பயங்கரத்தின் மத்தியில் அவை செய்யப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க நானும் நீயும் இந்த ஏழைமக்களுக்கு எதிரான கொடூரம் பற்றிய உண்மைகளை ஏன் வெளியில் கொண்டு வருவதில் பாடுபடக்கூடாது''.

ஜோன்சன் திடுக்கிட்டான். 'இவளுக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?' என்று அவளை மலங்க மலங்கப் பார்த்தான். ரீட்டாவின் மீது அளப்பரிய காதல்கொண்ட அவனுக்கு இதெல்லாம் அநாவசியம் என்று தோன்றியது. பொலிஸ்காரர் சொல்வதை அப்படியே ஈயடிச்சான் காப்பியாக எழுதிக்கொடுத்துவிட்டு சம்பளத்தை வாங்கிக்கொண்டால்போதும் என்று நினைக்கிற நல்லபிள்ளை அவன்.

கமிஷனரும், பொலிஸ் அதிகாரியும் கொடுத்த தகவல்களை குறிப்பெடுத்துக்கொண்ட பத்திரிகையாளர்கள் பொலிஸார் புடைசூழ ஓடைக்கரைக்குப் புறப்பட்டார்கள்.

ஒருபக்கம் விசாலமான கடல். கண்களுக்கு எட்டிய தொலைவுவரை அலைக்ள் வரிசையாக ஒன்றின்பின் ஒன்றாக உருண்டுவரும் நீர்ப்பரப்பு. அடிவானில் கப்பல்களும், சில மீன்பிடிப் படகுகளும் நகர்ந்து செல்வது சிறு சிறு பறவைகளின் நடமாட்டம்போல் தெரிகின்றது.

கரையோரமாக ரயில் தண்டவாளம் நீண்டுசென்று ஒரு பெரிய குகையின் வழியாக ஊடுருவி எங்கோ தொலைவில் வளைந்து மறைந்துவிடு கின்றது.

துப் பாக்கி ஏந்திய பொலிஸ் அதிரடிப்படையினர் வழியெல்லாம் காணப்படுகிறார்கள். அவர்களைத் தவிர சிவில் உடையணிந்த சாதாரண மனிதர்கள் எவரும் கண்களுக்கு தென்படவில்லை. பயங்கரவாதிகளின் பிடியில் இருந்த ஒரு பிரதேசத்தை அரசபடையினர் கைப்பற்றிவிட்டதைப் போன்று அது காட்சியளிக்கின்றது. பொலிஸாரும் அப்படித்தான் சொன்னார்கள்.

ஓடைக்கரை ஓர் அமானுஷ்யமான பிரதேசமாகும்.

சிறியஓடை. நீர் சலசலவென ஓடுகின்றது. பத்திரிகையாளர்களுக்கு அந்தக் காட்சி ரம்மியமாகவிருந்தது. ஓடையின் ஒரு தொங்கலிலிருந்து பிரிந்து செல்லும் மூங்கில் காட்டை ரீட்டா கவனித்தாள். 'அந்தச் சூழலும் தன்மையும் மெக்டோனால் சொல்வது போல 'பயங்கரவாதிகள் மறைந்துவாழும் இடமாகவிருக்குமோ, கஷ்டஜீவனம் நடத்திவரும் சேரிமக்கள் அவர்களுடன் தொடர்புவைத்திருப்பார்களோ இல்லையென்றால் அவர்களில் பெரும்பாலானவர்கள் பயங்கரவாதிகளா? ஒன்பதுபேர் வெட்டிக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் 7பேர் சேரியைச் சேர்ந்தவர்கள். இனந்தெரியாத இருவர் இருக்கிறார்களே இவர்கள் யார்?' இப்படிப் பல கேள்விகள் அவள் ம்னத்தில் எழுந்தன.

'அவர்கள் இரகசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மென்டோசா கொலைசெய்யப்பட்டதில் அவர்களுக்கு உடன்பாடில்லை. அதைச் செய்தவர்களை சந்திக்க வந்திருக்கிறார்கள். ஏதோ முரண்பாடு. அடிதடியில் இறங்கிவிட்டார்கள். மெண்டோசாவை கொலைசெய்தவர்களை வெட்டித்தள்ளினார்கள். அவர்களை சேரியிலுள்ள பயங்கரவாதிகள் வெட்டித் தள்ளினார்கள்'.

பொலிஸ் அதிகாரி மெக்டோனால் அனைவரையும் குழப்பியடிக்கும் இவ்வாறான கதைகளைச் சொன்னான்.

அந்தக் கதையை அவன் சுவையான திகில் சம்பவங்களாகச் சொன்னான். பெரும்பாலானவர்கள் நம்பினார்கள்.

ரீட்டா -

நம்பவில்லை. அவனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மெக்டோனாலுக்குப் பக்கத்தில் இரகசியப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ்காரன் ஒருவன் இருந்தான். தலைநரைத்துவிட்டிருந்தாலும் மிடுக்குடன் கம்பீரமாக அந்த அமெரிக்க நீக்ரோ இருந்தான். அவனுடைய தீட்சண்யமான பார்வை ரீட்டாவை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தது.

''இவள் வித்தியாசமானவள். கவனித்துக் கொள்ளவேண்டும்''.

மெக்டோனால் காதில் நீக்ரோ இரகசியமாகக் குசுகுசுத்தான்.

ரீட்டா அதனை கவனிக்கவில்லை. வலைப்பின்னலாகிவிட்ட நிகழ்வுகளை ஒவ்வொன்றாக உருவிஅவதானிப்பதில் அவள் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள்.

ஒரு முதலை அவளைக் கபளீகரம் செய்வதற்கு சந்தடியில்லாமல் நெருங்கிக்கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை.

சேரியை அவர்கள் சுற்றிப்பார்த்தார்கள். ஜோன்சனை இழுத்துக்கொண்டு ரீட்டா மூலைமுடுக்கெல்லாம் சென்றாள்.

வயோதிபர்கள், ஊனமுற்றோர், குருடர் எனப் பலர் அங்கே சுற்றிக்கொண்டிருந்தார்கள். இளம்வயதினரையோ, சிறுவர்களையோ காணவில்லை. ஆடுகளும், மாடுகளும் அலைந்து திரிந்துகொண்டிருந்தன. வேற்று மனிதர்களைக் கண்டவுடன் நாய்கள் குரைத்தன. நூற்றுக்கும் அதிகமான குடிசைகள் இருந்தன. அவற்றில் சில நெருப்புக்குத் தீனியாகிவிட்டிருந்தன.

''இங்கே வசித்தவர்கள் எல்லாம் எங்கே? எல்லோரையுமா சிறையில் அடைத்துவிட்டீர்கள்?'' ரீட்டா கேட்டாள்.

அதற்கு அந்த நீக்ரோ சி.ஐ.டி. இளித்தான். ''இல்லை பயங்கரவாதிகள் என்று சந்தேகப்பட்டவர்களை மட்டும்தான் அடைத்து வைத்திருக்கிறோம். மற்றவர்கள் பயத்தில் ஓடிவிட்டார்கள்''

''எங்கே?''

''காட்டிற்குள் ஓடியிருக்கலாம். அது கவலைக்குரிய விசயமல்ல. நாம் அநாவசியமாக எவரையும் அடைத்து வைக்கவில்லை.காட்டிற்குள் ஓடிப்போனவர்கள் எங்கேயும் தப்பிச்செல்லமுடியாது. சுற்றிக் காவல் போடப்பட்டிருக்கிறது. எத்தனை நாள்தான் காட்டிற்குள் இருக்கப்போகிறார்கள். திரும்பி வந்துவிடுவார்கள். பாவம். அப்பாவிகளை ஒன்றும் செய்யமாட்டோம். ஆனால், பயங்கரவாதிகள் யார் யார் என்று தெரியும். அவர்களை விடமாட்டோம்'' அவன் ஒரு பிரசங்கமே செய்தான்.

''இவன் பொலிஸ் அதிகாரியின் கைக்கூலி. நன்றாகவே பேசக்கற்றுக் கொண்டிருக்கிறான்''.

ரீட்டா ஜோன்சனின் காதில் மெதுவாக கிசுகிசுத்தாள்.

நீக்ரோ சி.ஐ.டி. அதனையும் உன்னிப்பாகக் கவனித்தான்.

''ஏன்? காட்டிற்குள் போய் அவர்களில் யாரையாவது சந்திக்கவிருப்பமா?''

அவன் கேட்டான்.

ரீட்டா திடுக்கிட்டாள். 'நான் மனசுக்குள் நினைத்ததை கண்டுபிடித்துவிட்டானே' என்று அவளுக்கு அதிசயமாகவிருந்தது.

''இல்லை! இல்லை'' என தடுமாற்றமுடன் பேசிய அவள், சீக்கிரமாகவே தன்னைச் சுதாகரித்துக்கொண்டாள்.

***

பத்திரிகைகள் அனைத்தும் மியாமி கரை சம்பவங்களை பரபரப்பாக வெளியிட்டிருந்தன. பொலிஸ் அதிகாரி மெக்டோனால் வழங்கிய தகவல்களே முழுமையாக பிரசுரமாகி யிருந்தன. சர்வதேச பயங்கரவாதத்துடன் உள்நாட்டு பயங்கரவாதிகள் கைகோத்துக் கொண்டுள்ளார்கள். ஓடைக்கரையில் இறந்துகிடந்தவர்களில் வேறு பிரதேசத்தைச் சேர்ந்த இருவரின் சடலங்களும் கிடந்தன. இது நல்ல ஆதாரமாகும். அரசியல்வாதி மென்டோசாவை கொலை செய்தவர்கள் சேரிப்புறத் தலைவர்கள். இவர்களில் பட்ரிஸ் என்பவன் ரயிலு டன் மோதி காரில் கருகிச் செத்துப் போனான். மற்றவன் நண்பனின் மனைவியை கூட்டிக் கொண்டு தலைமறைவாகிவிட்டான் என்ற தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன.

(27ஆம் பக்கம் பார்க்க)

# இப்படியும் ஒரு முகம்!



எனது கணவர் ஆசிமுக்கு கொடுப்பதற்காக படுக்கை அறைக்குள் தேநீர்க் கோப்பையுடன் நுழைந்தபோது பார்வை எதேச்சையாக எதிர் மாடி வீட்டுக் குத் தாவியது. சீமா டீ தயாரித்துக் கொண்டிருக்க, அவளுக்குப் பக்கத்தில் புன்னகை யுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார் அப்பாஸ் சார்.

அப்பாஸ் சாரின் மாடிவீடு எங்களுக்கு நேர் எதிரில் அமைந்திருந்தது. அவர் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். அவர்களுக்கு ஒரே மகன் சலீம். ரொம்ப ஸ்மார்ட். என்ஜினியரிங் இறுதியாண்டு படிக்கிறான். சொந்த வீடு, அமைதியான வாழ்க்கை.

அப்பாஸ் சார் மீது அவரது மனைவி சீமா வைத்திருந்த அன்பை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. சாதாரண தம்பதிகளை விட அவர்களிடையே தென்பட்ட அன்யோன்யம் ரொம்பவும் அதிகம்.

அப்பாஸ் சார் வீட்டுக்கு வர எவ்வளவு தாமதமானாலும், அவரது மனைவி தூங்காமல் பால்கனியில் உட்கார்ந்தபடி காத்திருப்பாள். இதைப் பார்க்கும் போது எனக்கு ரொம்ப பொறாமையாக இருக்கும்.

விடியற்காலையில் பால் வாங்க வெளியே வந்தால் அவர்கள் ஒன்றாக மோர்னிங் வாக்' செல்வதைப் பார்க்க முடியும். திரும்பி வந்து சிறிது நேரத்துக்கெல்லாம் 7-8 மாணவர்களுக்கு டியூசன் எடுக்க ஆரம்பித்து விடுவார், அப்பாஸ் சார்.

கணவன் மனைவிக்கிடையில் தோன்றும் கருத்து வேறுபாடு மற்றும் மனவருத்தங்கள் அவர்களிடமும் ஏற்படாது என்று சொல்வதற்கில்லை. என்றாலும், காலை சம்பவத்தை மாலையிலும் மாலை சம்பவத்தைக் காலையிலும் மறந்து அவர்கள் ஒன்றாக 'வாக்கிங்' அல்லது 'ஷொப்பிங்' செல்வதைப் பார்க்கமுடியும்.

பூங்காவில் நாங்கள் கூடும்போது, மனைவியைப் பற்றிப் பெருமையாக பேசுவதென்றால் அப்பாஸ் சாருக்கு அல்வா தின்பது மாதிரி. ''சீமா இல்லை என்றால் என் வாழ்க்கைக்கு அர்த்தமே இருந்திருக்காது..'' என்பார் உருக்கமாக.

எங்கள் இளைய மகன் அமீரின் பிறந்த நாளையொட்டி அப்பாஸ் சார் குடும்பத்துக்கு அழைப்பு விடுத்திருந்தேன். சீமா வந்திருந்தார். அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது, 'அப்படி என்ன விசேஷம் இவளிடம்?' என்றபடி தலைமுதல் கால்வரை விழிகளால் அளவெடுத்தேன். ரொம்ப சாதாரண பெண் மணியாகவே இருந்தாள் சீமா.

இதற்கடையில் எனது உயிர்த்தோழி ரூபா எங்கள் நகருக்கே பணிமாறுதலில் வந்தாள். அதுவும், அப்பாஸ் சார் வேலை செய்யும் பள்ளியிலேயே வேலை.

ரூபா தனது பெயருக்கு ஏற்றாற்போல் நல்ல அழகி. நல்ல புத்திசாலியும்கூட. ஆனால் திருமணமாகி ஓர் ஆண்டு நிறைவடைவதற்குள் விதவையாகி விட்டாள் என்பதுதான் கொடுமை.

ஒருநாள் எங்கள் வீட்டு பால்சனியில் ரூபாவும், நானும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது ரூபா, அப்பாஸ் சாரை பார்த்தபடி, ''இவங்க எவ்வளவு அன்பான தம்பதியா இருக்காங்க, பார்த்தீங்களா?'' என்றாள்.

''புருஷன்- பொண்டாட்டி அப்படித் தானே இருக்கவேண்டும்'' என்றேன்.

''ஆனா இவங்க கொஞ்சம் ஓவர். அப்பாஸ் சார் எந்த நேரமும் மனைவியைப் பற்றியே பேசுவார். அவங்க புகழைப் பாடலை என்றால் அவருக்கு தலை வெடுச்சிடும் போல.....'' என்று சொல்லி சிரித்தாள், ரூபா. அந்தப் சிரிப்பில் நானும் கலந்துகொண்டேன்.

ஒரு சிலமாதங்களுக்குப் பிறகு மீண்டும் ஒருநாள் என் வீட்டுக்கு வந்திந்தாள், ரூபா. அவளது முகம் வாடியிருந்தது. நான் காரணம் கேட்பதற்கு முன்பே,'' அப்பாஸ் சாரின் வீட்டுக்கு போயிருந்தேன். அவர் மனைவி ரொம்ப வருத்தமாய் இருக்காங்க. ஆபிஸ் ஆட்கள் எல்லாம் அவங்களைப் பார்த்துட்டுப் போற அளவுக்கு சீரியஸ்'' என்றாள், சோகமாக.

## உண்மைக்கதை

அப்பாஸ் சாரை நினைக்க எனக்கு ரொம்ப வருத்தமாக இருந்தது. 'மனைவி மீது உயிரையே வைத்திருந்த அவரால் மனைவி உயிருக்கு போராடுவதை எப்படி தாங்கிக்கொள்ள முடியும்?'

''நானும் வந்து பார்க்கிறேன்'' என்றபடி ரூபாவும், நானும் அப்பாஸ் சாரின் வீட்டுக்குச் சென்றோம்.

சீமா கட்டிலில் படுத்தபடி இருமிக் கொண்டிருந்தாள். அவளது கண்கள் மேலே செருகிக் கொண்டிருந்தன.

இன்னொருபுறம் சோகமே உருவாகக் காட்சியளித்தார், அப்பாஸ் சார். இரவுத் தூக்கம் தொலைந்து பல நாட்களாகி இருக்கும் என்பதை கண்களைச் சுற்றியிருக்கும் கருவளையங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டின.

அதன் பிறகு தினமும் அவரது வீட்டுக்குப் போக ஆரம்பித்தேன். ஒரு நாள் அப்பாஸ் சார், ''நாளைக்கு சலீம் வந்துவிடுவான். அம்மா இருக்கும்போதே அவனுக்கு கல்யாணம் செய்துவிடலாம் என்று முடிவு பண்ணியிருக் கேன் அதைத்தான் சீமாவும் விரும்புறா. அவனுக்கு ஒரு நல்ல பொண்ணா கிடைச்சா போதும். எங்களுக்கு வரதட்சணை எதுவும் வேண்டாம். எங்கக்கிட்டேயே எல்லா வசதிகளும் இருக்கு என்றார்.

பெண் தேடும் படலம் தொடங்கியது. நானும் தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்தேன். உறவு முறையிலேயே சபா என்ற பெண்ணைப் பேசி முடித்து மகனுக்குத் திருமணம் செய்து வைத்தார். ஆடம்பரச் சடங்குகள் இன்றி எளிமையான முறையில் புகுந்த வீட்டுக்கு வந்தாள் சபா. சீமாவின் உடல் நிலையோ மோசமாகிக்கொண்டு வந்தது.

கடைசியில் ஒருநாள் எல்லோரையும் அழவைத்துவிட்டு மரணமடைந்தாள், சீமா. அப்பாஸ் சாரின் காந்தப் புன்னகை மற்றும் வசீகரத்தையும் கூடவே எடுத்துச் சென்றுவிட்டாள்.

சீமா மரணமடைந்து 3 மாதங்களாகி விட்டன. வீட்டில் மகன்-மருமகள் இருந்தும் அந்த வீட்டின் சூழ்நிலை சுத்தமாக மாறிப்போயிருந்தது. எதிர் மாடிவீட்டின் மீது பார்வைபடியும் போதெல்லாம் என்னை அறியாமல் பெருமூச்சு வெளிப்படும்.

இதற்கிடையில் பள்ளி விடுமுறை தொடங்கியது. அம்மாவின் வீட்டுக்குப் போய் கன நாட்களாகி விட்டதால் இந்த தடவை அங்கு போய் வர தீர்மானித்தேன். பயண ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த போது ரூபா வந்தாள். ''ஸ்கூல் லீவு விட்டாச்சு. நாளைக்கு நான் ஊருக்குக் கிளம்பிறேன். நீ எனக்கு ஒரு உதவி பண்ண வேண்டும்'' என்றாள்.

''சொல்லு ரூபி. என்ன செய்யவேண்டும்?''

''இந்த போட்டோவை அப்பாஸ் சாரிடம் திருப்பிக் கொடுக்கவேண்டும். நேற்று ஸ்கூலில் என்னிடம் கொடுத்தார். திருப்பிக் கொடுக்க மறந்துட்டேன். இப்போ அவ்ங்க வீடு பூட்டி இருக்கு. மறந்துவிடாமல் கொடுத்திடு''

எனக்கு ஆர்வம் மேலோங்கியது. ''யாருடைய போட்டோ இது?'' என்றேன்.

''அப்பாஸ் சார் கல்யாணம் செய்யப் போற பெண்ணுடையது..'' ரூபி ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தமாக உச்சரித்தாள்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''என்ன சொல்றீங்க, இது நிஜம் தானா?'' என்றேன்.

உண்மையில் புகைப்படத்தில் இருந்த பெண்ணுக்கு 20-22 வயதுக்குள் தான் இருக்கும்.

என் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டவளாய் பேசத் தொடங்கினாள் ரூபி.

''இந்தப் பெண்ணுக்கு அப்பா கிடையாது. வயதான தாத்தா மட்டும் ஆதரவு. ரொம்ப ஏழ்மையான குடும்பம். அப்பாஸ் சார் சீதனம் தேவை இல்லை என்று சொல்லி விட்டதால் இரண்டாம் தாரமாக கொடுக்க சம்மதிச்சிருக்காங்க''

மறுநாள் நாங்கள் அம்மா வீட்டுக்குக் கிளம்பிச் சென்றோம். ஒருமாதம் லீவைக் கொண்டாடிவிட்டு இன்று காலைதான் வீடு திரும்பி இருந்தோம். ஆசிம் களைத்துப் போயிருந்தார். அவருக்கு டீ தயாரித்து படுக்கையறைக்கு கொண்டு சென்றேன். எப்போதும் போல் என் பார்வை அப்பாஸ் சாரின் மாடிவீட்டுக்குள் நுழைந்தது. சமையலறையில் நின்றபடி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார், அப்பாஸ் சார்.

அதே புன்னகை... அதே வசீகரம். ஆம்! வித்தியாசம் பெண் மட்டும்தான். யாரிவள்? சலீம் மனைவியாக இருக்குமோ? இருக்காது. மாமனாரும், மருமகளும் இத்தனை நெருக்கமாக நிற்க முடியாது.

சட்டென்று அந்தப் பெண் திரும்பினாள். வெகுளித்தனத்துடன் பேரழகியாக இருந்த அவளுக்கு வயது 20-22க்குள் தான் இருக்கும்.... என் இதயத்துடிப்பு எக்ஸ்பிரஸ் ரயிலானது... 'யாரிவள்? எங்கே பார்த்தேன் இவளை?' சட்டென்று மனதில் மின்னலடித்தது.


'அட, முன்பு போட்டோவில் பார்த்த பெண் போலிருக்கிறாளே...! ஆம் அவளேதான்..'

'ஆக, அப்பாஸ் சார் இரண்டாம் திருமணம் செய்துவிட்டார், அதுவும் இத்தனை விரைவாக அதுவும் தனது மகனைவிட குறைந்த வயதுள்ள பெண்ணை...'

'ச்சே.. இவருக்கு இப்படியும் ஒரு முகமா?' அந்த நொடியே அப்பாஸ் சார் மீதிருந்த மதிப்பும், மரியாதையும் தகர்ந்து தூள் தூளாகிவிட அவர்களின் மாடிவீட்டை நோக்கியிருந்த ஜன்னலை படீரென அறைந்து சாத்தினேன்!

# சிறுவர் பக்கம்


நான்கு குட்டிப் புழுக்கள் அந்தப் பக்கம் போவதற்கு வழி தெரியாமல் திண்டாடிக்கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா குழந்தைகளே!



இந்த 5 தங்கக் குடங்களும் ராமுவுக்கு புதையலாகக் கிடைத்தவை. 1-5 வரை உள்ள குடங்களில் 70, 46, 28 என தங்கக்காசுகள் உள்ளன. மீதமுள்ள இரண்டு குடங்களிலும் எத்தனை தங்கக் காசுகள்என்று சொல்ல முடியுமா உங்களால்? (எல்லா குடங்களிலும் உள்ள தங்கக் காசுகளுக்கு மிடையே குறிப்பிட்ட வித்தி யாசம் உள்ளது) விடை அடுத்தவாரம் வெளி வரும்.




## சிறுவர் கைவண்ணம்



ரேணுஜன்,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



அனிதா, தரம்2,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15.



ஆர்.புஸ்பகுமார், தரம் 5 ஏ,
புனித அந்தோனியார் த.ம.வி.,
கொழும்பு- 14.



எப்.யும்னா சபீக், 2 சி, ரி,
சாகிரா தேசிய பாடசாலை,
கம்பளை.

## குடம் நிறையப் பொற்காசு




## அழகாக நிறம் தீட்டுங்கள் 21



**தம்பி, தங்கைகளே!**
மேலே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்க ளுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண் ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 19



★பெயர் - ஜெ.லூர்த்துமேரி ★ தரம் - 4
★பாடசாலை - புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை, மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்....

1. த.சாமந்தி,
   தரம் 1 ஏ,
   சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
2. ஆர்.இந்துஜா,
   யு.கே.ஜி. ஏ,
   கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
   கொழும்பு- 15.
3. லோகநாதன் நிரோஜா,
   புனித திரேசா பெண்கள் கல்லூரி,
   கிளிநொச்சி.
4. ஆர்.எம்.வினோத்,
   தரம் 2,
   சென். தோமஸ் கல்லூரி,
   கல்கிசை.
5. எஸ்.வித்யா,
   கொழும்பு இந்து மத்திய வித்தியாலயம்,
   கொழும்பு- 13.



## மறக்கமுடியுமா

இந்தியாவில் வல்லூறுகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது. சிறிதுகாலத்திற்குள் அவை முற்றிலும் மறைந்துவிடக்கூடும்.

வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பற்ற செயலே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த 15 வருடங்களில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நேபாளத்தில் உள்ள வல்லூறுகளில் 95சதவீதம் மறைந்துவிட்டன. இருபது வருடங்களுக்கு முன் இந்திய துணைக் கண்டத்தில் 85 இலட்சம் வல்லூறுகள் இருந்தன. இன்றோ வெறும் 4000தான் இருக்கின்றன. ஒரு தொற்றுநோயின் காரணமாகவே இவை மறைந்துவருகின்றன.

ஜொராஷ்ட்ரிய மதத்தில் இறந்தவர்களின் உடல்கள் இவற்றுக்கு இரையாகின்றன.

## நெல்சன் மண்டேலா வாழ்க்கை சினிமா படமாகிறது

தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும், விடுதலை போராட்டத் தலைவருமான நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாறு சினிமாப்படமாக தயாரிக்கப்பட இருக்கிறது. இந்த சினிமா படத்தை ஆஸ்கார் விருது பெற்ற ஹொலிவுட் சினிமா டைரக்டர் கிளிண்ட் ஈஸ்ட்வுட் டைரக்ட் செய்ய இருக்கிறார். இதில் மார்கன் பிரிமன் மண்டேலாவாக நடிக்கிறார்.

இங்கிலாந்து பத்திரிக்கையாளர் ஜோன் கர்லின் எழுதிய தி ஹியுமன் பேக்டர் நெல்சன் மண்டேலா அன்ட் தி கேம் தட் வேர்ல்ட் சேன்ஞ்ட் உலகத்தை மாற்றிய நெல்சன் மண்டேலாவும் அவர் நடத்திய அரசியல் விளையாட்டுக்களும்) என்ற புத்தகத்தை தழுவி இந்த படம் தயாரிக்கப்படுகிறது.



# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

## சாப்பிடும்போது...

- ★ நின்றுகொண்டு தண்ணீர் குடிக்கக் கூடாது, சாப்பிடும் முன்பும் தண்ணீர் குடிக்கக் கூடாது.
- ★ இரவுநேரங்களில் தயிரையும், எலு மிச்சம்பழச்சாற்றையும் குடித்தல்கூடாது.
- ★ நெய், மீன் இரண்டையும் ஒரே நேரத்தில் சாப்பிடக்கூடாது.
- ★ யோசித்துக்கொண்டே சாப்பிடக் கூடாது.
- ★ கோபத்துடன் சாப்பிடுவதை தவிர்ப்பது நல்லது.
- ★ உடம்பில் மருந்தோ, களிம்போ தடவி இருக்கும் நேரங்களில் சாப்பிடக்கூடாது.
- ★ தலையை விரித்துப்போட்டு சாப்பிடு வது கூடாது.
- ★ நோய்வாய்ப்பட்டவர்கள் பேசிக் கொண்டே சாப்பிடும்போது உணவு அளவைத் தாண்டிவிடலாம். எனவே பேசாமல் சாப்பிட வேண்டும்.
- ★ சாப்பிட்ட உடனே மருந்து மாத் திரையை விழுங்குவது தவறு.
- ★ சித்த வைத்திய மருந்துகள் சாப்பிடும் போது அகத்திக்கீரை, பாகற்காய் தவிர்ப்பது அவசியம்.

## வெட்டவெளியில் தூங்கும் மக்கள்!



சென்னை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கும் நோயாளிகளைப் பார்க்கவரும் உறவினர்கள் எண்ணிக்கை தற்போது மிகவும் அதிகரித்துள்ளது. அவர்கள் தங்குவதற்கு எந்த வசதியும் இல்லாததால், அவர்கள் ஆஸ்பத்திரி வளாகத்தில் வெட்டவெளியில் படுத்திருக்கும் காட்சியை படத்தில் காணலாம்.




## பனிக்கட்டிப் பயணம்

பனி உறைந்த கடல்பகுதிகளில் பனிக்கட்டிகளை உடைத்துக்கொண்டு முன்னேறும் அமெரிக்க போர்க்கப்பல் 'ஐஸ் பிரேக்கர் ஹீலே'.

பெரிங்கடல் பகுதியில் பனிக்கட்டிகளின் மாதிரிகளை சேகரிக்க விஞ்ஞானிகளை இக்கப்பல் அழைத்து வந்துள்ளது. பெரிங் கடல்பகுதியில் சுற்றுச்சூழல் குறித்த ஆய்வில் விஞ்ஞானிகள் ஈடுபடுகின்றனர். அந்தப் பகுதியில் மென்மையான படிவமாகவே பனிக்கட்டிகள் உள்ளதால், எதிர்பார்க்கப்பட்ட காலஅளவை விட விரைவாக இந்தமாதம் 30ஆம் திகதியே கப்பல் தனது தளமான சியாட்டில் திரும்பும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# அமோகமாய் விற்பனையாகும் 'அந்த' மருந்துகள்



இன்று இந்தியாவின் பெரும் நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களில் கூட செக்ஸ் உணர்வை அதிகரிக்கும் மருந்துகள் அதிரடியாக விற்பனையாகி வருகின்றன.

இந்த மருந்துகளை வயதானவர்கள் மட்டுமன்றி இளைஞர்களும் போட்டிபோட்டு வாங்குகின்றனர்.

இந்த மருந்துகள் சொக்கலேட், கப்ஸ்யூல், ஸ்பிரே மற்றும் எண்ணெய் வடிவத்தில் சந்தையில் கிடைத்து வருகின்றன. இந்த மருந்துகளின் விற்பனை கோடிக்கணக்கில் புரளும் தொழிலாக இருந்து வருகிறது.

இந்த வியாபாரத்துடன் தொடர்புடையவர்கள், தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களிலும் உத்தரப் பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் வியாபாரம் கனஜோராக நடந்துவருவதாக தெரிவிக்கிறார்கள்.

செக்ஸ் உணர்வை அதிகரிப்பதாகக் கூறப்படும் இந்த மருந்துகளின் பெயர்கள் கூட கவனத்தைச் சுண்டி இழுப்பனவாக உள்ளன. செக்ஸை நினைவுபடுத்தும் வகையில் 'ஏஎக்ஸ்', கொசெக்ஸ்' என்பது போன்ற பெயர்களில் சந்தையில் இவ்வை விற்கப்படுகின்றன.

படிப்பறிவு குறைந்தவர்கள் இந்தப் பெயர்களைக் கண்டு மயங்கி விடுகின்றனர். சொக்லெட் போன்று சுவையான வடிவத்திலும் செக்ஸ் மருந்துகள் இந்தியாவில் விற்கப்படுகின்றன. இவை மூலிகைகளால் தயாரிக்கப்படுவதாகவும் பின்விளைவுகளை ஏற்படுத்தாது என்றும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

இவை உண்மையில் எந்தளவு பலனளிக்கக்கூடியவை?

இந்த மருந்துகளின் மாதிரியை சோதனைக் கூடத்தில் ஆய்வுசெய்தபிறகே உண்மை தெரியவரும். ஆனால், இந்த வியாபாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களே இதற்கு உத்தரவாதம் எதையும் அளிப்பதில்லை. 'சிலாஜித்' சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொன்னாலும், அதன் அளவுகுறித்து எவரும் மூச்சுவிடுவதில்லை. முறையான அங்கீகாரம் இல்லாதபோதிலும் இந்த மருந்துகளின் விற்பனை அமோகமாக இருக்கப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. மருந்து தயாரிப்பாளர்கள், கெமிஸ்டுகளுக்கு இலவசங்களை அள்ளித் தருவதுடன் கவர்ச்சிகரமான கமிஷனும் கொடுக்கிறார்கள். இது அந்த மருந்துகளின் விற்பனையை ஊக்குவிக்கிறது.

செக்ஸ் டாக்டர்களையும் இந்தக் கும்பல் விட்டுவைப்பதில்லை. அவர்களைக் கணிசமாகக் கவனித்துவிட்டு தங்களது மருந்துகளை பரிந்துரைக்கச் செய்துவிடுகின்றனர்.

என்னதான் விழிப்புணர்வு பிரசாரம் செய்தாலும், செக்ஸ் பிரச்சினைகளிலிருந்து இரகசியமான முறையில் விடுபடவே மக்கள் விரும்புவதால், இம்மருந்துகளின் விற்பனை நாளுக்கு நாள் கூடிக்கொண்டேதான் போகிறது.



"சின்ன வீட்டில் இருந்து தலைவர் அவசர அவசரமாகக் கிளம்பி வந்துட்டார் என்று சொல்றியே... எப்படி?"

"அவர் தோளிலே துண்டுக்குப் பதிலா துப்பட்டா கிடக்கு பாரு..."



"என்ன இருந்தாலும் அரசர் இவ்வளவு பந்தா செய்யக்கூடாது..."

"எப்படி?"

"மூக்குப்பொடி போடுவதற்குக் கூட ஒரு தனி ஆளை நியமித்திருக்கிறாரே..."



"எனக்கா தொலை நோக்குப் பார்வை இல்லை? அதோ, கூட்டத்தின் கடைசியில் ஒரு தொண்டர், ஒரு பெண் ணின் இடுப்பைக் கிள்ளுவது எனக்குத் துல்லியமாகத் தெரிகிறது"




"ஐநூறு ரூபாய் புடைவை எடுத்துக் கிட்டு ஆயிரம் ரூபாய்க்கு பில் போடச் சொல் றீங்களே?"

"பக்கத்து வீட்டுக்காரி ஆயிரம் ரூபாய்லே புடைவைஎடுத்திருக்கா அவவிடம் காண்பிக்கத்தான்"



"பெரிசா அலட்டிக்காம குசினியில போய் சோலியப் பாருங்க. உங்க பிரஷ்ஷால என் டைகரோட பல்லு தேய்ச்சதுக்கு இந்த குதிகுதிக்கிறீங்களே"



"பெண்ணுக்கு என்ன போடு வீங்க?"

"கேட்கிறீங்க... நாங்க இருபது சவரன் நகை போடுவோம்"

"இன்னும் நாங்க கொஞ்சம் அதிகம் எதிர்பார்த்தால் போடுவீங்களா?"

"அப்படின்னா.... வரதட்சனை புகாரில கேஸ் போடுவோம்!"



"இன் சூரன்ஸ் இல்லே! லைசன்ஸ் இல்லே! ஹெல்மெட் இல்லே! ஆனாலும் வாகனம் ஓடிக்கிட்டு வாரே?

"வாகனமும் என்னுடையது அல்ல சார்"

# சொர்க்கத்துக்கு வழி!



ஒரு ஊரில் சாமியார் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஊராருக்கு நல்ல அறிவுரைகள் கூறுவார். அவர்களின் துன்ப துயரங்களைப் போக்குவார். யாருக்கும் என்ன உதவி வேண்டுமானாலும் செய்வார்.

தீபாவளி வந்தபோது, அவருக்கு ஒரு சிந்தனை பிறந்தது. 'எல்லோரும் பலகாரங்கள் செய்து சாப்பிட்டு, மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஏழைக் குழந்தைகள் மட்டும் அன்றும் பசியும் பட்டினியுமாகவே இருக்கிறார்களே!' என்று நினைத்தார்.

அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஊராரை அழைத்தார். எல்லோரும் வந்தார்கள்.

''சொர்க்கத்துக்குப் போக உங்களில் யாருக்கு ஆசை இருக்கிறது. கையைத் தூக்குங்கள்'' என்று சொன்னார்.

அத்தனை போரும் கையைத் தூக்கினார்கள்.

''சொர்க்கத்துக்குப் போக நான் ஒரு சுருக்கமான வழி கண்டு பிடித்திருக்கிறேன். தீபாவளி அன்று காலையில் எல்லோரும் வாருங்கள், சொல்லுகிறேன். வரும்போது உங்கள் வீட்டில் செய்த பலகாரங்களையும் கொஞ்சம் எடுத்து வாருங்கள்'' என்று சாமியார் சொன்னார்.

'சாமியார் சாப்பிடக் கேட்கிறார் போலிருக்கிறது.' என்று எல்லோரும் நினைத்துக் கொண்டார்கள். அவர் சொன்னபடி பலகாரங்களை எடுத்துக் கொண்டு, தீபாவளி அன்று காலையில் ஆசிரமத்துக்கு வந்தார்கள்.

ஆசிரமத்தில் ஏழைக் குழந்தைகள் கூடியிருந்தார்கள். இவர்கள் வந்ததும், குழந்தைகள் வரிசையாக வந்தார்கள்.

''நீங்கள் கொண்டு வந்த பலகாரங்களை நீங்களே குழந்தைகளுக்குப் பரிமாறுங்கள்.'' என்று சாமியார் சொன்னார்.

அவர்களும் பரிமாறினார்கள். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டார்கள்.

''சாமி! சொர்க்கத்துக்குப் போக எளிய வழி சொல்லுவதாகச் சொன்னீர்களே? '' என்று ஒருவர் நினைவு படுத்தினார்.

''வழிதான் காட்டிவிட்டேனே!.'' என்றார் சாமியார்.

யாருக்கும் புரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்.

சாமியார் சொன்னார். ''ஏழைக் குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுங்கள். துணிமணி கொடுங்கள். உங்களுக்கு நிச்சயமாக சொர்க்க வாசல் திறந்திருக்கும்!''

எல்லோரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தீபாவளி, பொங்கல் போன்ற திருநாட்களில் ஏழைகளுக்கு சாப்பாடு போட்டு, துணிமணிகளும் கொடுத்தார்கள்!

# பௌத்தம் தந்த ...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், கேந்திர முக்கியதளங்களில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளது.

இதேபோன்று மாவோயிஸ்டுகளில் இராணுவத்தைச்சேர்ந்த 30ஆயிரம் பேரும் 21முகாம்களில் முடக்கப்பட்டுள்ளனர். இதில் ஒரு புதுமை என்னவென்றால், இந்த 30ஆயிரம் பேருக்கும் அரசாங்கமே சம்பளம் கொடுக்கின்றது. அதாவது தினசரி ஒரு நபருக்கு 60ரூபாய் உணவுக்காக வழங்கப்படுகிறது.

இங்கே மற்றும் ஒருவிடயத்தை அவதானிக்க வேண்டும். மாவோயிஸ்டுகள் தமது ஆயுதங்களை அரசிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக அனைத்து ஆயுதங்களும் ஒரு பாரிய இடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு சீல்வைத்துப் பூட்டப்பட்டுள்ளன. ஆனால், அதன் திறப்பு மாவோயிஸ்டுகளிடமே இருக்கின்றது.

எனினும், யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்தி கண்காணிப்புச் செய்யவும் மனித உரிமை மீறல்களை விசாரித்து பரிகாரம் காணவும் முன்னாள் உயர்நீதிமன்ற தலைமை.நீதிபதி Kedar nathupadayia தலைமையிலான தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவின் கிளை அலுவலகம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. அதன் தலைமைப் பொறுப்பை இயன்மார்டின் ஏற்றுள்ளார். இதில் ஒரு விசேடம் என்னவென்றால், அங்கு இராணுவ விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரியான கேணல் சியாம்விதுருமால என்ற இலங்கையரே பொறுப்பாக இருக்கின்றார்.

ஐ.நா.உயர் அதிகாரியான இயன்மார்டின் இலங்கையைப் பற்றி நன்கு அறிந்தவர். வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை நேரில் கண்டறிந்தவர். இவரை அவரது அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

''நேபாளத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவின் கிளையை அமைப்பதற்கு மன்னர் உட்பட அரசும், தீவிரவாத மாவோயிஸ்டுகளும் பெரும் ஆதரவளிக்கின்றனர். எமக்கு செங்கம்பள வரவேற்பளித்தனர். மன்னர், அரசாங்கம், இராணுவம், மாவோயிஸ்டுகள் எனப் பலருடனும் நேரடியான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். அனைவரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். மனித உரிமை ஆனைக்குழுவின் முன் சாட்சியம் அளிப்பவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.

அனைத்துத் தரப்பினருமே நியாயமான தீர்வும் நிரந்தர சமாதானமும் ஏற்படவேண்டும் என்று கருதுகின்றனர். இவர்களுடைய போராட்டத்தில் ஓர் உண்மைத்தன்மை காணப்படுகின்றது.

ஆனால், இலங்கை நிலைமை தலைகீழாக இருக்கின்றது. ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு என்றவுடனேயே இலங்கை அரசு அலறித்துடிக்கின்றது. காரணம் அதன் செயற்பாடுகளில் சத்தியத் தன்மை இல்லை. இதனால்தான் அரசும் தீவிரவாத இடதுசாரிகளும் ஐ.நா.மனித உரிமை நிறுவனத்திற்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகின்றனர்''- இப்படி இயன்மார்ட்டின் சுட்டிக்காட்டினார்.

அன்று அவர் கூறியதை இன்று இலங்கை அரசு உறுதிப்படுத்திவிட்டது.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரை இலங்கைக்கு அழைத்து அவரது முகத்தில் சேறுபூசிவிட்டது இலங்கை அரசு.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட லூயிஸ் ஆர்பர் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பல் வேறு தகவல்களைத் திரட்டியுள்ளார்.

இறுதியாக ஐ.நா.மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கையில் அமைக்கப்படவேண்டும் என லூயிஸ் ஆர்பர் கோரிக்கைவிடுத்தார்.

ஆனால், இலங்கை அரசு அதனை மறுத்துவிட்டது. அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதனை முகத்தில் அடித்தாற்போல் கூறிவிட்டார். இது ஐ.நாவுக்கே சவால்விடும் ஒரு செயலாக அமைந்துவிட்டது.

அப்படியானால், இவர்கள் ஏன் இந்த அம்மையாரை இங்கு அழைத்தனர். யாரை ஏமாற்றுவதற்கு, எவரைத் திருப்திப்படுத்துவதற்கு இந்த நாடகம் ஆடினர். இவர்களுடைய மடியில் கனம் இல்லை என்றால் ஏன் இப்படிப் பயப்படவேண்டும்?

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசு உண்டு. மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கின் றது என்று தம்பட்டம் அடிக்கும் அரசும் அமைச்சர்களும் ஐ.நா.வைக்கண்டு நடுங்குகின்றனர். அதாவது இயன்மார்டின் கூறியதுபோல் இலங்கை அரசின் நடவடிக்கைகளில் சத்தியத்தன்மை இல்லை என்பதை உறுதிப்படுத்திவிட்டனர். இதுதானே உண்மைநிலை.

# பூட்டிய கதவி....

(6 ஆம் பக்கத் தொடச்சி)

தனது இலங்கை விஜயம் தொடர்பான பூர்வாங்க அறிக்கை ஒன்றை எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான அமர்வில் லூயிஸ் ஆர்பர் அம்மையார் சமர்ப்பிக்கவுள்ளார்.

அதன் போது இலங்கை அரசின் மேலும் பல பொட்டுக்கேடுகள் அங்கு அவிழ்த்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிடையில் ஏதாவது உருப்படியான செயற்பாட்டை மேற்கொண்டு சர்வதேசத்தின் நம்பிக்கையைப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்தில் இலங்கை உள்ளது.

எனினும் இலங்கை அரசின் பிரதிநிதிகள் சிலர் இது விடயத்தில் தொடர்ந்து வெளிவிட்டு வரும் கருத்துக்கள் சர்வதேச சமூகத் தைத் தொடர்ந்து சீற்றம் கொள்ள வைத்துள்ளன. அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, கெஹலிய ரம்புக்வெல, றோகித போகொல்லாகம நாடாளுமன்ற உறுப்பினரான பஸில் ராஜபக்ஷ ஆகியோர் ஐ.நாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை நிறுவுவதைத் தடுப்பதற்கு விடாப்பிடியாக இருந்து வருகின்றமையே சர்வதேச சமுகத்தின் அதிருப்திக்கு காரணம்.

சர்வதேச சமுகத்தின் எதிர்ப்புக்கள் தொடர்ந்து வலுத்துக்கொண்டு வரும் நிலையில் அதனை எதிர்கொள்ள இலங்கை அரசு என்ன செய்யப்போகிறது என்பதுதான் எல்லோரதும் எதிர்பார்ப்பும். ✸

# சமஷ்டி:முன்பு முயற்சித்துப்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் வார்த்தைகள் ஊடாகவே நான் வாசகர்களுக்குத் தெளிவுபடுத்துவேன்.

முதலில் சுயநிர்ணய உரிமையைப் பேசி, பின்னர் அதன் அடிப்படையில் தன்னாட்சி பற்றிக் குறிப்பிட்டு, பின்பு அதை பிரதேச சுயாட்சியாகப் பிரஸ்தாபித்து, இறுதியில் அதை 'உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய' என்ற அடைமொழியுடன் சமஷ்டி வரை 'வெற்றிகரமாக' இறக்கி விட்டவர் பாலசிங்கம்தான்.

தமிழரசுக் கட்சியால் நீண்டகாலம் பேசப்பட்டு, பின்னர் அடைய முடியாமல் கைவிடப்பட்ட விடயம்தான் சமஷ்டி. சமஷ்டியும் கிடையாது என்ற நிலையில்தான் தமிழர் தாயகம் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் மூலம் சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் ஏக முடிவுக்கு வந்தது.

1977 ஜூலை பொதுத் தேர்தலில் தமிழர் தேசம் தனது வாக்குப் பலம் மூலம் அதற்குத் தெளிவான ஆணையும்கூடத் தந்தது. அந்த ஆணையின் மீதுதான் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற மாறாத - பிடிவாத - கொள்கைக் கோட்பாட்டுடன் தலைவர் பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்றுவித்து, தமிழ்த் தாயகத்தின் தேசிய விடுதலை இராணுவக் கட்டமைப்பாக அதை இத்துணை பலமான போரியல் சக்தியாக விஸ்பரூபம் எடுக்க வைத்தார்.

அப்படிப்பட்டவர் - தன்னுடைய போராட்ட இலக்கிலும், கொள்கையிலும், இலட்சியத்திலும் உயிர் போனாலும் விட்டுக்கொடுக்காத பற்றுறுதியும், திடசங்கற்பமும் (Commitment) கொண்ட தலைவர் பிரபாகரனா தனியான தாயகத்தைக் கைவிட்டு, சமஷ்டித் தீர்வு பற்றிப் பேச இணங்கினார் என்பது உலகை வியக்க வைக்கும் கேள்வி.

அப்படி இணங்கி - இறங்கி - அவர் வந்திருக்கவேயில்லை, வந்திருக்கவே மாட்டார் என்பதை உறுதியாகவும், இறுதியாகவும், நம்பிக்கையாகவும் என்னால் கூறமுடியும்.

ஒரு வாரத்துக்கு முன்னர், 'சுயநிர்ணய உரிமை' என்ற அடிப்படையிலான 'பிரதேச சுயாட்சி' பற்றித் தமது மாவீரர் தின உரையில் தாம் வழங்கிய கருத்து, கடைசியில் சமஷ்டி வரைக்கும் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக - அடுத்த வாரம் நடைபெறும் சமாதானப் பேச்சில் குன்றிக் குறுகிப்போக நேரும் என்பது தலைவர் பிரபாகரனுக்கு முன்னரே தோன்றியிருக்குமானால், அந்தச் சுயாட்சி பற்றிய விளக்கத்தை வேறு வார்த்தைகளில் மாற்றம் செய்து, அதற்கு வித்தியாசமான அர்த்தத்தைக் கொடுப்பதன் மூலம் இந் நிலையை ஏற்படாமல் அவர் நிச்சயமாகத் தவிர்த்திருப்பார் என்பதை இலகுவாக ஊகிக்க முடியும்.

தமிழர் தாயகத்தின் சுயநிர்ணய உரிமையை மட்டும் குறிப்பிடாமல் அதனுடன் சேர்ந்து அதனடிப்படையிலான தமிழரின் இறைமை குறித்தும் தமது அந்த மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் ஒருங்குபடுத்தி அழுத்தம் கொடுத்திருப்பாராயின் -

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி (Federal) பற்றிய தீர்வு குறித்து ஆராயும் இணக்கத்தை ஒஸ்லோப் பேச்சுகளில் புலிகளின் பேச்சுக்குழுத் தலைவரான பாலசிங்கத்தால் எட்டியிருக்கவே முடியாது போயிருக்கும்.

அதற்குப் பதிலாக, இறையாண்மையுள்ள தமிழர் தேசமும், இறையாண்மையுள்ள சிங்கள தேசமும் இணைந்து கூட்டு சமஷ்டி ஆட்சிஅல்லது சமஷ்டி யூனியன் (Confederation) அமைப்பது குறித்து பேசுவது பற்றிய ஒரு தீர்மானத்துக்குத்தான் வந்திருக்க முடியும்.

ஆக, இந்தக் கருத்துகளை நோக்கும் வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் பிறக்கும்.

தலைவர் பிரபாகரன் எதிர்பாராத வகையில், மதியுரைஞர் பாலா தமது சில சொந்தக் கருத்துருவங்களை தலைவரின் மாவீரர்தின உரைக்குள் செலுத்தியதன் மூலம், சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசிக் கொண்டே, மெல்ல சமஷ்டித் திட்டம் ஒன்றுக்குப் புலிகளின் தலைவரை மடக்கி இறங்கி வர அவர் வைத்துவிட்டார் என்றும் -

தலைவர் பிரபாகரனுக்குப் பிடிக்காத ஒரு தீர்வு விவகாரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கான சம்மதத்தை ஒஸ்லோப் பேச்சுகளின்போது மதியுரைஞர் பாலா புலிகளின் சார்பில் நாசூக்காக முன்நகர்த்திவிட்டார் என்றும் -

சந்தேகங்கள் எழலாம்.

இந்தச் சந்தேகங்களுக்கு இதுதான் திட்டவட்டமான விடை - முடிவு - என்று எதையும் நான் இக்கட்டுரைத் தொடரில் கூறிவிடப்போவதில்லை.

ஆனால், சமஷ்டி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதிலோ, அத்தகைய தீர்வு முயற்சிக்கு இறங்கிப்பார்க்க இணங்குவதிலோ தலைவர் பிரபாகரனுக்கு எந்தச் சமயத்திலும் உடன்பாடு இருக்கவேயில்லை என்பதையும் -

ஆனால், அதேசமயம், அமைதிப் பேச்சுகளில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டிக் கட்டமைப்பை ஒரு தீர்வு முயற்சியாகப் பரிசீலிக்க இணங்கிய மதியுரைஞர் பாலசிங்கத்தின் தந்திரோபாயம், புலிகள் தரப்புக்கு அமைதி முயற்சி விவகாரத்திலும் சர்வதேச தொடர்பாடல் நிலைகளிலும் இன்றுவரை தொடர்ந்து பெரும் வெற்றியைத் தந்த சாணக்கிய செயல் என்பதையும் -

பின்னால் வரும் அத்தியாயங்களில் தெளிவாக வலியுறுத்தி, ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டுவேன்.

என்றாலும், முதல் வாரம் மாவீரத் தின உரையில் 'பிரதேச சுயாட்சி' பற்றிப் பேசிய தனது தலைவரின் கருத்துக்கு ஒப்பவே தாம் அடுத்தவாரம் 'சமஷ்டி முறைக்கு' இணங்கினார் என்பதை உலகுக்கு புத்திசாதுரியமாகக் காட்டவும் மதியுரைஞர் பாலாவால் முடிந்தது என்பதும் இந்தக் கருத்துருவ வேறுபாட்டு நிலைக்குள் நாம் காணமுடிவது ஆச்சரியமானது.


'பிரதேச சுயாட்சி' 'தன்னாட்சி' ஆகியவை பற்றி வலியுறுத்திய தாங்கள் சமஷ்டிவரை இறங்கிய விவகாரத்தை பாலா வெறும் தம் ஒருவரின் முடிவாகவோ, இயக்கத்தின் தீர்மானாகவோ காட்டவில்லை. அதற்கு மாறாக சர்வதேசத்தின் வழிகாட்டலில் - துறை சார்ந்த அறிஞர்களின் வழிப்படுத்தலில் - மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என அதை நியாயப்படுத்துகின்றார் அவர்.

சமஷ்டித் தீர்வு பற்றி ஆராய இணங்கியதன் மூலம் தனித் தாயகக் கோட்பாட்டைக் கைவிடவும் தாம் வழிசெய்யவில்லை என்று சப்புக்கொட்டி சமாளிக்கவும் அவரால் முடிகிறது.

அவற்றை அவரின் வார்த்தைகளின் ஊடாகப் பார்ப்பதன் மூலம் அவரது இராஜதந்திரத்தை - சாணக்கியத்தை - நாம் புரிந்து கொள்ளலாம். அதை அடுத்தவாரம் பார்ப்போமா?

(தொடரும்)

# ஒரு பத்தி எழுத்தாளனின் ஆக்க இலக்கியம்
# கே.எஸ்.சிவகுமாரனின் பிறமொழிச் சிறுகதைகள் சில




'கே.எஸ். சிவகுமாரனின் 'பிறமொழிச் சிறுகதைகள் சில' எனும் தலைப்பிலான நூல் வெளிவந்திருக்கிறது. வழக்கமாக 'சிவா' வழங்குவது போல பிறமொழிச் சிறுகதைகள் சிலவற்றை வாசித்துவிட்டு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ப தற்கிணங்க பத்தி எழுத்தாக ஏதோ சொல்லப் போகிறார் என்று நினைத்து பக்கங்களைப் புரட்டினால் அடடா! பன்னாட்டுச் சிறுகதைகள் சிலவற்றை தமிழில் தந்திருக்கிறார். முதல் கதையை வாசிப்பதற்கு முன்னரே 'எதுக்கு இந்த மனுஷனுக்கு இந்த வேலை' என்று மனதிற்குள் நினைத்தாலும் கதையை கண்கள் மேயத் தொடங்கியதன் பின்னர் அதற்குள் ஆழ்ந்து போய்விட்டேன். அருமையான கதைகளை அழகான மொழி நடையில் இரத்தினச் சுருக்கமாக தந்து 'ஆஹா' போட வைத்து விட்டார் சிவா.

'பத்தி எழுத்தாளர் சிவகுமாரன்! பத்தி எழுத்தாளர் சிவகுமாரன்' என்று சொல்லிச் சொல்லியே ஓர் ஆக்க இலக்கிய படைப்பாளியை அவ்வுலகிலிருந்து வெளியில் நிறுத்திவிடுகிற குற்றத்தைச் செய்கிறோமோ என்று தோன்றுகின்றது.

அத்தகைய மொழி அழகுடன், மொழிச் சிக்கனமுடன், இறுக்கமுடன் இப்பிறமொழிக் கதைகளை தமிழ்ப்படுத்தியுள்ளார் சிவா. முதல் பந்தியை பத்தி எழுத்தாளர் சிவகுமாரன் என்ற அடைமொழி இன்றி கே.எஸ். சிவகுமாரன் என்று ஆரம்பித்ததன் அடிப்படைக்காரணி அதுதான். இத்தொகுப்பில் இடம்பெறும் பதினொரு சிறுகதைகளும் பிறமொழிக் கதைகளின் தமிழாக்கக்கங்களாகும். 1960 முதல்1980வரை வெளிவந்த எனக்குப் பிடித்த பிறமொழிக் கதைகளுள் சிலவற்றை மாத்திரம் செய்து 'தமிழின்பம்', 'மித்திரன் வாரமலர்' போன்ற இதழ்களில் வெளிவ்ரச் செய்தேன்' என்கிறார் ஆசிரியர். சோவியத் நாடு, வீரகேசரி ஆகியவற்றிலும் பிரசுரமான கதைகளும் நூலில் உள்ளடக்கமாயுள்ளன. புளிப்பும் இனிப்பும், பரஸ்பர உடன்படிக்கை, அட்டியல், வலியாரும் மெலியாரும், எழுதுவினைஞரின் மரணம், புலம்பல், மண்ர கோலா, புயலில் சிக்கிய இலை, மிஸ்டர் ஓடி, ஒரு கோப்பைத் தேநீர், சொக்கோல் நிகியில் புதுவ்ருடம் ஆகிய கதைகள் நூலில் பிரசுரமாகியுள்ளன. முறையே கி.டி.மோப்பஸான் (முதல் 3 கதைகள் ), அன்டன் செகோவ் (அடுத்த 3 கதைகள்) இத்தாலிய எழுத்தாளரான நிக்கோலா மக்கிய வெல்லி, முல்க்ராஜ் ஆனந்த், இங்கிலாந்து ஹியூவோல்போல், நியூஸ்லாந்து கத்தரின் மன்ஸ்பீல்ட், ரஷ்ய எழுத்தாளர் ஏ.கோணனோவ் ஆகியோரின் ஆக்கங்களாகும்.




பிறமொழிகளில் வெளியான ஆக்க இலக்கிய படைப்புகளை தமிழ்ப்படுத்துவர்களை படைப்பாளிகளாக நம்மவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு குருட்டுத்தனம் நிலவுகிறது. இதன் எதிரொலித் தாக்கமோ என்னவோ நம்மில் ஆங்கிலம் முதலான மொழிகளில் புலமைமிக்கவர்கள் அப்பணியில் ஈடுபடுவதில்லை. உலகப் புகழ் பெற்ற புதினங்கள் எதுவும் இதுவரை நம்மவர்களால் மொழியாக்கம் செய்யப்படவில்லைஎன்றபெருங்குறை பாட்டுடனே நமது இலக்கிய உலகம் திகழ்கிறது. 'கொடிது கொடிது இந்த இலக்கிய வறுமை கொடிதிலும் கொடிது.'

சிறு கதைகள், கவிதைகள் என்பவற்றில் சிறிதளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கவிதைகள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கின்றன என்றபோதும் இன்றைய வளர்ச்சிப் போக்கின் நிலைக்கு இவை போதாமையாகும்.

அமரர் தலாத்துஓயா கே. கணேஷ் பிறமொழிக் கவிதை, கதை என குறிப்பிடத்தக்க அளவுக்கு தமிழாக்கம் செய்திருக்கிறார். அவரின் பின்னர் முயற்சிகள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. அவை சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பனவற்றுடன் நின்றுவிட்டன. நூல்வடிவம் பெறவில்லை. இப்போது சிவா கொண்டுவந்திருக்கிறார்.

தமிழ், ஆங்கிலம் இருமொழிகளில் புலமையும் அத்துடன், தொடர்ச்சியாக தற்போதும் இருமொழிகளிலும் இலக்கியக் கட்டுரைகள் எழுதிவரும் சிவாவின் பணிகள் போற்றுதற்குரியன. இது கண்டுகொள்ளப்படாமலே இருப்பது வேதனைக்குரியது. நாம் பல விடயங்களின் பெறுமதிகளை அறியாமலே வாழப்பழகிவிட்டோம். அதனால் தான் 'குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டம்' விட்டுக்கொண்டிருக்கிறோம். பத்தி எழுத்துக்கள் என்ற வகையில் பல்வேறு சித்தாந்தக்காரர்களுடன் முரண்பாட்டு மோதல்கள் துளிர்விடுவதனால் இத்தகைய புறக்கணிப்பு ஏற்படுவதாக இருக்கக்கூடும்.எனினும், பிறமொழிக் கதைகளை தமிழில் தருகிறார் என்கின்றபோது வாசகர் மத்தியில் அவரது கவனிப்பையும் தாக்கத்தையும் அது ஏற்படுத்தலாம்.

'தமிழ்ப்படுத்தல்' என்பது என்ன?' என்ற விசயத்தில் தெளிவும், விரிவான விளக்கமும் சிவா வைத்திருக்கிறார். அத்தகைய தெளிவும் உள்வாங்கியதை கலைத்திறனுடன் சாதாரண வாசகர் முன்னே ஆக்கபூர்வமாக சமர்ப்பிக்கும் மொழி ஆளுமை, ஆற்றல் என்பனவும் பொருந்திவருகின்றபோது மூலக் கதை தமிழ்க்கதையாகவே மாறிவிடுகிறது. அதுவே, தமிழ்ப் படுத்தலுக் குள்ள வெற்றி. அதில் சிவா வெற்றி பெற்றுள்ளாரா? என்ற கேள்வியை எழுப்பினால்'ஆம்' என்றே பதில் சொல்லவேண்டியதாகின்றது. இது அவருடைய எழுத்தின் பிறிதொரு பரிமாணம் என்றாலும் மிகையல்ல.


'தமிழாக்கம்' என்பது மூலக் கருவை மட்டுமே கொண்டு வருவதாகும். பேச்சுமொழி, பாத்திரங்கள் அவற்றின் சித்திரிப்பு மூலத்தின் தன்மையுடனே இருக்கவேண்டும். நமது பேச்சுமொழி, பிரதேசத்தன்மை, பாத்திர அமைப்பு என்பனவாக அக்கதைகளும் செம்மைப்படுத்தப்பட்டால் அது எந்த நாட்டின் கதை என்பது புரிபடாமலே அடிபட்டுப்போய்விடும்.

சிவாவின் தமிழாக்கம், இது எந்த நாட்டுக் கதை என்பதை துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது. மோப்ஸானின் 'அட்டியல்', அன்டன் செகோவின் 'வலியாரும் மெலியாரும்' போன்ற உலகப் புகழ் பெற்ற கதைகளின் மூல உள்ளடக்கம் இதுதான் என்பதை சட்டென விளங்கிக் கொள்ளச் செய்வதுபோல குட்டிக் கதைகள் வடிவில் தந்திருக்கிறார். சுருக்கமாகவும், அதே நேரத்தில் இறுக்கமாகவும் சொல்ல வேண்டும் என்பது அவர் மனத்துடிப்புப் போல் தெரிகிறது. 'அட்டியல்' போன்ற தொரு மிகச்சிறந்த கதையை இன்னும் கொஞ்சம் விரிவாகவே தமிழ்ப்படுத்தியிருக்கலாம் என்று தோன்றுகிறது. 'மத்தில்ட்டா' ஓர் அற்புதமான பெண் பாத்திரம். ஒரு தமிழ்ப்பெண்ணின் மனம் அவளுக்கிருக்கிறது. அனைத்துக் கதைகளும் சிறப்பானவை. எனினும், அவசர வாசிப்புக்கெனவே ஆசிரியர் அவற்றை வழங்குகிறார். சுருக்கமும், இறுக்கமுமாகவே அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. தெளிந்த தமிழ்நடை, வாசிப்புக்குச் சுவையாக இருக்கிறது. கதைகளை இன்னும் கொஞ்சம் விரிவாகவே சொல்லியிருக்கலாம். இத்துறையில் சிவா ஆழமாக கால் பதித்தல் வேண்டும். அது ஈழத்து தமிழ் இலக்கியத்துக்கு பெரும் பயனுடையதாக அமையும்.

**கே.வி.**

கே. எஸ். சிவகுமாரனுக்கு 71 வயதுதாகிறது. இப்போது இளைப் பாறியவராக சகல ஊடகங்களிலும் கல்விநிறுவனங்களிலும் கட்டுப் பாடற்ற சுதந்திர(Freelance) பத்தி எழுத்தாளராகவும் (Columnist) விரிவுரையாளராகவும் ஒலி பரப்பாளராகவும் இருந்து வருகின்றார். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் எழுதிவருகிறார். இதுவரை பதினேழு நூல்களை வெளியிட்டிருக்கிறார். இந்த திறனாய்வு நூல்களின் மத்தியில் 'சிவகுமாரன் கதைகள்', 'இருமை சிறுகதைத் தொகுப்பு' என்பனவும் அடங்கியுள்ளன.

கே.எஸ்.சிவகுமாரன்
21, முருகன் பிளேஷ்,
ஹவ்லொக் வீதி, கொழும்பு- 6.
தொ.இல:2587617- என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு அவருடைய புதிய நூலை பெற்றுக் கொள்ளலாம்.




## அவலங்கள் என்றால் என்ன அப்பு?

''புலம்பெயர் எழுத்தாளர்களுக்கு செங்கை ஆழியான் துரை சொன்னதை படிச்சனீங்களோ?''

''என்னவாம்?''

''எங்கள் அவலங்களை உங்கள் இருப்பிற்காக பயன்படுத்தாதீர்கள்.''

''அடிசக்கை! அப்புடிச் சொன்னவரே''

''பகிடி இல்லே அம்மான். மெய்யாகவே சொன்னவர்.''

''எப்ப? எங்கே?''

''ஞானம் சஞ்சிகை வாசிக்க மாட்டியலே! அதுலே செங்கை ஆழியான்ட நேர்காணலொன்று தொடர்ச்சியாகப் போகுதல்லோ. அதுலே சொன்னவர்.''

''அடடா! வாசிக்கிறனான் தான். ஒன்றை மிஸ் பண்ணிப் போட்டேனாக்கும். அது கிடக்கட்டும். பல நல்ல விசயங்களைச் சொல்லிக் கொண்டு போறார். அதுல இதுவும் ஒன்று. அவ்ர் சொன்னதிலே ஏதேனும் புழை இருப்பதாகத் தெரியே இல்லியே.''

இப்புடிச் சொல்லவும் இலக்கிய ஆர்வலர் பாம்பு கொத்துவதைப் போல வெகுண்டெழுந்தார். 'அதென்னென்று அவர் அப்புடிச் சொல்லலாம்' என்று கொதித்தார். நெருப்பு மேல் நிக்குமாப்போல் கரகமாடினார். விசயம் என்னென்றால் இலக்கிய ஆர்வலர் புலம்பெயர் எழுத்தாளர்கள் மீது பேரபிமானம் கொண்டவர். முதுபெரும் சஞ்சிகையாளர் ஒருவர், 'தமிழனை உலகத்தின்ட கொடுமுடியில் இருத்தப்போவது எங்களிண்ட புலம் பெயர் எழுத்தாளர்தாம்' என்று கொஞ்சக் காலம் மேடை தோறும் முழங்கிக் கொண்டு திரிஞ்சார். இப்ப திடீர் என்று செங்கை ஆழியான் போன்ற ஒரு கெட்டிக்காரர் இப்புடி வெட்டி முறிச்சுச் சொன்னதும் கலங்கிப் போட்டார். அதுதான் அரிவாளை தூக்கிக் கொண்டு கிளம்பியிருக்கிறார்.

''அப்பு! உதுக்குப்போய் ஏன் இப்புடிச் சாடி கொதிக்கிறாய். கருத்தென்றால் உப்புடித்தான், ஆளுக்கு ஆள் வித்தியாசப்படும்.''

''செங்கை ஆழியான்ட கருத்துக்க எதிராகலே முருகபூபதி துரை அவுஸ்திரேலியாவிலிருந்து பதில் எழுதியிருக்கிறார் தெரியுமோ உங்களுக்கு.''

''என்ட தம்புரானே! என்னவாம்?''

''எமது தமிழ் மக்களின் அவலங்களை எழுதித்தான் செங்கை ஆழியானும் தன்ட இருப்பை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்று மிடுக்காக எதிர்க்கேள்வி கேட்டிருக்கிறார்.''

''கிழிஞ்சுதுபோ!''

## கதையையும் மாத்தும் கலைத்துவம் கண்டியோ ராசா

''தமிழனைப்போல கலைத்துவம் மிக்கவன் ஒருத்தரும் இல்லையென்று ஒருவர் சொல்லியிருக்கிறார்.''

''அடிசக்கை ஆரது.?''

''ஒரு வெள்ளைத்துரை''

''என்ட தம்புரானே! மெய்யே எங்களிண்ட தமிழ் புலவர் பெருமான் யாரோ சொன்னவங்கள் என்றல்லோ நினைச்சனான். நல்ல பகிடி எப்ப சொன்னவராம்.''

''அவர் ரொம்பக் காலம் தமிழ் நாட்டுலே இருந்தவர். தமிழ்ச் சினிமா திலகங்களான சிவாஜி, எம்.ஜி. ஆரெல்லாம் கொடி கட்டிப்பறந்த காலத்திலே அங்கே குந்தி இருந்தவர்''

''அட, அப்ப நிறையச் சமாச்சாரம் சொல்லியிருப்பார். வெள்ளையங்கள் என்றால் வெள்ளையங்கள்தான். எங்கே சொல்லுங்கோவன்.''

''கலைஞர்களை தெய்வமாக மதிக்கிற மக்களை தமிழ்நாட்டுலே தான் காணமுடியும். சிவாஜி ரசிகன், எம்.ஜி .ஆர் இரசிகன் என்று ரெண்டு பக்கமாக பிரிஞ்சி சண்டை போட்டாலும் தங்களிண்ட தலைவன் எப்படிப்பட்டவர், என்ன மாதிரி கதையிலே நடிப்பார், எப்பிடிப்பேசுவார் பாடுவார், எப்பிடி சண்டை போடுவார் என்று அச்சொட்டாக தெரிஞ்சு வைச்சிருப்பாங்கள்.''

''ஏன் எப்படி அவுங்களுக்கு ஏத்த மாதிரி கதைகளை மாத்துவாங்கள் என்று தெரிஞ்சு வைச்சிருக்கவில்லையே!''

''அட மோனே! அதைத்தான் சொல்ல வாரன்.''

''அப்புடியா!''

சிவாஜி நடிச்ச கட்டபொம்மன் சக்கைப்போடு போட்டதல்லே.''

''உம்''

''சிவாஜி ரசிகர் அவருடைய சிம்மக்குரலிலே தன்னை இழந்து அதுவும் அவர் தூக்குல தொங்கினகடைசிக் காட்சியைப் பார்த்துப்போட்டு கண்கலங்கி, உதடுகள் விசும்ப வெளியிலே வந்து கொண்டிருந்தார். தியேட்டருக்கு வெளியிலே ஒரு எம்.ஜி.ஆர். இரசிகரைக் கண்டுட்டார்....''

''என்ட தம்புரானே! அடிதடி என்று கொழுவல் ஆரம்பிச்சுட்டுதோ?''

''எம்.ஜி.ஆர் இரசிகர்களைப் பார்த்து சிவாஜி இரசிகன் கேட்கிறார்.... 'ஏஹோ! நைனா! பாத்தியாலே நம்ம ஆளு எப்படி வசனம் பேசி, வெள்ளைக்கார துரையை கிழி கிழின்னு கிழிக்கிறாரு. எம்.ஜி.ஆராலே அப்படி நாலு வசனம் பேச முடியுமலே பேசமுடியுமா.......''

''சரியாத்தானே கேட்டவர்.''

''சரிதான்! சரிதான் அதுக்கு எம்.ஜி.ஆர். ரசிகன் என்ன சொன்னாரென்று கேளுங்கோவன். 'சும்மா பீத்தாதே நைனா. நம்ம தலைவரு மட்டும் கட்ட பொம்மனா நடிச்சிருந்தாருன்னா குபீர்' ன்னு பாஞ்சு வெள்ளைக்காரன் வாளை உருவி தூக்குக் கயிரை அறுத்துக்கின்று நாலைஞ்சி பேரோட பைட் குடுத்துன்னே வெளியிலே வந்து, மாடியிலேயிருந்து குதிச்சி குதிரை மேலே தாவி தப்பிச்சுப்போயிருப்பார். உன் ஆளு சும்மா கத்தி கத்தி கப்சா உடுரான்.''

''அடப்பாவி''

# கவிதைப் புனல்

தயாரிப்பு: யூ.எல்.எம்.அஸ்மினா

## முட்களுக்காக முளைத்திருக்கும் கால்கள்

வழியில் செறிவாக கிடக்கிறது
முட்பொறிகள்
தூரம் சுருங்கி சுருங்கி
நீள்கின்றன
பயணங்களின் குறிப்புகளை
யாரும் மீள வாசிப்பதாயில்லை.
நான் கால்களாகவே
தனித்திருக்கிறேன்.

வண்டிகளில் எந்த புரிதலுமில்லை.
சக்கரங்களின் வட்டம்
சதுரமாகிப்போக
நகர்வுகள் முடங்கிவிடுகின்றன
யாருடைய தோல்களிற்கும்
எனது கைகள் எட்டவில்லை.

மாலை நேரங்கள்
கொலை செய்யப்பட
எனது காலைகளில்
சூரியன்கள் உதிக்காமல்
வழி நீண்டு செல்கிறது.

ஏதோ ஒன்று
வெற்றிடமாயிருக்கிறது
பகிர வேண்டிய விடயங்கள்
நிறைய இருக்க
விருந்தில்லங்களுக்கு
தூரமாகவே வண்டிகள்
திரும்பிவிடுகின்றன.

எந்த வழியும் முட்களின்றி
இருப்பதில்லை.
எல்லாமுகங்களிலும்
ஒரு நாள் யதார்த்தம்
வெளிக்கும்.
எனது கால்கள்
முட்களுக்காகவே
முளைத்திருக்கலாம்.

■ தீபச்செல்வன்

## நட்பா? காதலா?

யன்னல் வைக்கிறார்
வெளிச்சம் வரவா?
காற்று வரவா?
நீ சிரிக்கின்றாய்
என்னைப் பார்த்தா?
என்னோடு வரும்
உன் நண்பனைப்
பார்த்தா?
ஆசிரியர் படிப்பிக்கிறார்
கடமையா? சேவையா?
நீ என்னோடு பழகுவது
நட்பா? காதலா?

■ த.மதன்
கிழக்கு பல்கலைக்கழகம்

## கோல்பேஸ் காதல்

வழமையாய்
குடைகள் பிடிக்கப்படுவது
மழையில் நனையாமல்
இருப்பதற்காய்
ஆனால்
இங்கும் குடைகள்
பிடிக்கப்படுகின்றன.
(முத்த) மழையில் நனைவதற்காய்!

■ புலோலியூர் இத்தி

## சிறப்பில்லை

இயல்பு நிலை
வடகிழக்கில்
இல்லை!

ஈவிரக்கமற்ற
படுகொலைகள்
இமயத்தின்
எல்லை!

உயர்ந்து செல்லும்
பொருட்களின் விலை
குறைந்தபா டில்லை!

ஊழல் பெருச்சாளிகள்
தொகை கூடியதால்
தொல்லை!

நாளாந்தம் இடம்
பெயர்ந்து செல்லும்
வடகிழக்கு
தமிழ் மக்களது
அகதி அவலம்
ஓயவில்லை!

இலங்கையில் இரண்டு
பட்ட இனங்களது
மனங்களுக்குள்
சமாதானத் தேன்
பாயவில்லை!

■ சேனையூரான் மூதூர் கிழக்கு

## பெருநாள் பிறந்த தினத்தினிலே

கள்ளங் கர வு இல்லாமல்
கயமைக் குணமுங் கொள்ளாமல்
உள்ளம் தெளிந்த நிலைப்பாட்டில்
உயர்வாம் நோன்புக் கடன்தீர்த்து,
கொள்ளை இன்பக் களிப்பினிலே
குளித்தோம்! மலர்ந்த பெருநாளில்
வெள்ளப் புனலாய் நெஞ்சமெலாம்
வெளுக்க; இறையைப்
பிரார்த்திப்போம்.

சொல்லும் செயலும் அணிதாங்க
சுந்தர நோன்பில் பணிதாங்கி
அல்லும் பகலும் அருளாளன்
அன்பை நச்சி வழிபட்டோம்.
ஒல்லும் வகையில் நமைநாடி
ஒண்டிய ஏழைக் கீந்துவந்தோம்
வெல்லும் வாழ்க்கை பெருநாளில்
வார்ப்பாய்ப் பதியனும் நிலைபெறாய்.

பெருநாள் பிறந்த தினத்தினிலே
பிரிவினை வேண்டாம் மனத்தினிலே
ஒருநா ளேனும் பழிவினைகள்
உருவா காமல் எமைக்காப்போம்
திருவார் நபிகள் கோமானின்
திவ்விய வழியில் நாம்படர்ந்து
வருநா ளெல்லாம் வளங்காண்போம்
வாழ்வில் இதுவே திருநாளாம்

■ அனலக்தர்

## தொலைவில்!

நட்சத்திர விளக்குகள் பதிக்கப்பட்ட
வானக் கூரையின் கீழ்,
ஜெகஜோதியான ஒளி வெள்ளம்
கடற் பிராந்தியம் முழுவதும்!
துள்ளும் மீன்களும்,
துள்ளும் மீன்களையள்ளும்
வலைகளும்....
கடல் நீர்ப் பரப்பில்!
இடையிடையே
ஊரும் கப்பல்கள் உயிர்ப்படைவதும்
விரைவதுமாய்....
எதிரும், புதிருமான நேரடிச் சந்திப்பு
பயங்கர ஓசைகளாக...
கடலின் நீலமய நீர்ப்பரப்பு
சிவப்பு நிறத்தில்!
உயிர்ப்படைந்தவை கப்பல்களல்ல;
கப்பல்களைக் கப்பல்களாக்கி,
நகர, வரைய வைத்து, முடிவில்
சமர்க்களமாக்கி மோத வைத்த
மானுடப்படைப்பு!
துள்ளிய மீன்களில்
தொலைந்ததுபோக,
மீதி மிக, மிகத் தூரத்தில்!
மனிதமும் தான்!

■ ஏறாவூர் தாஹிர்

## கருவாச்சிக் கிழவியின் கடைசி யாத்திரை

தள்ளாடித் தளராடி வயதாகி வாழ்வினிலே
புல்லோடு புழுவாகிப் போராடும் சாவினிலே
எல்லோரும் வாய்க்கரிசி போட்டுத்தான் வாயினிலே
ஏமாற்றப் பார்க்கின்றார் பணத்துக்காய் பாரினிலே

கருவாச்சிக் கிழவியின் கவலைமிகு வாழ்வுதனை
கண்ணெடுத்தும் பார்க்காத எங்கிருந்தோ வந்த அவன்
கேட்கின்றான் பங்குதனை சேர்த்து வைத்த சொத்துதனை
கால் வயிறு பாராமல் கருவாச்சி சேர்த்ததினை

அண்ணனென்று வந்தான் வாய்க்கரிசி போட்டான்
அழியாத அன்புதனை அரிசியாய் பொழிந்தான்
ஏழேழு வருடங்கள் காணாத சொந்தத்தினை
ஏழே நிமிடத்தில் நிலைநாட்ட முயன்றான்

சொத்துதனைப் பிரித்தார்கள் சீர்வரிசை சொத்து அது
செம்பானை ஒன்று செவ்வெள்ளிக் குடமொன்று
பாக்கிடித்தே தேய்ந்த பாழான உரலொன்று
பாதி கிழிந்து பல்லிளிக்கும் பாயொன்று

அண்ணனுக்கு அன்புள்ள 'அறுணாக் கொடி'யொன்றும்
அளந்து எடுத்திட்ட பிணந்தூக்கும் சவப்பெட்டியும்
சொத்துகளை மகிழ்ச்சியுடன் ஈய்ந்திட்ட கருவாச்சி
சொந்தங்கள் கதறியடி சொர்க்கலோகம் செல்கின்றாள்.

■ நாரஹேன்பிட்டிய ரஜனி

## தயார் நிலை

போ நாயே என்றுன்னைப் பேச முடியவில்லை
தூரத்துச் சொந்தம் நீ- ஆனாலும்
யார் கண்டார் நீ பிழையா
நான் பிழையா இறைவனுக்கே வெளிச்சம்
இருக்கும் போது கோட்டுக்கேறிய
வழக்கில் நீதி சாய்ந்தது.
நேற்றுப் பெய்த மழைக்கு
முளைச்ச குஞ்சுக் காளானாய் நீ
உன் அந்தரங்கங்கள் அதே
மழையில் தூவான மடிந்துக்கிப் போயின.

மீண்டும் வந்தாய்
தோற்றுப் போய் என்னிடம்
சமாதான உன் தோரணை
தொனிக்கிறது....
பேச்சுவார்த்தை சார்பில்
சலனங்கள் பலித்தன...

ஆனாலும் நீ ஒரு 'ரிஷிகாளான்'
என்பது நினைவுவர- நனைந்துபோன
உன் அந்தரங்கங்களை
நினைவு படுத்துகிறேன்....

விசயனுடன் எழுநூறு
சகாக்கள் வந்தார்களா?
சிங்கத்துடன் புணர்ந்த கதை
சுக்கு நூறானது மனதில்...

எழுந்தேன்...
இனியும் பொறுத்திருக்கக்
கூடாது
அம்பராத் துணியில்
அம்புகளை அடுக்குகிறேன்
போர் முரசு ஒலிக்கட்டும்...
இதோ தயார்!

■ நல்லூர் சுபாஷினி ஜெகநாதன்

## சுமை

சிலுவை சுமந்ததுண்டா? - இல்லை
சுமக்க முயற்சித்ததுண்டா?
சுமக்க நினைத்ததாவது உண்டா?
சுமக்க விரும்பினால் சுமந்து பார்
காதலை
சுமையில் சிலுவையே தோற்கும்
இன்பச் சுமை காதல்...

■ திருகோணமலை ராஜா

## குறுங்கவிகள்

### வாழ்க்கை

இளங்கொடி
நிலத்திலே படர
கிழ மரம் சுமக்கிறது
பூக்களை

### வழி தவறி...

மலருக்கு வராத
வண்டொன்று
பறக்கிறது வழி தவறி...

### பூக்கள்

கொட்டும் மழையில்
நனைந்த மரங்கள்
தலை துவட்டும் போது
அழுகின்றன பூக்கள்

■ மாவனல்லை உ.நிசார்

# உணர்வுகள்

ஏ.ழநிலா

29

## சந்தம் சிந்தும் வண்ணச் சிந்து இசைத்தார்! சாற்றும் கவியால் எங்கள் நெஞ்சை அசைத்தார்!

■ கவிஞர் கிண்ணியா அமீர் அலி



காற்றுக்குக் கண்ணில்லை. புகையையும் அது மேலே கொண்டு போய் விட்டது. மேலே வந்ததும் புகைக்கு தலைகால் புரியவில்லை. சூரியனையும் சந்திரனையும் கர்வத்தோடு பார்த்தது. ''நான் உங்களைப் போன்றவன். உங்கள் ராஜ வீதியில் நானும் பவனி வருகிறேன்'' என்றது. மேகத்தை பார்த்துச் சொன்னது ''உன்னைப் போலவே நிறம், உன்னைப் போலவே உருவம், உன்னைப் போலவே உயரத்தில் இருக்கிறேன், எனவே, நானும் மேகம் தான்'' என்றது. சில முட்டாள் மயில்கள் புகையை மேகம் என்று மயங்கி தோகை விரித்தாடின. மேகம் 'கடகடவென' சிரித்துவிட்டு மழையாக இறங்கியது. நனைந்து சிலிர்த்த பூமி சொன்னது ''பெருமை மேலே ஏறுவதில் இல்லை கீழே இறங்குவதில் இருக்கிறது'' என்று; இவ்வாறுதான் இலக்கிய உலகிலும் சில காவாலி 'காற்றுக்களால்'புகழ் வானத்தின் உச்சியில் ஏறிய புகைகள் தாம் புஸ்வாணமாய் போய் விடுவோம் என்பதை புரிந்து கொள்ளாமல் புகார்களைப் பார்த்து புலம்பித்திரிகின்றன. கொண்டல்களோ இவைகளைப் பார்த்து கொக்கரித்து தம்தகைமைகளை எண்ணித் தளம்பிக் கொள்ளாமல் தன்னடக்கத்தோடு புன்னகைக்கின்றன.

கவிஞர் அமீர் அலியை சந்திக்கும் வரைக்கும் இவர் படைப்புகளில் தோய்ந்து சிந்திக்கும் வரைக்கும் 'அந்தகார' அறிவுள்ள 'அந்த ரகமான' படைப்பாளியாகவே இவரும் இருப்பாரோ என எண்ணியிருந்தேன். ஏனெனில் நாடறிந்த படைப்பாளிகள் என்று தமக்குத் தாமே மகுடி ஊதும் பாம்புகளின் பரிச்சயம் அந்த எண்ணத்தை ஏற்படுத்தி இருந்தது. ஆனால் இவரிடம் இருக்கின்ற எளிமையையும் இவர் படைப்புகளில் இருக்கின்ற வலிமையையும் 'வாசித்துணர்ந்தபோது' உண்மையில் பிரமித்தே போனேன். இவர் புகையல்ல மேகம் என்பதை இவர் படைப்புகளையும் தரிசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள்.

திருகோணமலை மாவட்டம் மூதூர்த் தொகுதியின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஹூம். ஏ.ஆர்.ஏ.எம். அபூபக்கர் அவர்களின் மூத்த புதல்வி மஹ்பூபா ஆசிரியை அவர்களினதும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஜனாப் ஏ.எஸ்.ஏ அப்துல் அலி அவர்களினதும் திருமணச்சோலையில் நான்காவது நறுமலராய் 1967.10.9 இல் மலர்ந்தவர் கவிஞர் கிண்ணியா அமீர் அலி. ஆரம்பக்கல்வியை கிண்ணியா அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையிலும் உயர் கல்வியை கிண்ணியா மத்திய கல்லூரியிலும் கற்றவர். 'அம்புலிமாமாவை' காதலித்துக்கொண்டிருந்த இவருக்கு 'யாப்பருங் கலக் காரிகையின்'கையைப்பிடித்துக் கொடுத்தவர் கவிஞர் ஏ.எம்.எம்.அலி ஆவார்.

அதனால் யாப்பிலக்கணத்திலே சங்கப் புலவர்களே யாசகம் கேட்கும் அளவுக்கு சந்தக்கவிதை இசைத்து தனது சந்தனக்கருத்துக்களால் சங்க தமிழுக்கு சரிகை கட்டி சாகாவரம் பெற்ற கவிதைகளை பாடிச் சென்றிருக்கிறார். வார்த்தைகள் வாலாயப்பட்ட இக்கவிஞர் வாவென்று அழைக்கும் முன்பே கவிதைகள் வந்து வாலாட்டி நிற்கின்ற வரகவிகளில் ஒருவர். இவர் பா- எனும் முன்பே பாட்டுப்பூக்கள் வந்து இவர் பந்தலில் மலர்ந்து பாவாடை அவிழ்க்கிறதாம். சிறுகதைதான் இந்த 'சிபி'யின் சிம்மாசனம். 1984இல் 'பதவி'என்ற கன்னிக்கவிதை மூலம் இலக்கிய உலகின் பார்வையை தன் பக்கம் திருப்பிய இவர் படைத்த கவிதைகள், பாடல்கள், சிறுகதைகளால் இவர் நாமம் இன்றும் என்றும் பல உள்ளங்களில் நங்கூரமிட்டு நிற்கும். யதார்த்தம் தொனிக்கும் இவரது படைப்புக்கள் இலங்கையின் தேசிய பத்திரிகை அனைத்திலும் பிரசுரம்பெற்றுள்ளன. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வலம் வந்துள்ளன.

''1988ஆம் ஆண்டு'இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு 'ஒரு நாடகம் ஒலிபரப்பாகிறது' என்றொரு நாடகம் எழுதி அனுப்பியிருந்தேன். நாடக ஒத்திகையை நேரில் பார்வையிட ஆர்வமாக இருந்தால் வந்து கலந்து கொள்ளலாம் என்று வானொலி நிலையத்திலிருந்து நாடகத் தயாரிப்பாளர் எம். அஸ்ரப்கான் அறிவித்தார். கிண்ணியாவிலிருந்து கொழும்பு செல்வதற்குரிய வசதிகள் என்னிடம் இருக்கவில்லை. எனது தாயார் பக்கத்து வீட்டு 'கன்னிமாமி'யிடம் இருநூறு ரூபாய் கடன் வாங்கித் தந்து என்னை கொழும்பு வானொலி நிலையத்துக்கு அனுப்பி வைத்தார். அன்று வந்ததைப் பயணம் இது. கடந்த 20 வருடமாக கொழும்பிலே வசித்து வருகிறேன். 1988ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை [illegible] நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வருகிறேன்.

தற்பொழுது அரச,தனியார் தொலைக்காட்சி, வானொலிகளில் தயாரிப்பாளர்களாக, அறிவிப்பாளர்களாக கடமைபுரிவோர்கள் அந்நாட்களில் வானொலிக் கலைஞர்களாக இருந்த நல்ல நண்பர்கள் என்பதை நினைக்கும் போது பூரிப்பாக இருக்கிறது. முதன்முதலாக இலங்கை ரூபவாஹினி 'ஒளித்தென்றல்' இசை நிகழ்ச்சிக்கு பாடல் இயற்றும் வாய்ப்பை தந்தவர் தயாரிப்பாளர் எம்.என் ராஜா அவர்கள். எனது முதல் பாடல் 'பூபாளம் பாடு பூங்குருவி' ஆகும். 'சந்தனமேடை' இசை நிகழ்ச்சியில் பல மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பாகியிருக்கின்றன. சரத் விக்ரம அவர்களது இசையமைப்பில் ஏ.எம். ரசீட் அவர்கள் பாடிய 'பணமும் உறவும் நகரும் சகையும்' என்ற தத்துவ பாடல் பலரதும் பாராட்டைப் பெற்றது. பல கவிஞர்களின் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாக்களின் போது வாழ்த்துக்கவிதை பல விதமான சந்தங்களில் பாடி இருக்கிறேன். வானொலி, தொலைக்காட்சி கவியரங்குகளில் பங்குபற்றியுள்ளேன்.'' என்று தனது அனுபவத்தை ஒளிவு மறைவின்றி படைப்பாக்கும் கவிஞர் தனது கலை இலக்கிய பயணத்தில் கரம் கொடுத்து உதவியவர்களை ஞாபகித்தார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் நிகழ்ச்சி தயாரிப்பாளர் அல் ஹாஜ் யூனுஸ் கே.ரஹுமான் அவர்கள் தயாரித்து வழங்கும் 'கவிதைக்களம்' என்ற நிகழ்ச்சியை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக தொகுத்து வழங்கி வருகின்றார். திருகோணமலையில் இடம்பெற்ற இனக் கலவரத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட 'குருவிக் கூடு' என்ற இவரது நீண்ட கவிதை 10 வாரங்களாக தினகரன் செந்தூரத்தில் வெளிவந்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. இவரது படைப்புக்களுக்கு தோரணம் கட்டித் தருவோம் என்று தோப்புக்கரணம் போட்டவர்கள் காரணம் ஏதுமின்றி காலவோட்டத்தில் [illegible] காலை வாரியதால், இவர் கனவுகளுக்குப் பாடை கட்டியதாகவும் பாவம்! விரக்தியின் விளிம்பில் நின்று இன்று விம்மிக் கொண்டிருக்கிறார்.

2001 ஆம் ஆண்டு யாழ் கலாமன்றம் த. மணி அவர்களது ஏற்பாட்டில் அமைச்சர் பி.தேவ ராஜா அவர்களினாலும், 2002ஆம் ஆண்டு புதிய அலை கலை வட்டத்தின் 22வருட பூர்த்தி விழாவிலும், இன்னும் பல இலக்கிய நிகழ்வுகளிலும் வழங்கப்பட்ட பொன்னாடைகளும் பொற்கிழிகளும் இவரால் கௌரவம் பெற்றுள்ளன. 2002ஆம் ஆண்டு பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் போது இளம் படைப்பாளிகளுக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

நாடறிந்த கவிஞர் அல் அஸூமத் அவர்களின் அன்பு மகளான பிந்தான் நோனாவை கரம் பிடித்திருக்கும் இவருக்கு முஹம்மட் ரியாட், பாத்திமா நஸ்லியா, அப்துல் அஸீஸ் ஆகிய மூன்று செல்வங்கள் இருக்கின்றனர்.

''பல்கலைக் கழகம் சென்று
பட்டம்நான் பெற்ற தில்லை!
பள்ளியில் கற்ற தெல்லாம்
பாதிதான்; 'ஓ.எல்' மட்டும்!
கல்வியில் கரைகண் டால்தான்
கவிஞனாய் ஆக லாமோ?
புள்ளியாய்ப் பேரெ டுக்கப்
புத்தகப் படிப்பெ தற்கு?''

என்று கூறும் கவிஞ ரின் படைப் புக்கள் நூலுருவாக வேண்டும் என்பதே எல்லோரதும் அவா. அந்த ஆசையை காலக்கிரமத்தில் இவர் பூர்த்தி செய்வார் என எதிர்பார்க்கின்றோம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 285

சொற்சிலம்பம் 285 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஒக்டோபர் 27ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 11 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.283 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 283

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | ஞ் | 2 ஞா | 3 த | 4 வா | 5 ச | ம் | ■ |
| ந் | ■ | 6 ப | ல | வி | த | ■ | 7 மா |
| 8 தா | 9 ப | க | ம் | ■ | 10 க | 11 போ | தி |
| 12 தி | ன | ம் | ■ | 13 ச | ம் | சா | ரி |
| ■ | ங் | ■ | 14 கோ | டை | ■ | க் | ■ |
| 15 மு | க | 16 ம | ன் | ■ | 17 ப | கு | 18 தி |
| 19 து | ட் | டு | ■ | 20 த | ர | ■ | ற |
| 21 கு | டி | ■ | 22 க | ண் | ணி | ய | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 283

1. **எம்.ரஞ்சன் பஸ்டியன்,**
   40/4 பீ, பீட்டர்ஸ் லேன்,
   தெகிவளை.
2. **யோ. லிசாந்தினி,**
   'தரன் கொம்யூனிக்கேசன்'
   மகாரம்பைக்குளம், வவுனியா.
3. **ச.நயோமி,**
   21, மடத்துவீதி,
   மன்னார்.

### பாராட்டுப் பெறுவோர்

1. **ஏ.ராஷிதா பேகம்,** பொத்துவில்-02.
2. **திருமதி திலகேஸ்வரி சிவஞானம்,** டிக்கோயா.
3. **எம்.என்.எப்.நிஷ்ரா,** வெலிகம.
4. **நா.சுந்தரலிங்கம்,** முல்லைத்தீவு.
5. **சி.சிவோதன்,** சாவகச்சேரி.
6. **எம்.எம்.டி.இஸ்மாயில்,** பலாங்கொடை.
7. **செல்வி தர்ஷினி கந்தசாமி,** மல்வத்தை-02.
8. **எம்.எச்.எம்.இஸ்ஸடீன்,** கொழும்பு-14.
9. **திருமதி எம்.ஜோதிநாதன்,** யாழ்- கல்லடி.
10. **ஏ.ஆர்.எம்.இறுசாத்,** கல்கிசை.
11. **வி.கார்த்திகா,** கொழும்பு-06.
12. **பா.தேவராசா,** மட்டக்களப்பு.
13. **ஏ.பி.உதுமாலெவ்வை,** கொழும்பு-02.
14. **எம்.ஏ.அத்தாஸ்,** மாத்தறை.
15. **க.கமால்தீன்,** ஏறாவூர்-03.

## சொற்சிலம்பம் போட்டி இல. 285

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | ■ | |
| 11 | | ■ | 12 | | ■ | 13 | |
| | ■ | 14 | | ■ | 15 | | |
| ■ | 16 | | ■ | 17 | | | ■ |
| 18 | | | 19 | | ■ | 20 | 21 |
| 22 | | ■ | 23 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.285

**இடமிருந்து வலம்**

1. பிறப்பு நிகழ்வு.
4. சமய.
6. (மொட்டை) வழி(த்தல்).
7. இதற்கு அடைக்கும் தாள் உண்டோ?
8. விலக்குதல்.
11. மேரு.
12. பெரியவர்/ மேலதிகாரி.
13. போக அல்ல.
14. மனிதன் போன்ற மேல் உயிர்களை ஒருவகையிலும் ஏனையவற்றை மறு வகையிலும் வகுக்கும்பிரிவு.
15. தமயந்தியை மறந்தவன்.
16. சிங்கம்.
17. மரக் கொப்பு இரண்டாகப் பிரிந்து வளர்வதால் உருவாவது.
18. பாணம், தனு - இரண்டும் சேர வருவது.
20. நசி.
22. துவானத்துளி.
23. காப்பியப் பாத்திரம். முன்னாள் பிரபல தமிழ் நடிகை.

**மேலிருந்து கீழ்**

1. அமைச்சர்களில் சிரேஷ்டர்.
2. யுத்தம்(சண்டை).
3. போகும் பாதையில் உதவி.
4. அரசன்/ கணவன்/ தலைவன்.
5. மனைவியை இழந்தவன்.
7. இரவு.
9. பெறுமதி.
10. நிலம்.
13. அமாவாசைக்குப் பின்னரான சந்திரன்.
14. வேறுபடு/ மாறுபடு/ கெட்டுப் போதல்.
15. புதிய /தற்போதைய.
17. படிப்புடன் சம்பந்தப்பட்ட துறை.
18. ஒன்றைச் சுட்டும் சொல்.
19. கடவுச் சீட்டில் பெறப்படும் பயண அனுமதிக்கு இப்படிப் பெயர்.
21. நகு/ புன்னகை செய்.

# ஒன்பதாவது பெண்

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி)*

"விளக்கத்துக்கு அவசியமில்லை. படிக்கலாம்..." என்றாள்.

மறுபடியும் பாடம் தொடர்ந்தது... ஆம். அவர்கள் காட்டுமிராண்டிகள்தாம். சாக்கடையில் வாழ்ந்தவர்கள்தாம். நாம் இருபத்திரண்டாம் நூற்றாண்டில் எவ்வளவோ மாறிவிட்டோம். எல்லாம் எய்திவிட்டோம். உலகச் சமாதானம், ஜூப்பிட்டரில் காலனி, தேசங்கள் கிடையாது. உலக யுத்தங்கள் கிடையாது. ஆயுதங்கள் இல்லை. எவ்வளவு அமைதி! எவ்வளவு சந்தோஷம்! எவ்வளவு சுதந்திரம்! நித்யாவின் மனம் அலைந்தது. ஏன் இப்படி மெலிதான கேலியுடன் எண்ணிக் கொண்டிருக்கிறேன்? எனக்கு ஏதோ உடல் நலம்தான் சரியில்லை. நான் கவலைப்படுகின்றேன். இந்த நூற்றாண்டில் கவலையே இருக்கக்கூடாதே...

தூக்கம் இல்லையா? அதற்கு ஒரு சாதனம்.

நாக்கு கேட்கும் ருசிக்குப் பட்டனைத் தட்டினால் சுடச்சுட உணவு.

தனிமையாக இருக்கிறதா? நட்பு தேவையா...?

சென்ட்ரலுக்கு விவரம் சொன்னால் போதும்.

ஆணா? பெண்ணா? உயரம்? நிறம்?

ஏதேனும் பிரத்தியேகக் குணாதிசயங்கள்?

ஐந்து நிமிடங்களில் கேட்ட அளவுகளுடன் குணாதிசயங்களுடன் ஓர் அழகான ஆண் வந்து நிற்பான். 'என் ஆருயிரே' என்பான்.

அப்பாவைப் பார்க்க வேண்டுமா? ஒரு விரல் நுனியில் திரையில் தெரிவார். "நித்யா சுகமாக இருக்கிறாயா- உணவு எடுத்துக் கொள்கிறாயா?- எல்லாம் நலம்தானே- ஏதாவது வேண்டுமா?- பதினைந்து நிமிஷங்களில் ஒரு ரொக்கெட் பிடித்து வந்துவிடலாம்..." மனத்தில் நினைத்துப் பார்த்தால் போதும். எதுவும் கிடைக்கும். மனதின் எல்லைதான் தேவையின் எல்லை. சங்கீதம், நடனம், உடற்சுகம்... இருந்தும் என் மனம் அலைகிறது. நிச்சயம் எனக்கு உடல் நலமில்லை. அழுகை வருகிறது. குழந்தைகளைத் தவிர வேறு ஒருவரும் அழுவதில்லையே! எனக்கு என்ன குறை.... என்னிடம் என்ன தவறு?

"நித்யா! நித்யா!" பாடம் முடிந்துவிட்டதா என்ன?

"குழந்தைகளே, அடுத்த பாடம் வேண்டுமா,விளையாடச் செல்கிறீர்களா?"

"அடுத்த பாடம்! அடுத்த பாடம்!" என்ற ஆர்வ கோஷ்டி கானம்.

மொனிட்டரில்,"நித்யாவைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்திருக்கிறார்" என்ற செய்தி பளிச்சிட்டது. குழந்தைகள் அடுத்த பாடத்தின்அதிவேக கோட்பாடுகளின் சிக்கலான தத்துவங்களில் ஆழ்ந்திருக்க, நித்யா மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். மௌனமான வகுப்பறைகளைக் கடந்து தின வெளிச்சத்துக்கு வந்தாள். வாயிற்படியில் அவன் உட்காா்ந்திருந்தான். யார் அவன்?

அவளைப் பார்த்ததும் சிரித்தான்.

"என்னை அடையாளம் தெரிகிறதா? ஒரு தடவை என்னைக் கூப்பிட்டிருக்கிறாய்".

"ஞாபகம் இல்லை. எத்தனையோ பேரைக் கூப்பிட்டிருக்கிறேன்."

"என் பெயர் ஆத்மா."

"அப்படியா? என்ன வேண்டும்?"

"உன்னை மறுபடியும் கண்டுபிடிக்க மிகவும் முயற்சி செய்தேன். அன்றைக்குப் பாதியில்விட்டுச் சென்றுவிட்டாய்."

"என்றைக்கு, எந்தப் பாதி, எதுவும் ஞாபகம் இல்லை எனக்கு. என்ன வேண்டும் உனக்கு?"

"இன்று மாலை உன்னை என் வீட்டுக்கு அழைத்துச்செல்ல விரும்புகிறேன்".

"எதற்கு?"

"பேசுவதற்கு. பேசினபின் உனக்கு விருப்பம் இருந்தால் என்னுடன் தூங்கலாம். அதற்கு மேலும் விருப்பம் இருந்தால் இருவரும் ஒரு வருஷம் சேர்ந்து இருந்து பார்க்கலாம். அப்புறம்..."

"முதலில் நீ யார்?"

"நித்யாதானே உன் பெயர்? நித்யா, நான் உன்னைப் போல் ஒருவன்."

"என்னைப் போல் என்றால்..."

"நானும் இரவில் சில நேரங்களில் அழுகிறேன்."

நித்யா பிரமித்தாள். சற்று நேரம் அவனையே பார்த்திருந்துவிட்டு அதன் பின் சிரித்தாள்.

"வருகிறேன்" என்றாள்.

"நித்யா நான் விரும்புவது உன் மனதை."

"அதைத் தனியாகக் கழற்றிக்கொடுத்துவிடவா?"

"அதைதான் இன்னும் இவர்கள் கண்டுபிடிக்கவில்லை. மாலை சந்திக்கலாம். நான் பள்ளி மாடியில் வந்து அழைத்துச் செல்கிறேன்"என்று கூறிச் சென்றான்.

திரும்ப வகுப்பறைக்குச் சென்றபோது நித்யாவின் மனம் எதிர்பார்த்தது. எதிர்பார்ப்பில் ஒரு சந்தோஷம் இருந்தது. இவனும் அவர்களைப் போல் இருக்கலாம்... இல்லை வித்தியாசமானவனாக இருக்கலாம்... எதிர் பார்க்கலாம். அவனுடைய ரொக்கெட் கார் சிறியதாக இருந்தது. ஏறக்குறைய அவன் மடியிலேயே உட்கார வேண்டியிருந்தது. அவனிடம் வாசனை சற்று வேறு விதமாக உள்ளது.

கார் வானத்தில் எவ்விப் பறக்கக் கொஞ்சம் அபாயகரமாகவே செலுத்தினான். நித்யாவின் வயிற்றில் பயம் கவ்விக்கொண்டது. சுகமான பயம். அவனது அறைக்கு வந்து மேலுடையைக் கழற்றி மெலிதான பானமும் கானமும் பருகிப் பெரியபடுக்கையில்அவள் மல்லாந்தபோது ஆத்மா நின்றுகொண்டே அவளைப் பார்த்தான்.

"நீ பிறந்ததே இப்படித்தானா?"

"ஆம், ஏன்?"

"முகம் மாற்றிக்கொள்ளவில்லையா?"

"இல்லை."

அவள் அருகில் உட்கார்ந்து, "சொல்!" என்றான்.

"சிலவேளைகளில் எனக்கு மன அமைதி இல்லை. எத்தனையே கிடைத்தும் எத்தனையோ அடைந்தும்... சில சமயங்களில்தான் எனக்கு அப்படித் தோன்றுகிறது. மனநிலையத்துக்குச் சென்று வந்தேன். அவர்கள் மாத்திரை தந்தார்கள். மாத்திரை முடிந்ததும் மறுபடி மன அமைதி கலைந்தது... நான் இந்த உலகத்தில் சர்வ வசதிகளையும் உள் மனதில் வெறுக்கிறேனோ எனத் தோன்றுகிறது. அதற்கெல்லாம் அப்பால் அல்லது முன்னால் ஒரு துல்லியமான சந்தோஷம் இருக்கிறது என நினைக்கிறேன். என் மனம் அலைகிறது. ஏன் அலைகிறது? ஏன் சில வேளைகளில் அழுகிறேன் என்பது எனக்குப் புலப்படவில்லை... உனக்கு...?"

"எனக்கு உன்னை பார்த்த பின் ...உன்னைப் பார்த்தபின் கொஞ்சம் அது குறைகின்றது..."

"எது?"

"மன அலைச்சல்!"

"உனக்குமா?"

"ஆம் ! நாம் இருவரும் ஒரே அலைவரிசையில் இயங்குகிறோம் என நினைக்கிறேன். பிறக்கும் போது இரசாயனம் ஒரே மாதிரி ஏற்பட்டிருக்க வேண்டும். ஒன்று சொல்லட்டுமா? நீ இயற்கையாகப் பிறந்தவள்... அம்மாவின் சூட்டில் பிறந்தவள். சரிதானே?"

"சரிதான்!"

"உன் மாதிரி அதிகம் பேர்கள் இல்லை இப்போது."

"நான் இரசாயன அறையில் பிறந்திருந்தால் இந்த மாதிரி எல்லாம் எண்ணமாட்டேன் என்கிறாயா?"

"ஆம் நித்யா. உன் வியாதிக்குச் சரியான மருந்து சொல்லட்டுமா?"

"என்ன?"

"சிரிக்கக்கூடாது."

"சிரிக்கவில்லை."

"அதற்கு முன் உடைகளைக் களைந்துவிட்டுச் சற்று தியானம் செய்யேன்."- ஆர்வத்துடன் பரிவுடன் அவள் உடைகளை அவன்...தடுத்தாள்.

"வெட்கப்படவேண்டும் போலிருக்கிறது."

"வெட்கமா? அது சென்ற நூற்றாண்டுடன் போய்விட்டதே. என்ன இருக்கிறது, வெட்கப்பட? எல்லாம் அனாட்டமி... பாரேன்?"

"வேண்டாம், வெட்கப்பட வேண்டும் என்கிற ஆவல் என் வித்தியாசங்களில் ஒன்று."

"விருப்பம் இருக்கிறதல்லவா?"

"எதற்கு?"

"தியானம் செய்தவற்கு?"

"தியானம் என் மனம் முழுவதும் வியாபித்திருக்கும் வெறுமைக்கு வணக்கங்கள்."

"தியானம் என் மனம் முழுவதும் வியாபித்திருக்கும் நித்யாவுக்கு வணக்கங்கள்"

"பொய்! மருந்து சொல்கிறேன் என்கிறாயே சொல்."

"உன் கவலைக்கு மருந்து... தாய்மை!"

"சே!"

"சே, இல்லை. உண்மை இதுதான். நீ தேடுகிற வித்தியாசமான ஒன்று தாய்மை நித்யா. இந்த நூற்றாண்டில் நீங்கள் தளர்த்திக்கொண்டுவிட்ட தாய்மை... தாய்மை என்றால் உண்மையான தாய்மை. உன்னுள் ஒரு விதை பதிந்து அது உன் உள்ளேயே வளர்ந்து உன்னிடமிருந்த பிறந்து உன் மார்பிலேயே விளையாடி அதெல்லாம் இப்போது நீங்களே வேண்டாம் என்று சொல்லி உதறிவிட்ட வேதனைகள் ... சந்தோஷங்கள்... ஆம், வேதனையிலும் சந்தோஷம்... சொல்லு, நித்யா! முடிவெடுத்தால் போதும்! அரசாங்கம் உன்னை கண்ணாடி போல் பாதுகாத்து பரிசோதித்து... அவர்களுக்கு இந்தக் குழந்தைகளும் வேண்டும். கம்பியூட்டரைக் கவனித்துக் கொள்ள, உபகிர கங்களைச் சமாளிக்க, நெடுந்தூர ரொக்கெட்டுகளைச் செலுத்த... எல்லாவற்றுக்கும் இயற்கையாக பிறந்தவர்கள் தேவைப்படுகிறார்கள்... உன் உரத்தில் ஒரு உயர் தரப் பிரஜையை நீ உண்டாக்கி அவனுக்காக வலித்து, அவனுக்காக ரத்தம் தந்து, அவன் உன்னிலிருந்து புறப்பட அதில் நீ காணும் சந்தோஷம் நீ தேடும் துல்லிய சந்தோஷம்... நித்யா இது தான் உண்மை. உன் வெறுமையை நான் நிரப்புகிறேன். நித்யா, இனி வருதப்படாதே. என் அருகில் வா, நானும் நீயும் சேர்ந்து கொள்ளலாம். நம்மைப் பிரிப்பது இனிக் கஷ்டம். அலுக்கும் வரை இருப்போம். அலுக்கவே இல்லை என்றால் நூற்றியிருபது வருஷங்களுக்கும் ஒன்று சேர்ந்தே இருப்போம்... கல்யாணம் என்பது காட்டுமிராண்டித்தனமாக வழக்கமாக இருந்தாலும் இன்றிரவு நாம் ரகசியமாகக் கல்யாணம் செய்து கொள்ளலாம். நாம் தப்பிப் பிறந்தவர்கள்... இந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள் இல்லை... வா என் காதலியே, என் அருகில் வா....!"

நித்யா ஒரு நிமிடம் தயங்கினாள். தீர்மானித்தாள். ஆம்! தாய்மை. தாய்மைதான் எனக்குத் தேவை போலும்... அவன் என்னைப் போன்றவன்தான் இவனுடன் வாழலாம். இவனிடம் குழந்தை பெற்றுக்கொள்ளலாம்.... முடிவெடுத்து விட்டாள்.

"சற்றுநேரம் இரு, குளித்து விட்டு வருகிறேன்" என்றாள். "நானும் வருகிறேன். இருவரும் குளிக்கலாம்."

"வேண்டாம். நீ என் கணவன்."

அவள் உடல் எங்கும் மெலிதான மின்னல்கள் மின்னின. தண்ணீர் பரிவாக அவளை வருட அவள் உள்ளே இப்போதே ஒரு சிறிய நட்சத்திர ஊசிபோல் உணர்ந்தாள். ...

'என்ன முட்டாள் நான்! இது தெரியாமல் எங்கெல்லாமோ அலைந்திருக்கிறேன்! எதையெல்லாமோ தேடியிருக்கிறேன்...!'

"துடைத்துக்கொள்ள வேண்டும்!" என்று கத்தினாள்.

"பக்கத்து அறையில் இருக்கிறது. நான் வரட்டுமா?"

"வேண்டாம்! வேண்டாம்!"

நனைந்த உடலைத் துடைத்துக்கொண்டு.... அவன் உடைகளில் ஒன்றையே அணிய விருப்பப்பட்டு அதை அணியும் போது கீழே விழுந்த கடிதத்தை எடுத்தாள். மடித்திருந்தது. 'ரகசியம்' என்ற எழுத்துக்கள் ஒளிர்ந்தன.

(27ஆம் பக்கம் பார்க்க)



# கலக்கல்

கவிஞான சம்பந்தர்

## தத்துவம்

ஒன்று : ஒன்றுமில்லாமல் ஒன்றுமில்லை
ஒன்றுக்குள் ஒன்றாவது இருக்கிறது.

காதல் : எமனும் ஒருநாள் சாவான்
ஒரு வுமனை நேசித்தால்...

இரண்டு : ஒன்றுக்காய் இரண்டுபடுகின்றனர்
இரண்டுபடுவதனால் ஒன்றுக்கும் ஒன்றுமில்லை.

கை : நீ குடுகுடுவென்று ஓடினாலும் குதித்துப் பாய்ந்தாலும்
பரிசு வாங்குவது நான்தான்!

சாதி : மனிதர்கள் செய்திடும் சாதி
மடமைத்தனத்தின் பாதி.


## இன்பமான வழி...



பட்னாவில் உள்ள ஒரு பெண்ணிடமிருந்து கையெழுத்திடாத கடிதம் ஒன்று பேராசிரியர் ஒருவருக்கு வந்தது. அந்த கடிதத்தில் பின்வருமாறு அப்பெண் கேட்டிருந்தாள்.

''35 வயதுக்கு மேற்பட்ட மணமாகாத-மணம் செய்து கொள்ளவோ இன்னொருவருடன் வாழவோ விரும்பாத-பெண்ணுக்கு குழந்தை வேண்டு மென்றால் செயற்கைக் கருத்தரிப்பு ஒன்றுதான்வழியாக உள்ளது. சமூகம், அதன் கருத்து இவற்றை எல்லாம் பற்றி நான் கவலைப்படவில்லை. விஞ்ஞானம் இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கும்போது மணமாகாத பெண்கள் ஏன் குழந்தைகள் இல்லாமல் இருக்க வேண்டும்?''

பேராசிரியரின் பதில் இதுதான்: ''கருத்தரிப்பது பற்றிய உங்கள் அறிவு போதுமானதாக இல்லை



இல்லாமல் கருத்தரிக்க செயற்கை முறைமட்டும்தான் வழி என்று இல்லை. அதைவிட இன்பமான வழி ஒன்றும் உள்ளது. மேற்கொண்டு தெரிந்து கொள்ள வேண்டுமானால் நேரடியாக வரவும். கட்டணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது. ரகசியம் காக்கப்படும்.''




ஜப்பானில் நடைபெற்று வரும் சர்வதேச மோட்டார் கண்காட்சியில் டொயோட்டா நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மணிக்கு 30 கிலோமீற்றர் ஓடக்கூடிய நாற்காலி வாகனத்தை காணலாம்.







அமெரிக்காவின் நியூயோர்க்கில் 5 ஆவது வருடாந்த சிஎப்லாம்ஸ் பூனை சாம்பியன் போட்டிக்கு தயாராகும் மாவெரிக் என்ற பூனைதான் இது. கணினியை இயக்க தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.




தடைகளைத் தாண்டியும் சிறுவயதுத் திருமணங்கள் நடந்த வண்ணமுள்ளன. பெற்றோர்களின் விருப்பத்தின் பேரில் ஆப்கானிஸ்தானில் 3 வயதே நிரம்பிய தனது மாமியின் மகள் நீமை 7 வயது சுனாம் கைப்பிடித்துள்ளான்.

## ''யார் இவர் தெரிகிறதா?'' 14



### இந்த வாரம் பிரசுரமாகி இருக்கும் உருவம் யாருடையது?


சமாதானத் தூதுவராக செயற்பட்டவர். இவர் யாரெனக் கண்டு பிடித்து இவர் பெயரை தபாலட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதிய அதிஷ்டசாலிகள் ஐவரின் பெயர் விவரம் பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி
''யார் இவர் தெரியுமா?''
85/ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14.

★ ''யார் இவர் தெரிகிறதா?'' இல.11 இற்கான சரியான விடை: ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன். சரியான விடைகளை அனுப்பியோர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் விவரம் வருமாறு:
1. யோசப் டொரிங்டன், மட்டக்களப்பு 2. எஸ்.மோகனதாஸ், முறிகண்டி. 3. ஏ.உமைர், மூதூர் -02.
4. அ.நயனி, யாழ்-பண்டத்தரிப்பு. 5. ஏ.முகம்மட் சப்னி, சம்மாந்துறை.



## பக்கிங் ஒருகலை...

([illegible] ஆம் பக்கத் தொடர்ச்சி)

* சீப்பு, எண்ணெய், மேக்கப் பொருட்களை பொலித்தீன் கவரில் போட்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

லேபிள் ஒட்டுங்கள்

* சூட்கேஸில் பொருட்கள் அனைத்தையும் வைத்தபிறகு கடைசியாக உங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகிய விவரங்களை ஒரு காகிதத்தில் எழுதி சூட்கேஸ் மீது ஒட்டுங்கள். ஒருவேளை, சூட்கேஸ் தொலைந்துபோனாலோ, எங்காவது மாட்டிக்கொண்டாலோ திரும்பப் பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

### ஹாண்ட் பேக்

* ஒரு மீடியம் சைஸ் பையில் டொய்லட் பொருட்களை எடுத்துக்கொள்ளுங்கள்.
* ஹாண்ட் பேக்கில்கமெரா, டிக்கெட், பாஸ்போர்ட், லேசான நகைகளை வைத்துக்கொள்ளுங்கள்.
* பையில் தண்ணீர் போத்தல், உணவுப்பொருட்கள், மருந்து, குளிர்கண்ணாடி, கையேடு புத்தகம் மற்றும் வரைபடம் ஆகியவற்றை வைத்துக்கொள்ளுங்கள்.
* முக்கிய தொலைபேசி எண்கள் மற்றும் முகவரிகளை சிறிய டயரி ஒன்றில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

இந்த ஏற்பாடுகளை எல்லாம் செய்தபிறகு சுற்றுலாவுக்குக் கிளம்பினால் உங்கள் பயணம் வசதியானதாகவும், ரிலாக்ஸ் ஆகவும் இருக்கும்.

## அம்மாவின் செல்லப்பிள்ளையா?...

([illegible] ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கும் விஷயமாக இருந்திருக்கிறது.

### குற்றச்சாட்டு எந்த அளவுக்கு உண்மை?

வீட்டிலுள்ள அனைத்து உறுப்பினர்களின் தேவைகளையும் அறிந்து, அதற்கேற்றால்போல், நடந்துகொள்ளவேண்டிய பொறுப்பு மருமகளுடையதாகிறது. , மகன் மீது அம்மா காட்டுவது மேலோட்டமான அன்பு. ஆனால், மருமகள் தன் கணவன் மீது வைத்திருப்பது உணர்ச்சிபூர்வமானது. அவனுடைய இன்ப துன்பங்களில் அவள்தான் மனப்பூர்வமாக பங்கெடுத்துக்கொள்ளமுடியும்.

மாமியார்களுக்கு ஒருவார்த்தை...

மகனுக்குத் திருமணம் செய்துவைத்துவிட்ட பிறகு, அவர்களுடைய அந்தரங்கத்தில் மூக்கை நுழைக்காதீர்! மருமகளுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. அதேசமயம் தம்பதியர் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

''கல்யாணமாகி ஒருமாசம்தான இருக்கும். திடீர் என்று காலையில் உடம்புக்கு முடியாமல் படுத்துவிட்டேன். காலையில் என் கணவர் சீக்கிரமே எழுந்து காப்பி போட்டுக்கொடுத்தார். அதைப் பார்த்த மாமியார், 'என் பையனுக்கு என்ன சொக்குப்பொடி போட்டு வச்சிருக்கே, காப்பி போட்டுட்டு வந்து கையில கொடுக்கிறானே' என்றார் ஏகத்தாளமாக'' என்று தன் கசப்பு அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டாள் விஜயலட்சுமிஎன்ற பெண்.

மாமியாரின் வார்த்தைகளை 5 ஆண்டுகளுக்குப் பிறகும் மறக்காமல் இருப்பதிலிருந்தே, அவள் மனது எந்தளவுக்கு காயப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளமுடிகிறது.

### பரஸ்பர அன்புக்கு முட்டுக்கட்டை

உண்மையில் மகன்மீது பாசத்தைப் பொழிய கிடைக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் தவறவிட அம்மாக்கள் விரும்புவதில்லை. ஆனால், இதனால் மகனுடைய உள்ளத்தில் அம்மாவால் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது என்பதை ஏனோ அவர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

அதனால்தான், கணவன் - மனைவி இடையிலான பரஸ்பர அன்புக்கு, மாமியார்கள் முட்டுக்கட்டையாகவே இருக்கிறார்கள்.

எனவே, மகனுக்குத் திருமணம் செய்தபிறகு, அவனைக் கவனித்துக் கொள்ளும் முழுப் பொறுப்பை மருமகளிடம் ஒப்படைப்பதுதான் ஒருநல்ல அம்மா செய்யக்கூடிய காரியம் . கணவன் மீது தனக்கு அன்பும், அக்கறையும் உள்ளதை மனைவி வெளிப்படுத்துவதற்கு இதுபோன்று சுதந்திரமாக இயங்குவது அவசியம்.

ஆக, மகனுக்குத் திருமணம் செய்துவைத்த பிறகு, அவன் தன் புதுமனைவியுடன் எப்படிக் குடும்பம் நடத்துகிறான் என்பதைச் சற்று ஒதுங்கி இருந்து பார்ப்பது நல்லது. 'நமது மகன் இப்போது இன்னொருத்தியின் கணவன்' என்ற உணர்வை அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

## மியாமி கரை...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பத்திரிகையில் ஒரு கேலிச் சித்திரம் பிரசுரமாகியிருந்தது. அதில் பொலிஸ் அதிகாரி மெக்டோனால் வரையப்பட்டிருந்தான். துப்பாக்கியின் நுனியில் ஒருபேனையுடன் கதை எழுதுவது போல அவன் காட்சியளித்தான். ஹாலிவூட்டின் புதிய மர்மக் கதை மன்னன் என தலைப்பு இடப்பட்டிருந்தது. ரீட்டா அந்தக் கேலிச்சித்திரத்தை வரைந்திருந்தாள்.

இரண்டுநாட்கள் ஓடிவிட்டன.

ரீட்டா ரயிலில் போய்க்கொண்டிருந்தாள். மியாமி ரெஸ்டோரண்டைக் கடந்து அந்த குகையின் வழியாக ரயில் ஓடிக்கொண்டிருந்தபோது அபாயச்சங்கிலியை இழுத்த அவள், ரயில் மெதுவானதும் சட்டென குதித்து கானகத்தை நோக்கி வேகமாக ஓடினாள்.

ஆனால்,

ஒரு மோட்டார் சைக்கிள் அவளை நோக்கி மின்னலென பறந்துவந்தது. இரு துப்பாக்கி நபர்கள் அதில் இருந்தார்கள்.

(தொடரும்)

## ஒன்பதாவது பெண்

(2[illegible] ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்பு அவள் நரம்பில் துள்ளியது. என் கணவனுக்கு கடிதத்தைப் பிரித்தாள் என்ன? ரகசியம் என்ன ரகசியம்!கணவன்! என்ன அழகான வார்த்தை! அரசாங்கக் கடிதம். அல்ட்ராவிஷன் பிரதி.

உலக அரசாங்கம் ( நாற்பத்தைந்தாம் பகுதி) உள்துறை மக்கள் பகுதி.

உயர் பிரஜைத் திட்டம்....

அன்புள்ள ஆத்மா!

எட்டுப் பெண்களை நீங்கள் அறிந்துகொண்டு அவர்களில் விதைத்தது ஊர்ஜிதப்படுத்தப் பட்டுவிட்டது. இன்னும் ஒரு பெண்ணைக் கர்ப்பப்படுத்திவிட்டால் உங்களுக்குச் செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று திரும்ப ஓர் இலவச பிரயாணச் சீட்டும், அங்கே உலக அரசின் மகத்தான விடுதியில் பதினைந்து தினங்கள் தங்குவதற்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படும். வேட்டை தொடரட்டும்.

அன்புடன்.

.............................

இயக்குனருக்காக

இணைப்பு: நித்யா என்கிற பெண்ணைப் பற்றி நீங்கள் கேட்டிருந்த விவரங்கள் முழுவதும்...

நித்யா அந்தக் கடிதத்தை மடித்துத் தனக்குள் வைத்துக்கொண்டாள். மெதுவாக அறைக்கு வெளியே வந்தாள்.

''வா , என் வித்தியாசமான மனைவியே!'' என்றான் ஆத்மா.

''ஆத்மா , உன்னிடம் டெர்மினல் இருக்கிறதா?''

''இருக்கிறது, ஏன்?''

அவள் மேல் வைத்த கையை உதறினாள்.

''காட்டு, எனக்கு மத்திய இலாகாவுடன் பேசவேண்டும்.''

''புரியவில்லை. நித்யா.''

''புரிந்து விட்டது ஆத்மா.''

மொனிடர் திரையில் அதிகாரியின் முகம் தெரிய,'' என்ன வேண்டும், பெண்ணே?'' என்று சிரித்தார்.

''என் பெயர் நித்யா. என்னை என் வீட்டுக்கு அழைத்துச் செல்ல யாராவது ஒரு பெண்ணை அனுப்ப வேண்டும். என் விருப்பம் இல்லாமல் ஒருவன் என்னைத் தாயாக்க முயற்சி செய்கிறான்.''

''அப்படியா? மிகப் பெரிய குற்றம்! உடனே அனுப்பகிறோம். பதினைந்து செக்கன்களில். எங்கே இருக்கிறாய்...?''

''என்ன நித்யா இது...? நீ விரும்பித்தானே வந்தாய்... இப்போது என் சர்வ சுதந்திரத்தை கெடுத்துவிட்டாயே!''

''புழுவே!'' என்று கடிதத்தை அவன் முகத்தில் எறிந்தாள்.

அமைதிப்படைப் பெண்கள் வந்தபோது நித்யா மெலிதாக விசும்பிக் கொண்டிருந்தாள்.

(நன்றி சுஜாதா)

# ராசி பலன்

22-10-2007 முதல் 28-10-2007

பொ.சந்திரலிங்கம்

## மேடம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை1.

காரிய சித்தியுண்டு. சிறுபிரயாணம் அமையலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் அன்பு பாராட்டுவர். தாய் நலம், தந்தைநலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நிலை பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறாது.

## இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக உணர்வு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1, 2, 3

காரியத்தடை நிலவும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் அதிகரிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமை யலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## சிம்மம்

மகம், பூரம், உத்தராடம் 1

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு அமையலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். புதிய முதலீடுகள் அமையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர்.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள்நிறைவேறாது. நண்பர்கள் விலகி இருப்பர்.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை மெல்ல விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர் . தாய் நலமில்லை. தந்தை நலம். வீட்டில் அமைதி இருக்காது. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது.

## மகரம்

உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம்1,2

காரியத் தடை விலகும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர்.

## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத்தடை இருக்கும். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகியிருப்பர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் அமையும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நல முண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக எண்ணம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. நண்பர்கள் விலகி இருப்பர்.

## மீனம்

பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் தொல்லை தருவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல இருப்பிடம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் அதிகரிக்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.




சக்தி ரி.வியில். கடந்த எட்டு வருடங்களாக ஞாயிறு தோறும் ஒளிபரப்பாகி வரும் இளையகானம் இசைநிகழ்ச்சியின் 14ஆவதுநிகழ்ச்சித் தொடர் ஞாயிறு (21) மாலை 5.30ற்கு ஆரம்பமாகிறது. இம்முறை 'இளையகானம்' நிகழ்ச்சியின் குரல்தேர்வு நாடளாவிய ரீதியாக ரசிகர்களின் நலன்கருதி ஹற்றன், கொழும்பு ஆகிய பிரதேசங்களில் நேரடியாகவே நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.


இணைய வாசல் திறந்து உங்கள் இதய வாசல் தேடி

**www.webtamilradio.com** ஊடாக

தேன்தமிழ் வானொலி

இணையத்தில் தமிழின் சங்கமம்



இணையுங்கள் மகிழுங்கள்

• Skype - wtrchat • wtrchat@yahoo.com • wtrchat@hotma




**HOTEL WESTEERN PVT L**

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfourt Place, Bambalapitiya, C
T.P:+94 11 2507161, +94 11 2507163, +9
Fax:+94 11 4518481 E-mail:info@hotelwe
Webxite:www.hotelwesteen.com

# வன்னிக்கு விநியோகஸ்தர்கள் தேவை




உலகின் முதல் தரமான

ஈஸ்ட் வகைகளை இறக்குமதி செய்து சந்தைப்படுத்துவோர்

DUAL *Acti plus*
டுயல் அக்ரிக் பிளஸ்

# Meezan மீஷான்

BAKERY INGREDIENTS (PVT) LTD.

**61 1/1, Stace Road, Grandpass, Colombo-14. Tel: 2431577-8, Fax: 2431578**
**ibrahimashraff@yahoo.com, Mobile: 0773205405**

*Sole Agents For* DUAL **Yeast With Improver** *From Belgium*